# ஸ்ரீயஜ்ஞபோகலி

BY

V. Muthukrishnaiyer,
*HINDU SASTRABHIMANI,*
**Kalliḍaikurichi, Tinnẹvelly.**

---

**1909.**

*(Copy Right Registered.)*

[illegible]ர்ஜு உள்பட விலை அணா 10.

R 2
N09
149605

ஓம்

தத்ஸத்.

# ஆரியஜனபோதினி.

இஃது

சிரேஷ்டமாலிகா, கல்லிடைக்கும்மி, இந்துசாஸ்திராபிமானி,
என்றபுஸ்தகங்களை இயற்றியவரும்,

மதராஸ் லோகோபகாரி, திருவாரூர் பிர்மஞானபத்திரிகை,
ஆகியவைகளுக்கு நிருபநேயராகவிருந்தவரும்,

மற்ற திராவிடபாஷாபத்திரிகைகளுக்கு
விஷயதானங்கள்செய்பவரும்
ஆகிய

கல்லிடைக்குறிச்சி

## வா. முத்துகிருஷ்ணய்யரவர்களால்

இயற்றப்பட்டு

சில

மித்திரசிகாமணிகளின்வேண்டுகோளின்படி
ஷெயாருடைய ஜேஷ்டகுமாரர்

## M. வாஞ்சேசுவரய்யரால்

சென்னை
வைஜயந்திபிரேஸில்
பதிப்பிக்கப்பட்டது.

முதற்பதிப்பு 1,000 காப்பிகள்.

1909.

(Registered Copy-Right.) வி. பி. சார்ஜுஉள்பட விலை அணு 10.

REGISTERED 1 FEB 1910 OFFICE OF THE ... BOOKS MADRAS

# இந்நூல்

ம-ா-ா-ஸ்ரீ கல்லிடைக்குரிச்சி Hindu Secondary School உபாத்தியாயரும், கீர்வாண வாக்பரிபாலினி ஸபையை ஸ்தாபித்தவர்களில் ஒருவரும், தேசாபிமானியும், மதாபிமானியும், ராஜவிசுவாஸியும், சுதேசமித்திரன் பத்திரிகையின் சொந்தநிருபநேயரும், சாஸ்திரப்பயிற்சியில் நுண்ணறிவுமுள்ள நமது நண்பர் K. R. கிருஷ்ணய்யரவர்களால் பிழையறப் பரிசோதிக்கப்பட்டு இருக்கின்றது.





ஓம் ஸ்ரீ ராமகிருஷ்ணயபரப்பிர்மணேநம:

THIS BOOK

IS MOST AFFECTIONATELY DEDICATED

TO

# M. R. Ry., K. R. Krishna Aiyar Avl.,

*OF KALLIDAIKURICHI*

IN TOKEN OF THE GREAT INTEREST EVINCED BY HIM

IN THE CAUSE OF HINDU RELIGION

AND THE PROPAGATION OF ITS DOCTRINES

BY THE AUTHOR.

# விக்ஞாபனம்.

தேசபக்த சிரோமணிகாள்! இது ஓர் நல்லபுஸ்தகம் என்பதை முற்றும் படித்தவர்கள் நன்ருகத் தெரிந்துகொள்வார்கள். நான் இந்நூலை எழுதி வெளியிட்டதின் கருத்து யாதெனின், நமது இந்து ஜனங்கள் ராஜத்துவேஷிகள் என்ற பெயரைப்பெருமல் ராஜவிச்வாஸிகளாக பவிப்பதோடு தங்கள் நாட்டின் முற்கால தற்காலநிலைமைகளை நன்குணர்ந்து ஐக்கியம் என்றதுவஜம் அறுந்துவிழாதபடி தேசக்ஷேமாபிவிர்த்தியின் பொருட்டு நவீனமுறைகளை அனுஸரித்து வியாபாரம், வியவஸாயம், கைத்தொழில் முதலிய விஷயங்களில் உத்ஸாஹத்துடனும் ஊக்கத்துடனும்தகுந்தஉழைப்பு எடுத்துக்கொண்டு கோழைமனதுடைய ஏழை இந்தியர்களின் வறுமையை அகற்றி அதற்குப் பிரதிபலனுக அவர்களின் அருமையான நன்றியறிதலைப் பெருமையாகப் பாவித்து ஆதரிக்கவேண்டுமென்பதே. ஆதலின், இதைக் கண்ணுறும் கற்றுத் தேர்ந்தகனவான்கள் இதிலுள்ளசொற்குற்றம், பொருட்குற்றம், அக்ஷரலோபம் முதலியவைகளைப் பெரிதாகப் பாராட்டாமல் என் அபிப்ராயங்களின் ஸாராம்சங்களைமட்டும் கிரஹித்துக்கொள்ளவேண்டுமெனக் கோருகின்றேன். அறிஞர்களே! ஸாமான்யமான இந்நூலைச் சிறந்தகிரந்தம்போல் மதித்து ஸந்தோஷத்துடன்பிழைபரிசோதித்துத்தந்த ம-ா-ா-ஸ்ரீ இவ்வூர் Hindu Secondary School உபாத்தியாயரும், கீர்வாணவாக்பரிபாலினிஸபையை ஸ்தாபித்தவர்களில் ஒருவரும், தேசாபிமானியும், மானியும், மதாபிராஜவிசுவாஸியும், சாஸ்திரப்பயிற்சியில் நுண்ணறிவுமுள்ள நமது நண்பர் K. R. கிருஷ்ணய்யரவர்களுக்கு மனப்பூர்வமான அனேக வந்தனங்களை ஸமர்ப்பிக்கின்றேன். ஆரியசிரேஷ்டர்களே! இந்தப்புஸ்தகத்திற்குரிய கையெழுத்துவேலைகளைப் பால்மாருது வெகு சிரத்தையாகச்செய்துவந்த எனதுகுமாரன் வாஞ்சேசுவரனுக்கு ஸர்வவல்லமையுள்ள ஜகத்ரக்ஷகன் திருவருளால் ஸ்திரமான ஸத்புத்தியும், சிரேயஸ்ஸுஂம், தீர்க்காயுஸ்ஸுஂம் ஸித்திக்கவேண்டுமென அந்த மெய்ப்பொருளின் மலரடியை எப்பொழுதும் போற்றுகிறேன்.

வா. மு. கி.
கல்லிடைக்குறிச்சி.
26—4—09.

ஸௌம்யவஹ }
சித்திரைமீ கசவ. }

ஸ்ரீராமஜெயம்.

# ஆரியஜனபோதினி.

ஆதியில் இந்தியாதேசமானது நீதியினால் மிகவும்சிரேஷ்டமான பதவியிலிருந்துவந்தது. ஆகையால் அப்பொழுது பசுபக்ஷி முதலிய ஸகலப்பிராணிகளும் நிர்ப்பயமாய் ஜீவித்துவந்தன. ஜனங்கள் ஈசுவரனுடைய கிருபையைப்பெறுவதற்காக அவருடைய திவ்ய சரணாரவிந்தத்தில் ஸதா தங்களுடையமனஸைச் செலுத்தியிருப்பார்கள். அதனால் அவர்களுக்கு மனமகிழ்ச்சியானது தானாகவே அபிவிர்த்தியாய்க்கொண்டிருந்தது. ஜகதம்பிகையைப் பலவிதங்களாக பிரார்த்தனைசெய்வதுவழக்கம். ஒவ்வொருமாதமும் மும்மாரிபொழிவதற்கு ஒருபொழுதும் தடை ஏற்பட்டதில்லை. ஆனதால் நீர்வளம், நிலவளம், குடிவளம், முதலியவை மிகுந்திருந்தன. ஐயனருளால் உலகமெல்லாம் மிகவும் கோலாஹலமாகவேயிருந்தது. ஸத்தியமும் தர்மமும் நர்த்தனங்கள்செய்தன. அனேக ராஜகன்னிகைகள் அகாத சூரத்துவத்தைக் காட்டியிருக்கின்றார்கள். பெண்மணிகள் ஸௌந்தர சரீரிணிகளாகவும் வித்தியாவதிகளாகவும் வாழ்ந்துவந்தார்கள். அவர்களுடையவாக்குகள் மிகவும் மதுரமாகவிருந்தன. உலகத்தில் சூது, வாது, பொய், களவு, முதலியவைகளைத் தேடியலைந்தாலும் காண முடியாது. பரோபகாரவசனங்கள் எங்கும் கடலோசையைப்போல் கம்பீரமாய் ஒலித்துக்கொண்டிருந்தன. ஒவ்வொரு வீடும் மாட மாளிகை கூடகோபுரங்களால் அலங்கரிக்கப்பட்டிருக்குமாம். பாபமானசெய்கைகள் ஜனங்கள்மனதில் கனவிலும் தோற்றினதில்லை. நமது இந்து தர்மாங்கனைகள் பதிவிரதாசிரோமணிகளாய் வாழ்ந்துவந்தனர். போகபாக்கியங்கள் விசிராந்தியின்பொருட்டு இந்தியா தேசத்தில்வந்து தங்கியிருந்தன. சிலர் ஒவ்வொருஸமயத்தில் இப்பூவுலகை ஸ்வர்க்கமாகநினைத்து மதிமயங்கியிருக்கிறார்கள். எங்கு சென்றாலும் ஸத்குணஸம்பன்னர்களைக்காணலாம். வித்தை, புத்தி, குணம், முதலியவற்றால் துக்கமானது தூரவிலக்கப்பட்டிருந்தது. கலியென்னும்புலியானவன் கிலிகொண்டுஓடினான். ஜன்மஸாபல்யத்

தைவிரும்பினவர்கள் இந்நாட்டை உத்தமக்ஷேத்திரமாகநினைத்திருந்தார்கள். மனோன்மணிகளின் வதனங்களில் எப்பொழுதும் மந்தஹாஸமேயிருந்தது. அரசனானவன் பண்டிதர்களின்கருத்தை நிராக்ஷேபமாகநிறைவேற்றுவான். அவன்கையிலெடுப்பது செங்கோலேயன்றி கொடுங்கோலன்று. பண்டிதரத்னங்கள் ஸபாமத்தியில் சங்கையற்றுச்செல்லுவார்கள். புருஷர்கள் தூங்குமூஞ்சிகளாகவிருப்பதுவழக்கமில்லை. எல்லோரும் வல்லவராகவேயிருப்பார்கள். போர்புரியத்திறமையற்ற புரோகிதவகுப்பாருக்கு சாபானுக்கிரகசாமர்த்தியம் பலமாயிருந்தது. அந்நாளில் தரித்திரத்தைஹதமாக்கும் அரசர்கள் அனேகர் இருந்தார்கள். ராஜமாளிகைகளிலுள்ள நவரத்நவிருக்ஷங்களில் ரமணீயமானரத்நபுஷ்பங்கள் புஷ்பித்துக்கொண்டிருந்தன. ஸாதுஜனங்களின்சைத்தியோபசாரத்தின்பொருட்டு அனேகதாஸதாஸிகள் ஏற்பட்டிருந்தார்கள். சிக்ஷாரக்ஷகளில் சிறிதேனும் நீதிபிசகாது. அதனால் அகாலமரணங்கள்நேரிடுவதும் அத்புதமே. புண்ணியமானது பாபம் என்பதை நிர்தாக்ஷிண்யமாகத்துரத்தியடித்துக்கொண்டிருந்தது. தானமென்பதில் நிதானமில்லை. அறிஞர்களுக்கு அஹிதம்செய்யும் அக்கிரமிகள் அரசனால்தண்டிக்கப்படுவார்கள். சமஸ்தானங்களில் பரீக்ஷிக்கத்தக்க ஆஸ்தானங்கள் அனேகமிருந்தன. வெகுமானமானது தகுமானமாகவேயிருந்தது. அவ்வரசர்களின்கீர்த்திகளானவை இன்னும்கர்ஜித்துக்கொண்டேயிருக்கின்றன. மனுஷ்யனுடையவாஸஸ்தானமானது தேவஸ்தானத்தைப்போல் ஜோதிர்மயமாய்ஜ்வலித்துக்கொண்டிருக்கும். க்ஷாமம்என்பது க்ஷேமமின்றி க்ஷாமமாகவேபோயிற்று. ஸர்வஜனங்களும் ராஜஸபைகளில் ஸந்தோஷமாகவந்து உட்காருவார்கள். அரசர்களிடம் எல்லோரும்ஸம்பாஷிப்பதுஸஹஜம். ஆதலின், அதர்மயுத்தங்களும் அநீதிமுறைகளும் அதிகமாய் ஏற்படஹேதுவில்லை. விப்பிரசிரேஷ்டர்கள் தேவமந்திரத்தில்வேதமழையைவருஷித்துக்கொண்டேயிருப்பார்கள். நாரீரத்நங்கள் ரத்நகசிதமானவீணைகளைத் தங்கள்தங்கள் ஹஸ்தங்களில்வைத்துக்கொண்டு ஸதாதிவ்யநாம ஸங்கீர்த்தனங்களை கானம்செய்வது இயல்பு. சந்திரகாந்தக்கல்லினாற்கட்டப்பட்டமாளிகைகளோ அளவற்றன. அவற்றிலுள்ள உத்தமரத்நாபரணங்கள் எண்ணஎண்ணத்தொலையாது. விதம்விதமானபட்டுபீதாம்பரவஸ்திரங்கள் விலைமதிக்கமுடியாமலிருந்தன. அழகானசோலைகள் அநந்தம். அவைகளில் அக்னிபோன்றதேஜஸ்ஸையுடைய அநேகம்தபோதனர்கள்வஸித்தார்கள். இந்தியாவானது இந்திராதிதேவர்களுக்கு

போகஸ்தானமாக விருந்தது. உத்தமர்களுடைய உத்ஸாகத்தின் பொருட்டு அனேகஉத்தியானவனங்கள் ஸ்தாபிக்கப்பட்டிருந்தன. இந்தியாவில் ஸித்தவித்தியாதரர்களெல்லாம் வஸித்துக்கொண்டிருந் தார்கள். யக்ஷ, கிந்நர, கிம்புருஷ, கருட, கந்தர்வாதிகள், தாஸாநு தாஸர்களாக அடிபணிவார்கள். இந்திரனும் இந்திராணியும் கிரீடை யின்பொருட்டு இந்தியாவுக்கு எத்தனைதடவையோவந்துபோயிருக் கிறார்கள். அத்புதம்! அத்புதம்!! பாரதமாதாவின்மகிமையேமகிமை. இதனால் பலநூற்றாண்டுகளுக்குமுன் நமதுதாய்பூமியாகிய இந்தியா தேசமானது மிகவும் உன்னதமானநிலைமையிலிருந்துவந்ததென்று ஸ்பஷ்டமாகத் தெரியவருகின்றது. மத்தியகாலத்திலுள்ள ஏழை ஜனங்கள் சத்திரம், சாவடி, முதலியவற்றால் கஷ்டமில்லாமல்ஜீவித்து வந்தார்கள். பின்நாளில் இந்தியாவானது "சான்றோரினத்திரு" "சோம்பித்திரியேல்" என்ற வாக்கியங்களின்கருத்துக்களை அதிக மாகஉணர்ந்துநடவாததால், வறுமை, நோய், முதலிய அநர்த்தங்க ளுக்குள்ளாகி கஷ்டமடைந்துவருகின்றது. அன்றியும், இப்பொழுது நம்மவருக்கு உப்புமுதல் கற்பூரம்வரையுள்ள ஸகலஸாமான்களும் பிறருக்கு லாபம்கொடுத்துப்பெறவேண்டியதாகவிருப்பதாலும், உள் நாட்டுவிளைபொருள்கள் தொழிற்படிப்பில்லாக்குறையால் தம்நாடு பஞ்சத்தைத்தஞ்சமடையநேருமென்றுன்னாமல் கப்பலேறி தேசாட னம்செய்யப் புறப்படுவதாலும், முன்நாளில் பெருமையாகவிருந்த இந்நாடானது அருமையாகவிருந்த வறுமையைப் பொறுமையுடன் ஆதரிக்க ஏதுவாயிற்று. ஆகவே, நாட்டுஜனங்கள் பிழைக்கவழி யற்று பசியாலும் பிணியாலும் வருந்துகிறார்கள் என்பதைப்பற்றி நமதுஸகோதரர்களாகிய தேசாபிமானிகள் அடிக்கடி பத்திரிகை கள்வாயிலாகக்கூறிவருவதை யாவரும் அறிந்தேயிருக்கிறோம். முன் பஞ்சாப் கவர்ன்மெண்டாரால் தேசப்பிரஷ்டம் செய்யப்பட்டிருந்த தேசாபிமானியாகிய மிஸ்டர் லாலா லஜபதிராய் என்னும் கனவா னவர் பஞ்சநிவிர்த்தியின் பொருட்டு நிதிசேகரிப்பதற்காகப் பல விடங்களிலும்சென்று கல்லுங்கரையக் கதறுகிறாரென்றதால், ஆரிய நாடானது முன்னிருந்த நிலைமையிலிருக்கவில்லையென்றும், முன் னவரைப்போன்ற பின்னவராகியநாம் ஸுகமாகவாழவேண்டுமானால் நம்ஸகோதரர்களால் செய்யப்படும் சுவதேசஸாமான்களையேவாங்கி உபயோகிக்க வேண்டுமென்றும், உள்ளங்கை நெல்லிக்கனிபோல் நன்றாகத் தெரியவருகிறதல்லவா? ஆகையால் பசுவானது முட்ட வருகிறபொழுது பஞ்சாக்ஷரம் ஓதுகின்றவழக்கத்தை நாம் இந்த

ஸமயத்தில் பின்பற்றலாகாதென்பது சிலருடைய அபிப்பிராயம். தற்சமயம் சென்னைமாகாணத்தில் நடைபெறும் ஸ்வதேசியமுயற்சியானது பங்காளமாகாணத்தைப்போல் நாளொருமேனியும்பொழுதொருவண்ணமுமாக வளர்ந்துவரவேண்டுமானல் ஜனஐக்கியத்திலும் பணப்பெருக்கத்திலும் தர்மசிந்தையிலும் சிறந்தவராகவிளங்குகிற நாட்டுக்கோட்டைசெட்டிகளையொத்ததனவான்கள் சற்றுகடைக்கண்பார்க்கவேண்டும். நகரவட்டைவாஸிகளாகிய மேற்கூறியசெட்டிகள் "திரைகடலோடியும்திரவியந்தேடு" என்ற வாக்கியத்தின் ஸாராம்சங்களை நன்றாகஅறிந்துநடப்பதால் வெளிநாட்டின்பழக்கமும் பொருளீட்டலின்வழியும் அவர்களுக்கு இயற்கைக்குணமாக ஏற்பட்டுவிட்டது. ஆனல்அவர்கள் "அறஞ்செயவிரும்பு" என்னும் ஆதிவாக்கியத்துக்குத் தங்கள்நகரவட்டையை அதிஷ்டானமாக்கிக்கொண்டு கொள்ளையடிக்க விரும்புகிறதுபோல், பொதுநலப்பிரியம், தன்னலமறுப்பு, இவற்றுடன் தேசகாரியங்களில்உழைப்பெடுத்துக்கொண்டு பொருளுதவிசெய்ய முன்வருகின்றார்களில்லை. கனவான்களே! நான் அவர்களைக் கொள்ளைக்காரர்களென்றுசொன்னதற்காக நீங்கள்என்னைக் குறைகூறலாகாது. இந்தச்செட்டிமார்கள் தென்னிந்தியாவிலுள்ள சிவகைங்கரியங்களையெல்லாம் தாங்களேமொத்தமாகக் குத்தகை யெடுத்துக்கொண்டு அந்ததர்மங்களைக் கொள்ளைபோடுவதால் ஏன் அவர்களைக் கொள்ளைக்காரர்களென்று சொல்லக்கூடாது? இதரஜாதியர் அந்தவழிக்குப்போகிறார்களா? இல்லையே. கடவுள் இவர்களை எல்லையற்றதனத்துக்குஅதிபதிகளாகப்படைத்திருப்பதால், அத்தனத்தைப்பாதுகாக்கும்பொருட்டு தர்மத்தால் வேலிகட்டிக்கொள்ளவேண்டியிருக்கின்றது. தனத்துக்குவேலி தர்மம்என்பது நம்மவரின் பிராசீனசுதேசியக்கொள்கைகளில் ஒன்றாதலின், இவர்கள் கோவிலைக்கட்டுகிறதும் குளத்தைவெட்டுகிறதுமாக விருக்கிறார்கள். ஸ்ரீமான்களே! இந்ததர்மங்கள் மிகவும்சிறந்தவையென்பதில் ஆக்ஷேபமில்லை. ஆயினும் காலதேசவர்த்தமானங்களுக்குஇசைந்தபடி வங்காளம் கைத்தொழில் நிர்வாகஸபையாரைப்போல், நகரவட்டைவாஸிகளாகியநீங்களும் சென்னைராஜதானியின் இந்தியக்கைத்தொழில் அபிவிர்த்திவிஷயத்தில் சற்று தலையிட்டுக்கொள்ளவேண்டும். இந்தக்கர்மங்களும் கோவில்குளங்களுக்குரியதர்மங்களைப்போல் முக்கியமானதால், நாம் மனஉறுதியோடும் ஊக்கத்தோடும் உழைக்கக்கடமைப்பட்டிருக்கின்றோம். பம்பாய்மாகாணவாஸிகள் பிரஸ்தாபவிஷயத்தில் பலமான முயற்சிகள்செய்து வருகிறார்கள்என்பதை நான் உங்களுக்குச்

சொல்லவேண்டியதில்லை. நீங்களே அறிந்திருப்பீர்கள். கல்கத்தா வாஸிகளாகிய தேசாபிமானிகள் நம்நாட்டில் முன்போற் செல்வம் தழைத்தோங்கும்பொருட்டு, இந்தியர்களிற்பலரை இங்கிலண்டு முதலியவிடங்களுக்கனுப்பி தொழிற்கல்விக்குரியபடிப்புகளைக் கற்றுவரச் செய்கிறார்கள். இப்பொழுது நமதுகைத்தொழிலிருக்கிற ஈனஸ்திதியையோசிக்கிறபொழுது வெளியேசொல்ல வெட்கமாகவிருக்கிறது. இந்நாளில் ஸகலவேலைகளும் இயந்திரங்களின்மூலமாக நடந்துகொண்டுவருவதால், முந்நாளிலுள்ளகைத்தொழில்கள் மறைந்துபோனவிடம்தெரியவில்லை. இதனால் இருக்கிறதொழிலாளிகள் தொழில்முறையைச்செவ்வையாயறியாமலும் தேவையுள்ளபொருளுதவிகிடையாமலும் பரிதபிக்கிறாரெனவிளங்கவில்லையா? ஆதலின், தங்களைப்போன்ற ஸ்ரீமான்கள் வெளிநாடுகளில்நடைபெறும்இயந்திரங்களையும் அவற்றால்கிடைக்கிறலாபத்தையும் போய்பார்வையிடவேண்டியதவசியம். ஜனோபகாரவழிகளில் தலையிடுகிறதில்லையென்ற வீரவிரதத்தைநாம் இன்னமும் அநுஷ்டித்துவருவோமானால், தொழில் முறைபோன வழியேநாடும், (பெயரும்) அதன்மக்களாகியஜனங்களும், (மதமும்) ஜனங்களின் ஸகோதரர்களாகியபத்திராசிரியர்களும், மதாபிமானிகளும், ஜனாபிமானிகளும், சட்டசாஸ்திரநிபுணர்களும், கிரந்தகர்த்தாக்களும், பிரஸங்கம்செய்யும்நாவலர்களும், போகநேருமென்பதுநிச்சயம். அதற்கிடமின்றி, இந்தியாவின்பழையசெல்வத்தையும், கீர்த்தியையும் பெறவேண்டுமானால்,இந்துஜனங்களனைவரும்ஏகமனதோடு ஸ்வதேசியக்கோட்பாட்டைக் கைப்பற்றவேண்டுமென்றநோக்கத்தை பெரியபட்டணங்களிலும் சிறியகிராமங்களிலும் பரவச்செய்யவேண்டும். இதனால்நாம் பிறருக்குகுற்றங்குறைகளையாவது அபிப்பிராயபேதங்களையாவது உண்டுபண்ணவேண்டுமென்ற நோக்கமுடையவராகோம். நம்மவர் அத்தனைபொறுப்பேறினஉயர்ந்தஅந்தஸ்தையும் பயிர்ச்சியையும் பெற்றிருப்பவருமல்லர். நாம் ஸாமான்யபுத்தியுடன் தேசநன்மைகளையுணர்ந்து ஜாதீயவிருப்பங்களையும் ஆசைகளையும் நிறைவேற்றமுயலுவதால், நம்மவரின்முயற்சியானது சட்டத்திற்கு விரோதமாகமாட்டாது. நமதுமாட்சிமைதங்கிய வேல்ஸ் இளவாசரவர்கள் இந்துஜனங்களின் ராஜபக்தியைப்பற்றி வியந்து பேசியிருப்பதால், இறக்கும்தருவாயில் இருக்கிறஇந்நாட்டின்தொழிற்கல்வியை அபிவிர்த்திசெய்யவேண்டியவிஷயத்தில் அவரும்கூட அதிகஊக்கம் காட்டுவாரென்பதுதிண்ணம். 1902-ம்வருஷத்தில் ஆமதாபாத்தில் பொருள்காக்ஷி நடத்தப்பட்டபொழுது பிரஸிடெண்டாக விருந்த

பரோடா மகாராஜா அவர்கள் ஜெர்மனியைப்போல் இந்தியாவும் வியாபாரப்பெருமைக்குத் தன்னை ஆதாரமாக்கிக்கொள்ளவேண்டுமானல், பொதுப்படிப்பையும், தொழிற்படிப்பையும், விருத்திசெய்துகொள்ளவேண்டுமென்று சொல்லியிருக்கிறார். இவர் தமதுபிரஜைகளின் செல்வப்பெருக்கின்பொருட்டு அரிதான பெரியகாரியங்களைச் செய்துகொண்டுவருவதால், தொழிற்படிப்பால் அவர் அடைந்திருக்கிறஞானத்தை மெச்சாதவர்கள் இல்லை. அதுபோல் நமது கவர்ன்மெண்டும் குறித்தபிரசினத்தை ஊக்கத்துடனும் உறுதியுடனும் கையாளுமேயானல், வறுமையென்னும்பேயால்பீடிக்கப்படுகிற இந்தியாவானது மிகவிரைவில் அதைச் சிறுமையடையச்செய்துவிடும். அதனல் இந்துஜனங்கள் “யதாராஜா ததாபிரஜா” என்றநியாயத்தைத்தழுவிநடக்க முயலுவார்கள். பரோடாஸமஸ்தானத்தில் குடிகளின் வறுமையைத் துவம்ஸம்செய்யும்பொருட்டு பலவிடங்களில் கைத்தொழிற்சாலைகள் ஏற்படுத்தப்பட்டிருக்கிறதுமன்றி, நெடுநாட்களுக்குமுன்னமே ஆண், பெண், அடங்கலும் கட்டாயமாகப் படித்துத்தீரவேண்டுமென்று சமஸ்தானச்செலவின்பேரில் அனேகம்பள்ளிக்கூடங்களும் ஸ்தாபிதம் செய்யப்பட்டிருக்கின்றன. அன்றியும், பால்யவிவாஹம் மிகுந்ததுன்பத்திற்கும் நாட்டில் ஒந்திபோன்றபிள்ளைகள்பிறப்பதற்கும் காரணமாகிறதென்றெண்ணி, அதைவிலக்கத்தக்கவிதியும் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றது. அந்த இராஜப்பிரதாபனுகிய புண்ணியவான் இதுபோல் இன்னும் எத்தனையோ நன்மைகள் செய்துகொண்டுவருவதால், அவரிடத்தில் ஜனங்களுக்கு அளவிறந்தவிசுவாஸம் ஜனித்திருப்பதுமன்றி, தாயினிடத்தில் மகனுக்கும், நாயகனிடத்தில் நாயகிக்கும், குருவினிடத்தில் சிஷ்யனுக்கும், தேவரிடத்தில் மனுஷ்யருக்கும், இருக்கவேண்டியபணிதலும் ஏற்படக்காரணமாயிற்று. ஆதலின் இந்துஜனங்கள் “நாவிஷ்ணு: பிருதிவீபதி:” என்ற மேலானவாக்கியத்தின் சிறப்பைஉணர்ந்து ராஜாக்களிடத்தில் மிகுந்தவிசுவாஸம் பாராட்டிவருகிறார்கள். உதாரணமாக முந்நாளில் அரசாட்சிசெய்த ராமன், கிருஷ்ணன், முதலிய அரசர்களின்மீதுள்ளவிசுவாஸம் மறவாதிருக்க, ஜனங்கள் தங்கள் தங்கள் வாஸஸ்தலங்களில் அவர் பெயரால் ஆலயங்களை நிர்மாணித்துத் தொண்டுபுரிந்துவருவதுபோல், 1903-ம் வருஷம் ஜனவரிமாசம் 1-ம் தேதியில் நமது பூமண்டலேசுவரனுகிய எட்வர்ட் சக்கிரவர்த்தி அவர்களுக்கு டில்லியில்வைத்து இந்தியாசக்கிரவர்த்திபட்டம் அளிக்கும்பொழுது, இவர்பெயரால் ஒவ்வொருவிடத்திலும் பாடசாலை, புஸ்

தகசாலை, வர்த்தகசாலை, முதலியவை ஏற்படுத்தப்பட்டிருக்கின்றது மன்றி, ஒவ்வொருஇடத்திலும் சக்கிரவர்த்திஅவர்களின் குணவிசேஷங்களைப்பற்றி செய்யப்போகிற உபந்நியாஸங்களைக்கேட்டானந்திக்கும்பொருட்டு கும்பல்கும்பலாக இந்து ஸ்திரீ புருஷர்கள் ஸர்வாபரணபூஷிதராய் குதூஹலமனஸுடன் கூடியிருந்ததைப்பார்த்துக்கொள்ளலாம். அன்றியும், தென்னிந்தியாவின் சிலபாகங்களில் பிராமணர்களுடையவீட்டில்நடக்கிற விவாஹாதிசுபகாரியங்களில் ஆசாரியனுக்கு ஸம்பாவனையளிப்பதுபோல், அரசனுக்குத் தாம்பூலம் கொடுப்பதும் வழக்கம். இவ்வழக்கம் ஏற்பட்டது இன்றுநேற்றல்ல. வெகுநாளுக்குமுன்னமே ஸ்தாபிதமாயிருக்கின்றது. ஆகவே, இந்து ஜனங்கள் தங்கள்மதத்திற்குரியநூலாராய்ச்சியினால் அரசனும் தெய்வமும் ஒன்று என்றதை நம்பியிருக்கிறார்களென்று தீர்மானமாகின்றது. ஈசுவரன் மனோவாக்குக்காயங்களால் அறியப்படாதவரானதால், தன்னால் சிருஷ்டிக்கப்பட்ட உலகத்தைரக்ஷிக்கும்வண்ணம் தனக்கு பிரதிநிதியாக அரசனைநியமித்திருக்கிறார் என்பது இந்து ஜன அபிப்பிராயம். ஆகையாலன்றோ, சிலவருடங்களுக்குமுன் கல்கத்தாவில் வேல்ஸ் இளவரசர் விஜயம்செய்திருந்தபொழுது, அங்கு பங்காளப் பிரிவினையால் பயங்கரமானகலகம்நேரிட்டு அக்கலகத்தின் காரியமாக இந்துக்களின் கடைகளெல்லாம் மூடப்பட்டிருந்தாலும், அவர்கள் தங்கள் அனுதாபத்தைப்பெரிதாகநினையாமல் இளவரசரவர்களை ஆரவாரத்துடனும் விசுவாஸத்துடனும் வரவேற்கக் காரணமாயிற்று. ஆகவே, இந்துஜனங்கள் இதுவரை ராஜபக்தர்களாகவிருந்ததுபோல் நாளையுமிருக்கவேண்டுமென்பது ஆரியமதத்தின் கோட்பாடாகவிருக்கின்றது. நிற்க, முற்காலத்திலுள்ள ஆரியவேந்தர்கள் இம்மை, மறுமை, பிரயோஜனங்களாகிற தங்கள்கண்களைப் பாபம் என்னும் தூசி பற்றாதபடி நீதிஎன்றகண்ணாடியால் காத்துக்கொண்டார்கள் என்றதால், விதிவிலக்குரூபமான தங்களுக்குரிய கடமைகள் இன்னதென்பதைச் சிறந்தமதியூகிகளான மந்திரிகளால் நன்குணர்ந்து செங்கோல்செலுத்திவந்தனரென்பது கரதலகமலம்போல் விளங்குகின்றது. ஆனால் ஹஸ்தினாபுரத்திற்கிறைவனான அந்தகன் புதல்வன்மட்டும் அக்கண்ணாடியால்கண்ணைரக்ஷித்துக்கொள்ளாமல் அபகீர்த்திக்காளாயினன். இம்மன்னன் "மன்னருக்கழகு செங்கோன் முறைமை" என்ற உலகநீதியைக் கிஞ்சித்தும் உணராதவனாகையால், இந்தியர்களுக்கு இயற்கையாயுள்ள இராஜபக்தியானது அவன்விஷயத்தில் ஜனிக்க ஹேதுவில்லை. அந்த துரியோதனராஜன் கொடுங்

சோல் மன்னனுதலின்பெரியோர்களேயும் பிரஜைகளேயும் லக்ஷியம் செய்யாமல் நடந்துவந்தான். ஆகையால் தான்முன் குருக்ஷேத்திரத்தில்நிகழ்ந்த யுத்தத்தில், அனேக ராஜவம்சங்கள் அழிந்துபோகக் காரணமாயிற்று. அந்தகுருக்ஷேத்திரயுத்தத்தின்பொருட்டு லீலாமாநுஷவிக்கிரகனுக அவதரித்த ஸ்ரீகிருஷ்ணபரமாத்மா துரியோதனராஜனுக்குப் பலவிதமாக நற்புத்திகள்எடுத்தோதியும் அவனது காலவேற்றுமையால் அவைகளொன்றும் அவனுக்குஏற்கவில்லை. ஆனால் இந்தக்கண்ணபிரானுடைய திருவாய்மொழியை நாஸ்திகஜனங்கள் நம்பமாட்டார்கள். அவர்கள் கடவுள் ஒருவர்உண்டு என்பதை இன்னும்ஸம்மதியாமலேயிருக்கிறார்கள். அதனுல் கடவுள் இல்லாமலே போய்விடுவாரா? போகமாட்டார். கண்ணுக்குத் தென்படாதவிண்மீன்களே தூரதிருஷ்டிக்கண்ணுடியால்காண்பதுபோல், சாஸ்திரங்களின்உதவியால் கடவுளின்இருப்பை அறியமுடியாதா? அறியமுடியும். எதிரிலுள்ளபொருள்தெரியாதது கண்ணின்தோஷமேயன்றி பொருளின்குறைவா? பொருளின்குறைவன்று. பஞ்சேந்திரியங்களில்லாவிட்டால் நாம் இப்பூமியிலுள்ள வஸ்துக்களேயனுபவிக்கமுடியுமா? அனுபவிக்கமுடியாது. ஏதேனும்ஓர் இந்திரியத்தின்சக்தி குறைந்தால் அதனுல் அடையக்கூடியசுகம் கெட்டுப்போகாதா? கெட்டுப்போகும். ஜலுப்புப்பிடித்தவன் புஷ்பத்தின் வாஸனையை அறிகின்றுன்? அறிகிறதில்லை. அதனுல் புஷ்பத்திற்குவாஸனேயில்லையென்றுஸாதிக்கலாமா? கூடாது. செவிடன் ஸங்கீதத்தின்தொனியைக்கேட்கமுடியுமா? கேட்கமுடியாது. அதனுல் ஸங்கீதத்தில் இன்பமில்லையென்றுசொல்லலாமா? சொல்லக்கூடாது. நாக்கில் ஒருவிதமான தடிப்புள்ளவர்களுக்கு பதார்த்தங்களின்ருசிதெரியுமா? தெரியாது. அதுபோல் ஞானக்கண்ணில்லாதவருக்குக் கடவுளும் புலப்படுகிறதில்லை. இவ்வளவு அறியாதவர்களும் இவ்வுலகத்தில் நாஸ்திகரெனப்பெயர்பூண்டு வஸித்துவருகிறார்கள். இவர்கள் கடவுளே நிந்திக்கிறவர்களாகவிருந்தாலும் கடவுள் அவர்களேயும்அன்புபாராட்டி ஆதரியாமலிருக்கவில்லை. நிற்க, முன் ஜராஸந்தன் நரமேதம்செய்யும்பொருட்டு அநேகஇராஜாக்களேப்பிடித்துச் சிறையில் அடைத்துவைத்திருந்தான். அப்பொழுது ஸ்ரீகிருஷ்ணமூர்த்தியானவர் பீமார்ச்சுனர்களால் அந்த ஜராஸந்தனைக்கொல்லும்படிசெய்வித்து, சிறையிலிருந்தஇராஜாக்களே மீட்டிவைத்திருக்கிறார். உலகத்தில் ஒருவன் கொலே, களவு, காமம், சூது, வாது, முதலான அக்கிரமங்களேச்செய்தால், அவனே அரசன் தண்டிக்கவேண்டியதுகடமை.

அவ்வரசனே சூது, வாது, முதலிய அக்கிரமங்களுக்கு பாத்தியப் பட்டால் அவனைத்தண்டிப்பவர் யார்? வேலி பயிருக்குஆதாரம். அவ் வேலிதானே பயிரைமேய்ந்தால் விளையுமாறுஎப்படி? அரசனாகவிருந் தால் பெருமை, கீர்த்தி, இன்பம், முதலானகுணங்களைப் பெற்றிருக்க வேண்டும். உலகாதிபனுக்கு நடுவுநிலைமையும், நன்னீதியும், ஸத் தியவாக்கும், இருக்கவேண்டிய தவசியம். ஆதலால் தனக்குரிய தர்மமானகர்மத்தில் வர்மம்வைப்பது தீதுஎன்று உணரவேண்டும். இடம், பொருள், ஏவல், தெரியாதவன் இறைவனாகான். ஜராஸந் தனுக்கு சாஸ்திரங்களின் உண்மைதெரியமாட்டாது. ஆகையால் அவன் கீசகனைப்போல் அற்பமான இம்மைப்பிரயோஜனங்களைக் கருதி உலகத்தைஉபத்திரவிக்கத்தொடங்கி தனதுவாழ்நாளை வீணாக மாய்த்துக்கொண்டான். திரிலோகாதிபத்தியம்செய்த மகாபராக்கி ரமசாலியான இலங்கேசுவரன் வல்லவனுக்குவல்லவன் வையகத்தில் உண்டு என்பதை வெகுநாளாகத்தெரிந்துகொள்ளாமலேயிருந்தான். ஆதலின், அவனுக்கு நாளுக்குநாள் கர்வம்அதிகரித்துக்கொண்டுவந் தது. ஒருஸமயத்தில் அவன் திக்விஜயத்திற்காகப்புறப்பட்டு சுவேத தீபத்தின் அருகில்போகும்பொழுது, தாபம்ஸகிக்கமுடியாமல் கூட வந்தராக்ஷஸர்கள்யாவரும் ஓடிப்போய்விட, தான்மாத்திரம் அசை யாமல்நின்ற புஷ்பகத்திலிருந்துஇறங்கி, எவரும்அறியாமல் தனிமை யாய் அத்தீவினுள்ளேபுகுந்தான். அங்கே எல்லோரும் ஸ்திரீகளா யிருக்கக்கண்டு, தனதுவைபவங்களைச்சொல்லி தான்போர்புரியவந் திருக்கிறதாக அங்குள்ள புருஷருக்கு அறிவிக்கும்படி பெண்களிடம் ஆக்ஞாபித்தான். அப்பொழுது அவர்களுள் ஒருத்தி இராவணனை ஒரு பூச்சியைத் தூக்கிஎறிவதுபோல் தூக்கிஎறிய, மற்றொருத்தி அவனதுமுதுகில் தன்கையால்தட்ட, இப்படிப் பந்தடிப்பதுபோல் இராவணனைஸ்திரீகளே அங்குமிங்கும் தட்டிக்கொட்டிவிளையாடின தால் கஷ்டம்பொறுக்கமுடியாதஇராவணன் ஸ்திரீகளே இவ்வளவு பலமுடையவர்களாகவிருந்தால், புருஷர்கள் எப்படியிருக்கமாட்டார் கள் என்றெண்ணிக் கர்வமடங்கி, வெட்கித் தான்வந்தவழியைப்பார்த் துக்கொண்டு ஓடிப்போயினன். இந்தஇராவணன் தனக்குத்தீர்க்க மாகிய ஆயுள்வேண்டுமென்றும், தான் எல்லாரையும்விட பலவானாக விருக்கவேண்டுமென்றும், தனக்கு தேவர்முதலிய விசேஷஜாதியா ராலும் கொடியமிருகங்களாலும் மரணம்ஸம்பவிக்கக்கூடாதென்றும், பிர்மனிடம்வரமும்பெற்றிருந்தான். ஆனால் மனிதர்களும் குரங்குக ளும் ராக்ஷஸர்களுக்குஆஹாரமாயிருப்பதால் அவர்களால் மரணம்

நேரிடலாகாதென்று கேட்கவில்லை. அவனுடையதம்பி விபீஷணர் மகாத்மாவானபடியால், பிர்மதேவனிடம் இம்மாதிரியானவரங்களைக் கேட்காமல் தனக்கு தர்மத்திலேயே புத்திசெல்லவேண்டுமென்றும், பிறருடையஸகாயமன்னியில் பிர்மக்ஞானம் ஸித்திக்கவேண்டுமென்றும் பிரார்த்தித்துக்கொண்டார். இதனுல் துஷ்டர்ஜனித்தகுலத்தில் சிஷ்டர்ஜனிப்பதும் ஸகஜமெனத் தெரியவருகின்றது. ஆனுல் சிஷ்டர்குலத்தில் துஷ்டர்ஜனிப்பதும்உண்டு. சென்றகாலத்து மகமதியஅரசாட்சிகளில் அக்பர்பாக்ஷாவின் அரசியல்விஷயங்களையும் அவுரங்கஸீபின் துரைத்தனமுறைகளையும் தெரிந்தவர்கள் அக்பரைச் செங்கோல்மன்னனென்றும் அவுரங்கஸீபைக் கொடுங்கோல்அரசனென்றும் கூறுவார்கள். அக்பரானவர் அவுரங்கஸீபைப்போல் நமது மதவிஷயங்களில் தலையிட்டுக்கொண்டு பிரஜைகளைத்துன்பப்படுத்தினதில்லை. அன்றியும், அவர் கீதாசாஸ்திரநியாயப்படி தமது அல்லாவாகிய ஒரேகடவுளையே ஸகலமதஸ்தர்களும் வெவ்வேறுரூபங்களாக பாவித்து ஆராதித்துவருகிறுர்கள் என்ற உண்மையை உண்மையாகவேஅறிந்துகொண்டவர். இக்கோமான் முற்காலத்து ராக்ஷஸராஜாக்களைப்போல் ஸ்வஜாதிகளுக்கு ஒருவிதமானசட்டதிட்டங்களும், விஜாதிகளுக்கு ஒருவிதமானசட்டதிட்டங்களும், ஏற்படுத்திக்கொள்ளவிரும்பாததால் அவருடைய கீர்த்தியானது பல்லாண்டு பல்லாண்டாய் வாழ்ந்திருக்கக் காரணமாயிற்று. நிற்க, மிஸ்டர், பி. என். போஸ் என்னும் கனவானுனவர் சென்ற 1906-ம்வருஷத்து கல்கத்தா தொழில்ஆலோசனைஸங்கத்தில்குறித்த கைத்தொழில்விஷயத்தைப்பற்றிப் பேசிவருகிறபொழுது, மனிதர்களுக்கு நாகரிகம் மட்டும் முதிர்ச்சியடைந்திருக்கிறதேதவிர ஸ்வபாவமானது 3000 - வருஷங்களுக்கு முன்னிருந்தமாதிரியாகவே இப்பொழுதும்இருந்துவருகிறதென்றும், அதை ஆசியாகண்டவாஸிகளாகியநாம் நன்குணர்ந்துநடப்போமானுல், நமக்கு வீணுனபணச்செலவும் காலதாமஸமும் மெய்வருத்தமுமன்றி நமதுகாரியங்களை இலகுவாய்முடித்துக்கொள்ளலாமென்றும், தொழிற்கல்வியானது நம்மால் அலக்ஷியம்செய்யப்பட்டுவந்ததென்றும், அதன் அபிவிர்த்தியின்பொருட்டு இதற்குமுன்னமே கவர்ன்மெண்டுக்குப் பலமுறையும் ஜனங்களால் அறிவிக்கப்பட்டிருக்கிறதாயும், அந்நோக்கத்தைப் பூர்த்திசெய்துகொள்ளாத பிழையானது ஜனங்களைப்பற்றின தாகுமென்றும், பின்னுட்களில் தொழில்முயற்சியானது அளவற்றநன்மைகளை விளைவிக்கப்போகிறதென்றும், அதை நினைக்கிறபொழுது தனக்குஆனந்தமாகவிருக்கிற

தாயும் கூறியிருக்கின்ருர். அன்றியும் நம்முடைய முயற்சிகளில் நேரிடக்கூடியஇடையூறுகளைத் தான் நன்ருய்அறிந்திருக்கிறதாயும், நம்மைப்பிடித்துவருத்தும்கொடியவறுமையினுலும், சாஸ்திரக்கல்வி, தொழிற்கல்வி முதலியவற்றிலுள்ளபயிற்சிக்குறைவினுலும், நமது ஜாதிஆசாரங்களினுலும், நமது நாகரிகத்தினுலும், நாம்எடுத்த எக் காரியத்தையும் சரியாய்நடத்தக்கூடியசக்தி நமக்குஇல்லாமல்போய் விடுகிறதென்றும், ஆனல் மேற்கூறியஎல்லாஇடையூறுகளையும் நமது விடாமுயற்சியினுலும் ஊக்கத்தினுலும்வென்று நம்காரியங்கள்முற் றும் பலன்அடையுமாறு செய்யும்வல்லமை நம்மிடமில்லாமலிருக்க வில்லையென்றும் கூறுகிருர். ஆதலின், அவ்விதஊக்கமானது இப்பொ ழுது கிளம்பியிருப்பதுபோல் தோன்றுவதால் ஷெசங்கத்தில் அக் கிராஸனம்வகித்த ஆனரெபில் மிஸ்டர் வித்தல்தாஸ் தாமோதர் தாக் கர்ஸே அவர்களின் அபிப்பிராயப்படி நமதுநாட்டிலுள்ள பணக்கா ரர்களாகிய ஸ்ரீமான்கள் தங்களுக்கு மிச்சமாகிறபணத்தை தொழி லின்முயற்சிகளில்போடத் துணியவேண்டியது அவசியம். அன்றேல், அக்கனிவான்கூறுகிறபடி இந்தியாவானது இப்பொழுது தண்டமி ருத்துவருவதுபோல் எப்பொழுதும் அனவசியமும் அனிஷ்டமு மான நஷ்டங்களைப் பொறுக்கச் சுமதலையுடையதாகவேஇருக்கும். ஜப்பான்தேசமானது சிலவருடங்களுக்குமுன் பிரிட்டிஷ் இந்தியா வைப்போல் வறுமையினுலும், பயிற்சியின்மையினுலும், மிகவும் தாழ்ந்தநிலைமையிலிருந்துவந்தது. அந்நாட்டிலுள்ள நுண்ணறிவா ளர்களின் தீவிரமானதொழில்முயற்சியினுலும் ஸ்வயாதீனம்என்னும் பெரும்பேற்றினுலும் இப்பொழுது அது ஸகலவளங்களையும்பெற் றுச் செழிப்பானபொருளையடைந்திருக்கிறதாக அதன்தேசசரித்தி ரத்தால்தெரியவருகின்றது. ஆகையால் தொழில்மூலமாகப் பெரு மையடைந்திருக்கிறபாதேசங்களின்அனுபவங்களை நாம் லக்ஷியமாக வைத்துக்கொண்டு பயன்பெற வழிபார்க்கவேண்டுமொனதால், நமது நகரவட்டைக்காராகிய நாட்டுக்கோட்டைசெட்டியார்களும் மற்று முள்ளகனவான்களாகியதனவான்களும் நாட்டின்விஷயங்களை நன்க றிந்தவரும் மதிப்பேறப்பெற்றவருமான திருவாங்கூர் கீர்த்திமான் மிஸ்டர் திவான் பகதூர் கிருஷ்ணஸ்வாமிராவ், மிஸ்டர். V. கிருஷ்ண ஸ்வாமி அய்யர், B.A., B.L., மிஸ்டர். ஜி. சுப்பிரமணிய அய்யர், B. A. முதலியவர்களைப்போன்ற பரோபகாரிகளைக் கூட்டுறவாகச் சேர்த்துக்கொண்டு பரோடாசமஸ்தானத்தைப்போல் சென்னை ராஜ தானியிலுள்ள ஒவ்வொருஜில்லாக்களிலும் தொழிற்படிப்பைக்கற்

றுக்கொடுக்கும்படியான பாடசாலைகளை ஸ்தாபனம்செய்து அதற்குப் பிரதிபலனாகக் கூழைக்குடிக்கிறகோழைமனதுடைய ஏழைஇந்தியர்களின் அருமையானநன்றியறிதலைப் பெருமையாகபாவித்து ஆதரிக்கவேண்டும். ஆனால், கனவான்களே! தென்னாட்டின்பெண்மணிகள் குறத்தி பிள்ளைப்பெறக் குறவன் காயங்குடித்தானென்று வேடிக்கையாக ஓர்பழமொழிசொல்லுகிறதுண்டு. அதுபோல் மூன்றுகோடியேஎண்பதுலக்ஷம்ஜனங்களின் அன்னையாகிய சென்னையின்நன்மையின்பொருட்டு கனதனபூஜிதராகியநீங்கள் தக்கசிரமம் எடுத்துக் கொள்ளவேண்டியிருக்கின்றது. இது ஜீவகாருண்யமுள்ளஜனோபகாரிகளுக்கு ஸகஜமாகவிருப்பதால்தான் நமதுநாட்டின்கண் நாஷனல்பண்டும், வேதசாஸ்திரபாடசாலைகளும், ஆலயதர்மங்களும், ஸத்திராதிமடங்களும், ஜாதீயவிருப்பத்தைநிறைவேற்றக்கூடிய மதாசாரங்களுக்குரிய நன்னூல்களும், தேசாபிமானத்தைப்போதிக்கின்ற சிறந்த சுதேசப் பத்திரிகைகளும், ஸநாதனதர்மமெனவழங்கும் வேதாந்த ஸித்தாந்தங்களும், நடைபெற்றுவரக்காரணமாகின்றது. ஜனோபகாரிகள் இந்தியாதேசத்தின் நன்மையின்பொருட்டு எவ்வளவோ அக்கரையாகப்பாடுபடுகிறார்கள். ஆயினும் ஜனங்கள் அவைகளை இன்னும் உணரும்காலம்ஏற்படவில்லை. அதன்காரணமானது சென்ற 1906-ம்வருஷத்தில் திருநெல்வேலியில்நிகழ்ந்த கான்பரன்ஸில் மிஸ்டர் V. கிருஷ்ணஸ்வாமிஅய்யரவர்களால் நம்மவருக்கு அறிவிக்கப்பட்டிருக்கின்றது. அவர் காங்கிரஸானது ஒருபெரும் ஆரவாரகோலத்தைப்போலவும், தமாஷைப்போலவும், தோற்றுவதால் வெகுதொலையிலிருந்து ஜனங்கள் அதைப்பார்க்க வருகிறார்களென்றும், அவர்கள் மற்றக்காலங்களிற் செய்யவேண்டியவேலைகளுக்கு இது தூண்டுகோலாகவிருக்கவில்லையென்றும் கூறுகிறார். ஆகவே இந்தத் தேசாபிமானியின்அபிப்பிராயப்படி ஜனங்கள் தேசப்பிரசினங்களைப் படித்தறியும்பொருட்டு ஆங்காங்கு ஸரியானசங்கங்கள் அதிகமாக ஸ்தாபிக்கப்படவேண்டும். இச்சென்னைராஜதானியானது 22 ஜில்லாக்களைஉடையதாயிருக்க 7 ஜில்லாக்களில்மட்டுமே ஏகதேசம் ஸரியானசங்கங்கள் ஸ்தாபிக்கப்பட்டிருக்கின்றதாம். அவைகளுங்கூட ஜனப்பிரதிநிதிகள் அடங்கியவைகளல்லவென்று தெரியவருகின்றது. இக்காலத்தில் அறிவின் ஒவ்வொருதுறையும் மிக்கத்தனிப்பட்டுப்போயிருப்பதால் அவர்கூறுகிறபடி ஜனங்களுக்கு ஸரியான அபிப்பிராயங்கள்தோன்றுமாறு பெரியபுஸ்தகசாலைகள் ஏற்படுத்தவேண்டும். அப்புஸ்தகங்களை ஜனங்கள் பொறுமையுடன்படிப்பதும்அவசியம். தக்க

சங்கங்களால் எங்கும் போதகர்கள் அனுப்பப்பட்டு அவர்களால் ஜனங்களுக்கு அறிவைஊட்டவேண்டும். இதுவரை அத்தகைய ஏற்பாடுகள் அதிகமாய்ச்செய்யப்படாததால் தேசாபிமானிகளின் அபிப்பிராயப்படி தேசத்தின்குறைகளைநிவர்த்திசெய்ய ஸாத்தியமற்றிருக்கின்றது. அன்றியும் சிலர் "உலகமென்பது உயர்ந்தோர்மாட்டே" என்பதையறியாமல் நமது காங்கிரஸானது ஜனப்பிரதிநிதிசங்கமென்று சொல்வதைக்கேட்டு நகைக்கிறார்களாம். 13,624 யூரேஷியர்களுள்ள சென்னைராஜதானியில் 1,587 நபர்வரை அவர்களின் சங்கத்தின் அங்கத்தவராகவிருப்பதாலன்றோ, அவர்கள் நமதுசங்கங்களையும் ஜனங்களையும் ஒப்பாமலிருக்கிறார்கள். 1903-ம்வருஷத்து காங்கிரஸ்ஸில் ஒரு அங்கிலேயமாது தான் 80,000 ஸ்திரீகள் அடங்கின சங்கத்தின் மெம்பரென்றுசொன்னதுஉண்மையானால், அவர்கள் தங்கள்குறைகளைத்தீர்த்துக்கொள்ள பெரியசங்கங்களைஸ்தாபித்து ஒழுங்கான அமைப்புகள்ஏற்படுத்தப்பழக்கப்பட்டிருக்கிறார்கள் என்பதை நாம்நம்பாமலிருக்கலாமா? கர்ஸன் பிரபுவானவர் சுற்றுப்பிரயாணமாகச் சென்னைக்குவந்திருந்தபொழுது சுமார் 200 மெம்பர்களுக்கு அதிகமாய் உடைத்தாயிராத அவ்வூர்மகாஜனஸபையானது ராஜதானி முழுமைக்கும் பிரதிநிதியென்றுசொல்லிக்கொண்டதை அவர்ஏற்காமல் மறுத்துவிட்டாரென்றுதெரியவருகின்றது. உண்மையானபிரதிநிதிநிலைமைமுற்றிலும் வெளிப்படும்முன்னமே சிறுகச்சிறுக நாம் முற்படமுயலும்துவக்கத்தில் இந்தச்சங்கங்கள் பிரதிநிதி இயல்புகொண்டவைகளாகவே கருதப்படலாமென்பதை அவர்கள் ஏன் மறந்துவிடுகிறார்களோதெரியவில்லை. கனம், கிருஷ்ணஸ்வாமிஅய்யரவர்கள் நமது ஜனங்கள் தேசகாரியங்களைக்கவனிக்கும்பொருட்டு ஒவ்வொருஜில்லாவிலும், ஒவ்வொருதாலுகாவிலும், ஒவ்வொருகிராமத்திலுங்கூட ஸபைகள் ஏற்படுத்தவேண்டுமென்று அபிப்பிராயப்படுகிறார்கள். இவர்களின் அபிப்பிராயப்படி நாம் திருத்திக்கொள்ள வேண்டியதிருத்தங்கள் நம்முள் இருப்பதினால்தான் பரோபகாரிகளின்உழைப்புகளை ஜனங்கள் இன்னும் நன்குணரும்காலம் ஏற்படவில்லையென்று முன்கூறக்காரணமாயிற்று. அவ்விதமன்றி ஜனங்கள் தேசாபிமானிகளின் கருத்துக்களை அனுஸரித்துநடக்கிறவர்களாகவிருந்தால் கூலிகொடுத்துக்குப்பையில் எறியவேண்டியகண்ணாடி, பீங்கான்முதலிய பரதேசஸாமான்களுக்குத் தங்கள்கோடிக்கணக்கான அரும்பொருளைக் கொட்டிக்கொடுத்துக்கொண்டு ஏழையரை ஏங்கித்தவித்துநிற்க இடம்வருத்துவார்களா? மாட்டவேமாட்டார்

கள். ஆனல் இவர்கள் ஆரியமதாபிமானிகளா? அதுவுமில்லை. அல்லது ஆங்கிலசிரோமணிகளா? அப்படியுமன்று. ஆரியமதாபிமானிகளாக விருந்தால் பக்தியும் ஞானமுமே பிரதானமென்று பகவத்தியானம் செய்துகொண்டிருக்க வேண்டும். எவனுக்கு பக்தியோடுகூடின ஞானமிருக்கிறதோ அவனே பரமபதத்தையடையத் தகுந்தவன். அதைப்பெறுவதற்குள்ளவழிகள் பாகவதாதிபுராணங்களால் நன்றாக அறிவுறச்செய்யப்படுகின்றன. அப்படிச் சுலபமானமார்க்கங்களேற் பட்டிருந்தும், இந்தஜனங்களேன் அதைப்பெற அதிகமாய்முயல வில்லை? இந்தக்கேள்விக்கு எம்பெருமானாகியஈசுவரன்தான் மறுமொழிகூறவேண்டும். அல்லது ஆங்கிலமணிகளாகவிருந்தால் அவர்களைப்போல், கைத்தொழிற்பயிற்சி, தனுர்ச்சனமாகிய குணங்களைப் பெற்றிருக்க வேண்டும். அதுவுமில்லை. அப்படியிருந்தாலுந்தான் என்ன? பரமதயாநிதியாகியகடவுள் இந்துஜனங்களைக்காப்பாற்றாமல் கைவிடப்போகின்றாரா? இல்லை. எந்தக்காரியமும் திடீரென்றுமுடியமாட்டாது. கொஞ்சம்நிதானத்தின்பேரிலேயே நிறைவேறவேண்டும். பாபுதுவாரகாநாதமித்திரரை திடீரென்று ஹைகோர்ட்டு ஜட்ஜியாக நியமிக்கவில்லை. அவர் எத்தனையோ வருஷங்கள்படித்து, உழைத்தபிறகுதான் அவ்வேலையை அடைந்தார்: அவ்வளவு கஷ்டங்களை அனுபவிக்க இஷ்டமில்லாதவர்கள் பிளீடர்அந்தஸ்திலேயே நின்றுவிடுவார்கள். சிலஸமயங்களில் கடவுளின் அனுக்கிரகத்தால் சிலருக்குத் திடீரென்று நல்லஅந்தஸ்துகளும் உண்டாகிவிடுகின்றன. நிதர்சனமாக ஆட்டிடையன்தொழிலைச்செய்துகொண்டிருந்த காளிதாஸனாகிய நமதுபூர்வாரியன் காளியின்அனுக்கிரகத்தால் மகாகவியானதைப்பார்த்துக்கொள்ளலாம். நிற்க, கனவான்களே! இந்தியாவானது ஸ்வராஜ்யம்பெறுவதை அதன் ஜாதிஆசாரங்களும் அனுபோகக்குறைவும் தடைசெய்கின்றனஎன்பதைப்பற்றி அநேகம்பெரியோர்கள் அடிக்கடிகூறிவருகிறார்கள். ஆகையால், நாம் இப்பொழுது அந்த வார்த்தைகள் ஏற்கத்தக்கதா? மறுக்கத்தக்கதா? என்பதைப்பற்றி கொஞ்சம்ஆலோசனைபுரியவேண்டியதுண்டு. நாம் இராஜாங்கமுறைகளில் பழகினவரில்லையென்றவார்த்தையானது இப்பொழுதுஉண்மைபோல்பவித்திருந்தபோதிலும் அது பூர்வாரியவேந்தர்களாலும், திருவாங்கூர், மைசூர், பரோடா, முதலியவைகளையொத்த சுதேசராஜ்ஜியங்களாலும் மறுக்கத்தக்கதாகவேயிருக்கின்றது. இந்த அரசர்கள் இந்தியாதேசத்தில் பிறந்துவளர்ந்திருக்கிறார்களேதவிர, மறுதேசங்களிலிருந்துவந்தவர்களாகக் காணப்படவில்லை. அதுபோல் இந்த

ஜாதிஆசாரங்களும் இந்தியா தோன்றினநாள்முதலே தொன்று தொட்டு நிகழ்ந்துவருகின்றன. அதனால் அந்நாளிலுள்ள அரசாட்சி விஷயங்களுக்கு யாதொருதடையும் ஏற்படவில்லை. இந்தியாவானது தன் தர்மாதர்மவிதிகளின் ஞானத்தினாலே ஜாதிமதாசாரமென்ற வர்ணாசிரமதர்மங்களின் கோட்பாட்டை கைக்கொண்டிருப்பதால் நாம் அதை ஒருபொழுதும் நழுவவிடலாகாதென்பது ஒருசார்பின ரின்கருத்து. இவர்கள் இக்கொள்கையினால் நம்நாட்டுஜனங்களுக்கு அடக்கம், பெருமை, தர்மசிரத்தை, பரோக்ஷபக்தியாகிய குணங்கள் ஸித்திப்பதாக விருப்பதோடு மேல்திசைக்கு நம்ஞானத்தைப்புகட்டி, அதன்லௌகிகசாஸ்திரத்தைக்கற்கவும், ஐரோப்பாவுக்குப் பரிசுத்த மான இல்லறத்தைப்போதித்து அதன் ராஜாங்கக்கொள்கைகளைக்கற் கவும், அமெரிக்கருக்கு ஆத்மஞானத்தைப்புகட்டி அவர்களுடைய வியாபாரமுறைநெறிகளைப்பயிலவும், ஏதுவாகின்றதுஎன்கின்றார்கள். மிஸிஸ் அந்நிபெஸான்டு அம்மையானவள்கவனித்துப்பார்க்குமளவில் ஒவ்வொருஜீவனும் இந்தநான்குவர்ணங்களின்மூலமாகவே விகாசிக்க வேண்டியவனாயிருக்கிறான். இந்தநான்கு வர்ணப்பிரிவுகள் இந்து மதத்திற்குமாத்திரம் உரிமைபற்றியதன்று. இந்தியாதேசத்தில்மாத் திரம் நடைபெறுகிறதாக நாம்நினைக்கக்கூடாது. அவைகள் இயற் கையாய் உலகமெங்கும்நடைபெற்றுவருகின்றன. ஆனால் இந்தியா தேசத்தில் அவைகள்நடைபெறும் முறைமைக்கும் மேற்குதேசங் களில் அவைகள்நடைபெறும் முறைமைக்கும் வித்தியாஸமுண்டு. அதாவது இந்தியாவில் வர்ணபாகுபாடுகள் அங்கீகரிக்கப்பட்டிருக் கின்றன. அந்தவிவஸ்தையை அனுஸரித்தே பொதுஜனஒழுக்கம் வழங்குகின்றது. மற்றையதேசங்களில் ஜாதிப்பாகுபாடுகள் அவ்வி தம் வியக்தமாய் அங்கீகரிக்கப்படாமலிருந்தாலும், ஜனஸமூகத்தில் மேல், கீழ், என்ற முறைமை அனுஸரிக்கப்படாம லிருக்கவில்லை யென்று கூறுகிறார். பிரான் சுதேசத்திலேயிருந்த ஆகஸ்டு கோன்டு என்ற ஞானியார் ஜனஸமூக விபாகத்தைப்பற்றி எழுதியிருக்கிற தத்துவசாஸ்திரமுறையில் இந்துஞானிகளால் ஏற்படுத்தியிருக்கிற ஜாதிவிவஸ்தைகளை அங்கீகரித்து அவைகளைத் தம்முடையதத்துவ சாஸ்திரத்தில் அமைத்திருப்பதோடு நமது பிராமணஜாதிபோன்ற ஓர்புரோகிதவகுப்பையும், தம்முடைய ஜாதிமுறைக்கோட்பாட்டில் நிர்ணயித்திருக்கிறதாகத் தெரியவருகின்றது. அன்றியும் நமது வைசிய, சூத்திர, ஜாதிகளைப்போன்ற வகுப்புக்களையும் ஏற்படுத்தி யிருக்கின்றாராம். ஆனால் அவர் ஜனங்கள் ஸமாதானமாகவிருப்பார்

கள் என்ற நம்புதலின்பேரில் க்ஷத்திரியஜாதி என்ற வர்ணத்தை நிர்ணயிக்கவில்லை. சண்டையில்லாவிடில் க்ஷத்திரியர் எதற்கென்பது நம் அந்நிபெஸாண்டு அம்மையவர்களின் அபிப்பிராயம். ஆகவே, மேற்குத்திசையாரில் ஒருவரின் சாஸ்திரநீதி முறைப்படிக்கும் ஜாதி விவஸ்தை இருந்தே தீரவேண்டுமென்று ஸித்தாந்தமாகின்றது. அங்ஙனமிருக்க, நம்மவரில் மற்றொரு சார்பார்ஜாதி ஒழுக்கமுறைமையை நிஷேதிக்கவேண்டுமென்று கூறுவது எதற்காக என்பதைப்பற்றி நாம் இனியோசிக்கவேண்டும். "ஸர்வம்பிர்மமயம் ஜெகத்" என்ற வேதாந்தவாக்கியப்படி உலகமெங்கும் பிர்மஸ்வரூபமே வியாபித்திருக்கின்றது. அந்த பிர்மத்தின்காரியமே உலகமாகும் என்பதை அறியாத சிலஜனங்கள் ஜாதிமுறையில் தங்களுள் ஒருவருக்கொருவர் உயர்வு தாழ்வென்றவேற்றுமைகளைப் பாராட்டிக்கொள்வதால் அவர்களில் ஐக்கியம்ஏற்படுகிறதில்லை. தர்மம் குன்றியிருக்கிற இக்கலிகாலத்தில்ஒற்றுமையாக இராவிடில் ஒருகாரியமும் நடத்தஇயலாமலும் இருக்கின்றது. ஆகவே, நாளாவட்டத்தில் இந்த ஜாதிமுறைமை என்ற ஏற்பாட்டை வேறுரூபமாக மாறச்செய்யவேண்டுமென்பது சிலருடைய கருத்துப்போலும். அப்படியில்லாதவிஷயத்தில் கப்பல் வழியாக தேசாடனம்செய்வதற்கும் வேறு சிலகர்மங்களுக்கும் அதனால் அனேகம் இடையூறுகள் நேரிடுகின்றனவாம். நூற்றுக்கணக்காய் உண்டாயிருக்கின்ற ஜாதியின் உட்பிரிவுகளுக்கு ஆதாரமில்லாமலிருப்பதால் அவைகளைமட்டும் நாளடைவில்நீக்கிப் பொதுவாகவழங்கும் சதுர்வர்ணங்களைமாத்திரம் நாம்கைக்கொண்டால் போதுமென்பது நமது சிருங்கேரி ஸ்ரீமத்சங்கராசார்யஸ்வாமிகள் அவர்களுடையவும், மிஸிஸ் அந்நிபெஸாண்டு அம்மை அவர்களுடையவும், அபிப்பிராயமாகவிருக்கின்றது. இந்த ஆஸ்திகசிரோமணிகள் நம்மவரின் உட்பிரிவு ஜாதிவேற்றுமைகளை அனுஷ்டியாமல் விடத்தக்கதென்று கூறியிருப்பதோடு, ஒவ்வொரு வர்ணத்திற்குள்ளும் விவாஹமும் பந்திபோஜனமும் நிராக்ஷேபமாகச் செய்யலாமென்றும் சொல்லுகின்றார்கள். இம்மாறுதலால் இந்து சமயத்துக்கு யாதொருவிரோதமும் இல்லாதபடியால் காலஸ்திதியைஉத்தேசித்து ஸர்வஜனங்களும் அவ்விதமே அனுஷ்டிக்கத் தொடங்குவார்களென்று நம்பவேண்டியதாகின்றது. அங்ஙனமின்றி இந்துஜனங்கள் நீவேறு, நான்வேறு, உன்ஜாதிவேறு, என்ஜாதிவேறு, என்று சிறுசிறுவகுப்பினராய் வேற்றுமைபாராட்டிக்கொண்டு வருவதால் தேசம் ஒருங்குபட்டு தேசாபிமானமுயற்சி நிகழ இடமின்றி ஜனங்கள்முழுவதும் ஒரு

தேசத்தினராக அமைய ஆஸ்பதமில்லாமலிருக்கின்றது. அன்றியும், முன்கூறினபடி கப்பல்யாத்திரை செய்கின்றவன் கல்விகேள்விகளால் எவ்வளவு ஸமர்த்தனுயினும், அவனது ஒழுக்கம் எவ்வளவு பரிசுத்த மாகவிருந்தபோதிலும், அவனுடைய பந்துஜனங்கள் மற்றவர்களுக்கு எவ்வளவுஉபகாரிகளாக விருந்தாலும், அவன்ஜாதியிலிருந்து விலக் கப்படுகின்றுன். ஜாதிவேற்றுமை இல்லாதிருந்தால் அவனை எல் லோரும் எதிர்சென்று அழைத்துவருவார்களல்லவா? தற்காலநிலை மையைப் பார்க்கிறபொழுது அன்னியதேசம்போகாமல் ஜீவிக்கவோ வழியில்லை. போய்வந்தால் பின்னுல் அனுபவிக்கிறசங்கடங்களோ அபரிமிதமாகவிருக்கின்றன. இவ்விதமான தொல்லைகளுக்கு இந்து ஜனங்கள் ஆளாகியிருப்பதால் இங்கிலண்டு முதலியவிடங்களுக்குப் போய் எவ்விதம் கல்விபயிலமுடியும்? ஆகையால் தான் ஆட்சியை விரும்புகின்ற ஆரியமணிகளிற் சிலர் அவ்வாசாரத்தை ஒழிக்கவழி பார்க்கின்றுர்கள். அங்ஙனம் நேருமாயின், அனேக இந்துஜனங்க ளின் மனம்புண்ணுகிக்கொதிக்கத் தொடங்குமென்பதில் ஐயமே யில்லை. கடவுள்திருவுள்ளம் எப்படியோ? யார்அறிவார். ஆனுல் எந்தக்காரியத்திலும் பன்னிப்பன்னிப் பலவிதமாக யோசித்துக் கொண்டிருப்பதில் பிரயோஜனமில்லை. காரியம் ஸாத்தியமாக வேண் டுமானுல் நமது கடைசிக்கொள்கையைக் கைப்பற்றவேண்டும். ஒரு ஏரியின் தண்ணீர்கலங்கினுலும் அல்லது காற்றடித்து அலைகள்உண் டானுலும் நாம் ஜலத்தின்கீழுள்ளதரையைக் காணமுடியாது. அது போல் சித்தம் சலித்துக்கொண்டிருந்தால் கோரியகர்மத்தை நிறை வேற்றிக்கொள்ள முடியாமல் இருப்பதோடு, ஆத்மாவைத்தரிசிக்க வும் ஸாத்தியமற்றுப்போய்விடும். ஏரியே நம்முடையசித்தம். ஏரியின் அடிப்புறம் நம்முடையஆத்மா. சித்தமாகிற ஏரிதெளிந்து, காற்றடி த்துச் சலியாமலிருந்தால் ஆத்மாவாகிய அடிப்புறம்தெரியும். சித் தமே ஏரியென்றதால் அதிலுள்ள அலைகளே விருத்தியாகும். குதி ரைகளை யிழுத்துப்பிடித்து வண்டியை ஸரியானபாதையில் ஓட்டுகிற வன் ஸாமர்த்தியசாலியேயன்றி, அதை இஷ்டப்படி அங்குமிங்கும் ஓடச்செய்பவன் சமர்த்தனல்ல. அதுபோல் சித்தத்தைப் பலதுர் விஷயங்களிலும் செல்லும்படிவிடுகிறவன் மூடனுகவும் அதை ஸன் மார்க்கத்தில் செல்லவிடுகிறவன் விவேகியாகவும் எண்ணப்படுகிறுன். நல்லபழக்கம் நாட்சென்றுவரும். கெட்டபழக்கம் கிடுகிடுஎன்று வரும். என்றபடி சித்தமானது ஐம்புலன்கள்வழியாக எப்போதும் வெளியேயுள்ள பொருள்களிலேயே செல்லுகிறதும் சிற்றின்பங்க

ளில் நாடுகிறதுமாயிருக்கிறது. நல்லவிஷயங்களில் நாடுகிறதென்றால் கொஞ்சத்திலாகிறதில்லை. வெகுநாட்செல்லும். ஒருமனிதனை பாவம் என்பது சுற்றிக்கொண்டு கூண்டுபோல்வளைந்திருக்கிறது. அதை யோகம்என்ற அக்கினியால் அழித்துவிடலாம். ஞானம் ஸித்திப்பது யோகத்தால்என்று அறியவேண்டும். ஞானமே யோகிகளுக்கு உதவிசெய்கிறது. எவன்யோகியாயும் ஞானியாயுமிருக்கிறானோ அவனிடம் பகவான் பிரீதிகொள்ளுகிறார். ஒவ்வொருநாளும் ஒன்று, இரண்டு, மூன்று, தடவை மகாயோகம்செய்கிறவர்கள் தங்களை தேவஸ்வரூபமென்று அறியக்கூடும். யோகமானது இரண்டுவகைப்படும். ஒன்றுஅபாவம். மற்றொன்று மகாயோகம். தன்ஆத்மாவிலேயே மனதைச்செலுத்தி அதுகுணாதீதமென்று நினைப்பதுஅபாவம். யோகியானவன் ஒவ்வொன்றாலும் தன்னை இன்னானென்று அறிந்துகொள்ளுகிறான். தன் ஆத்மாசுத்தமானது. சந்தோஷம் நிறைந்தது. ஈசுவரனும் அதுவும் ஒன்றுஎன்றுநினைப்பது மகாயோகமெனப்படும். மற்றயோகங்களெல்லாம் அவ்வளவு சிலாக்கியமல்ல. ஆதலின், உலகெங்கும் பிர்மமேநிறைந்திருக்கிறதென்னும் ஞானமே ஸர்வோத்கிருஷ்டமானது. இதுதான் நமதுவேதாந்தசாஸ்திரத்தின் கடைசிக்கோட்பாடாம். இந்தநிலைமையிலிருக்கிறவர்கள் வர்ணாசிரமதர்மங்களைக் கைக்கொள்ளமாட்டார்கள். அவர்கள் அவைகளைக் கைக்கொள்ளவேண்டுமென்பதும் அத்தனை அவசியமில்லை. இதுதத்துவசாஸ்திரத்தின் ஓர் முக்கியமானகொள்கையாகும். ஆனால் அந்த சாஸ்திரமானது ஜடை தரித்துக்கொண்டும், மொட்டையடித்துக்கொண்டும், தலைமயிரைக் கத்தரித்துக்கொண்டும், காஷாயவஸ்திரம் தரித்துக்கொண்டும், பின்னும் அனேகம்விதமான வேஷங்களுடன் சாண்வயிறுவளர்க்க உலகத்தாரை வஞ்சித்துக்கொண்டும், தெருத்தெருவாய்த் திரிகின்றவர்களை ஞானிகளெனக்குறிப்பிடவில்லை. அந்த வேஷங்கள் அவர்களின்ஓர் மனோபாவம். அனேகருக்கு சங்கற்பங்கள் சிலபாகம் அறிவை யூன்றியதாயும், சிலபாகம் விஷயஇச்சைகளை ஊன்றியதாயும் இருக்கின்றன. அறிவால் மானஸிகசரீரமும், விஷய இச்சையால் காமசரீரமும் அமைகிறது. பிரபஞ்சவிஷயத்தில் இச்சையுள்ளவனுக்கு பகவத்பக்தனைப்போல் தெய்வ பக்தியும், அவனது நாட்டமும் ஜனிக்கிறதில்லை. ஆகையால் வேஷதாரிகள் ஸர்வப்பிராணிகளையும் பிர்மஸ்வரூபமாக நினைத்து ஸதா ஈசுவரனை தியானம்செய்யார்கள். ஸகலத்துக்கும் சிரேஷ்டமான ஆத்மாஸ்வயமாய் நின்றால், அப்பொழுது உண்டாகும் ஸுகத்திற்கு

எல்லையேற்படுத்த எவரால்முடியும்? அப்படி அதில்அளவிறந்தஸுகமில்லையானால் கர்னல் ஆல்காட்துரையானவர் தனக்கு யுத்தவிலாகாவிலிருந்தவேலையை ராஜிநாமாக்கொடுத்துவிட்டு அவர் பிர்மக்ஞானஸபையென்னும் ஓர்ஸத்ஸங்கத்தை ஸ்தாபிக்க நிமித்தமில்லை. இவர் அனேகமகான்களால் ஆயுஸுஉள்ளவரையில் அச்சங்கத்திற்கு அக்கிராஸனாதிபதியாயிருக்கும்படி நியமிக்கப்பட்டார். பிறகு, நியூயார்க் என்னுமிடத்தில் 1875-ம்வருஷம் நவம்பர்மாஸம் 17-ந்தேதியில் ஓர் உபந்நியாஸமும் செய்திருக்கிறார். 1878-ம்வருஷத்தில் அவரும் பிளாவட்ஸ்கி அம்மையாரும் பம்பாயில்சென்று சிலகாலம்வஸித்தார்கள். அப்பொழுதே பரதேசஸாமான்களை உபயோகப்படுத்துவதைவிட நமது சுதேசஸாமான்களை உபயோகப்படுத்துவது நலமென அவரால் போதிக்கப்பட்டிருக்கின்றது. பிர்மக்ஞானசங்கமானது முதன்முதல் இந்தியாவில்கூடினபொழுதே சுதேசஸாமான்களை உபயோகப்படுத்த வேண்டுமென்று போதிக்கத் தொடங்கியிருப்பதால், இந்தியாவின் சுதேசியக்கோட்பாடானது ஒருபொழுதும் சோர்வடையப்போகிறதில்லையென்பது திண்ணமே. 1880-ம்வருஷத்தில் ஸிலோனிலுள்ள பௌத்தர்கள் தங்கள்மதத்தை மறுபடியும்சிரத்தையுடன் அநுஷ்டிக்க வாரம்பித்தார்கள். இப்பொழுது அவ்விடத்தில் மூன்றுகாலேஜுகளும் 205-பாடசாலைகளுமிருக்கின்றனவாம். அதில் 177-பள்ளிக்கூடங்களுக்கு கவரன்மெண்டில் கிராண்டுகொடுக்கிறார்கள். 1906-ம் வருஷத்தின் ஜூன்மாஸம் 30-ந் தேதிவரையில் 25,856 பிள்ளைகள் அந்தப்பள்ளிக்கூடங்களில் படித்துவந்தார்களென்று தெரியவருகின்றது. கர்னல் ஆல்காட்துரையென்பவர் பௌத்தமதத்தைச் சார்ந்தவரானபடியால், அம்மதத்திற்குமிகவும் பாடுபட்டுவந்தார். தவிரவும் 1889-ம்வருஷத்தில் அவர் யாழ்பாணத்திற்குச்சென்றபொழுது ஓர் பெரிய உபந்நியாஸம்செய்தார். 25,000 ஜனங்கள் அவர் உபந்நியாஸத்தைக்கேட்டவர்கள். பௌத்தர்களில் வடபக்கத்திலுள்ளவர்களுக்கும், தென்பக்கத்தி லுள்ளவர்களுக்கும், அனேகமாறுபாடுகளிருந்தன. அவர்கள் அந்நியோந்நியமாகவிருக்கும்பொருட்டு இருவர்களுக்கும் பொதுவாக 14 பொதுவிதிகளை ஏற்படுத்தியிருக்கின்றாராம். 1882-ம்வருஷத்தில் கர்னல், அம்மையார்இருவர்களும் ஏறக்குறைய தங்கள்திரவியத்தைக்கொண்டே சென்னபட்டணத்திற்கருகே அடியார் என்றவிடத்தில் மனோக்கியமானஸ்தலம்வாங்கி அதைப் பிர்மக்ஞானசங்கத்தின் பிரதானஸ்தலமாக்கினார்கள். 1875-ம்வருஷம்முதல் 1906-ம்வருஷம்வரையில் பூலோகத்திலுள்ள அனேகதேசங்களில்

கிளைச்சங்கங்கள் ஏற்பட்டு அவைகளுக்குமொத்தம் 893பட்டயங்கள் அனுப்பியிருக்கிறார். அவைகள் 11 செக்ஷன்களாகப் பிரிக்கப்பட்டிருக்கின்றன. இதைத்தவிர செக்ஷனுகஏற்படுத்தக்கூடாதுபடி அனேக கிளைச்சங்கங்களிராததேசங்கள் அனேகமுண்டு. உத்தரமகாஸமுத்திர முதல் தெற்கு மகாஸமுத்திரம்வரையில் கிளைச்சங்கங்கள் இருக்கின்றன. அவருடைய காலம், பக்தி, திரவியம், யாவற்றையும் தன் அருமைச்சங்கத்திற்கே அற்பணம்செய்திருக்கிறார். கனவான்களே! அவருடைய விசுவாஸத்தையும் சிரத்தையையும் பார்த்தீர்களா? பிர்மஞ்ஞானசங்கத்தின் நன்மையை உத்தேசித்து தனக்குஎவ்வளவு மெய்வருத்தம் ஏற்பட்டாலும்அவைகளை யோசிக்கிறவரில்லையென்பது நன்றாகப் புலப்படுகின்றது. அதுபோல் நமதுவர்ணாசிரமதர்மமுறைகளை ஒழுங்குபடுத்த முன்வந்திருக்கிறவர்கள்கோரிய கர்மம்சோர்வையடையாதபடி தகுந்தசிரமம்எடுத்துக்கொள்வார்களேயானால், அந்நிபெஸான்டு அம்மையின் அபிப்பிராயமானது ஒருக்கால்நிறைவேறினாலும் நிறைவேறக்கூடுமென்று நம்பஇடமுண்டாகின்றது. அந்த அம்மையானவள் பிரஸ்தாபவிஷயமான வர்ணாசிரமதர்மங்களைப்பற்றிப் பேசிவருகிறபொழுது, இந்தஉபதேசத்தின் உரிமையானது இந்தியநாட்டில் பலவாறாகப்பரவவேண்டுமாயின், இந்தியாதான்செய்யவேண்டிய கர்மம்யாதென்பதையோசித்து, ஜனங்களுக்கு ஞானகுருவாகஅமைவதற்குற்ற முயற்சிசெய்து தானே ஆயத்தம் செய்துகொள்ளவேண்டுமென்று கூறுகிறார். அன்றியும், பிராசீனபரிசுத்ததர்மங்கள்மறுபடியும் இந்தியாவில் அனுஷ்டானத்துக்குவரல்வேண்டும். தொன்றுதொட்டுகிடைத்திருக்கும் புகழ்பெற்றஸித்திகளையெல்லாம் கையாளுமிந்தியர்கள் நல்லொழுக்கமுள்ளவர்களாகவும், பரிசுத்த நடையை உடையவர்களாகவும், பிரக்ஞாவான்களாகவும், சிரேயஸானவற்றிலேயேநோக்கமுடையவர்களாகவும் பவிக்கவேண்டும். அதனால் உலகத்துமற்றையஜாதியாருக்கு ஞானசாரியராகவும் சமயநெறிகளைஉபதேசிக்கவும்ஏற்ற உயர்ந்தமரியாதையான ஸ்தானத்தைஅடையஇடமுண்டு. அவர்களின் உபாத்தியாயர்கள் உலகத்திலுள்ளமற்றசமயங்களைச் சீர்திருத்தி ஞானபாகத்தை அவற்றிற்குப்புகட்டி இக்காலத்திலுள்ள அக்ஞானமாகிய இருளைத்துரத்தி ஞானஉதயமாகும்படிசெய்வித்து எங்கும்பூஜ்ஜியர்களாக பவிப்பார்கள். ஆனால் உயர்ந்தஸம்பத்தையும் அந்தமேலானவைபவத்தையுமடைவதற்கு உற்றபடிநீங்கள் ஆயத்தம்செய்துகொள்ளல் வேண்டும். அதுதான் நாம்கவனிக்க வேண்டிய லக்ஷியம். அதனை அடையும் ஸாதனம்கல்வியின் அபி

விர்த்திஎன்றும் கூறுகின்றார். நிற்க, சிலபெரியோர்கள் நமதுஜாதி மதாசாரஸம்மந்தமான சீர்திருத்தத்தைஆமோதித்துப் பேசமாட்டார்கள். அவர்கள் "ஏகம்ஸத்விப்ரா பஹுதாவதந்தி" என்ற நியாயத்தையும் "தத்துவமஸி" மஹாவாக்கியத்தின் தத்துவத்தையும் அறிந்தும்அறியாதவர்களாகவேயிருக்கிறார்கள். மேற்சொன்ன வாக்கியங்களால் பிரதக்பாவமானது நசித்துஜகத்து தன்மயமாகவிளங்கிக் கொண்டிருக்கின்றது. இந்தக்கொள்கைகளை மேற்கோளாக எடுத்துக்கொண்டு வர்ணாசிரமதர்மங்களைச் சீர்திருத்தமுயலுகிறவர்கள் "எதார்த்தவாதி வெகுஜனவிரோதி" என்றபழிக்கு ஆளாகின்றார்கள். ஆகவே, ஜனங்கள்எப்பொழுதும் உண்மைபேசுகிறவர்களை விரோதிக்கிறார்களென்று தெரியவருகின்றது. உலகத்தில் நல்ல ஞானவான்களும் தகுந்த படிப்பாளிகளும் மிகவும் ஸ்வற்பம். படிப்பில்லாதஜனங்கள்தான் அதிகம். அத்தகையோருக்கு ஞானமார்க்கங்களை எடுத்தோதினால் அவைகளை எளிதில் உணரத்தக்கசக்தி அவர்களிடத்தில் இல்லை. இவர்கள் வேறு எவனாவது பெரியபொய் புகலுவானாகில், அதில் அதிகஆவலும் அத்தியந்தவிசுவாஸமும் கொள்ளுவார்கள். விவேகிகள் அப்படியல்ல. எந்தக்காரியத்தையும் நன்றாக ஆராய்ந்து கொஞ்சம் நிதானத்தின்பேரிலேயே செய்வார்கள். ஜாதி அபிமானமானது அதிகப்பட அதிகப்பட பிரதக்பாவமானது வரவாமுதிர்ந்துகொண்டே வரும். இவ்வுலகத்தில் எத்தனையோ நாகரிகங்கள் தோன்றி மறைந்திருக்கின்றன. இனி எத்தனையோ நாகரிகங்கள் தோன்றி மறையப் போகின்றன. அந்தந்த நாகரிகங்களுக்குத்தகுந்தபடி பலபலசமயங்களும் தோன்றி மறைந்துகொண்டு வருகின்றன. எல்லாமதங்களும் மனிதனுக்கு இகபரஸாதகமானவழிகளையே போதிப்பிக்கின்றன. ஆகையால் ஸமஸ்தகிரந்தங்களின் கருத்துக்களெல்லாம் மனிதஜன்மமெடுத்த ஒவ்வொருவனும் ஸகல அண்டபிண்ட சராசரங்களுக்குக் காரணனாகியும், நியந்தாவாயும், ஸர்வேசுவரனாயும், மஹேசுவரனாயும், ஸகலப்பிராணிகளின் ஹிருதயங்களில் வஸித்துக்கொண்டிருப்பவனாகியும் இராநின்ற ஜகத்ரக்ஷகனைத் தேடவேண்டியது அவசியமென்று போதிப்பதைத்தவிர வேறில்லை. அப்படித் தேடுவதற்குரிய ஸாதனங்கள் அனேகம் ஏற்பட்டிருக்கின்றன. ஆனதால், அந்த ஸாதனங்களில் ஒன்றை நாம் கைப்பற்றி ஆத்மா இன்னதென்றும், அனாத்மா இன்னதென்றும், பிரித்துப்பார்க்கின்றபொழுது பிரதக்பாவமானது தன்னாலே மறைந்துபோய்விடும். ஆனால் ஸமயங்களுக்குத் தக்கபடி உலகரக்ஷணார்த்தம் பெரியோர்கள்

அவதரிப்பதுவழக்கம். முற்காலத்தில் நமது வேதாந்தக்கோட்பாட்டை நிலைநிறுத்த ரிஷீசுவரர்களும் ஜகத்குரு ஸ்ரீமத் சங்கராசாரிய ஸ்வாமிகளவர்களும் அவதரித்தார்கள். அதன்பிறகு ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்ஸரும் ஸ்ரீ விவேகாநந்தஸ்வாமிகளவர்களும் அவதரித்திருந்தார்கள். அவர்களில் ஸ்ரீ விவேகாநந்தசுவாமிகளானவர் கர்மயோகத்தால் கர்மம் என்னவென்று அறிந்துகொள்வதுடன் நம்முடைய கடமை இன்னதென்பதையும் நாம் தெரிந்துகொள்ளவேண்டுமென்றும் கூறுகின்றார். ஆகவே, நாம் ஏதேனும் ஒருகாரியத்தை முடிக்க விரும்பினால் அதைப்பற்றி நாம் செய்யவேண்டியகடமை இன்னதென்பதை முதலாவது அறிந்துகொள்ளவேண்டும். அதன்பிறகுதான் அந்தக்காரியத்தை நாம் நன்றாகச் செய்யக்கூடும். ஒவ்வொருதேசத்திலும் ஒவ்வொருவர் ஒவ்வொன்றைத் தங்கள்கடமையாக நினைக்கின்றார்கள். மகமதியர்கள் கொரானிலுள்ளபடி செய்வதுதான் தங்கள் கடமையென்கிறார்கள். இந்துக்களாகியநாம் நமதுவேதத்திலுள்ளபடி அனுஸரிப்பதுதான் நம்கடமையென்கின்றோம். கிரிஸ்தவர்கள் தங்கள் வேதபுஸ்தகத்தில் சொல்லியிருக்கிறபடி செய்வதுதான் தங்கள்கடமை யென்கிறார்கள். மகமதியர் பன்றியென்னும்வார்த்தையையே காதால் கேட்கிறதில்லை. வெள்ளைக்காரகிரிஸ்தவர்கள் பன்றி மாம்ஸத்தை பகிரங்கமாய்ப் புசிக்கின்றார்கள். இந்துக்கள் எந்தமாம்ஸமும் தின்பது கூடாதென்கிறார்கள். இவ்வாறு கடமையென்பது இன்னதென்று தெரியாததால் சிலர் நம்முடைய மனசாக்ஷிக்குவிரோதமான காரியங்களைச்செய்யாமல் தவிர்ப்பதும் அதற்கு இணக்கமான காரியங்களைத் தவிர்க்காமல்செய்வதும் கடமை என்கிறார்கள். பிறருக்கு நன்மைசெய்வதைப்போன்ற புண்ணியமும் தீமைசெய்வதைப்போன்றபாபமும் இல்லைஎன்ற சிறந்தவாக்கியமானது நமது கடமை இன்னதென்பதை நன்றாக விளக்கிக்காட்டாமலிருக்கவில்லை. பகவத்கீதையில் பிறப்புக்கும் நிலைமைக்கும் தக்கபடி கடமையிருக்கவேண்டுமென்று கூறப்பட்டிருக்கிறது. ஆதலின், நாம் பிறந்ததேசத்திற்கும், ஜாதிக்கும், அனுஸரிக்கும் மதத்திற்கும் தக்கபடி ஒருவருக்கும் இம்ஸையன்னியில் கர்மங்களைச்செய்வதே நமது கடமையாகும். ஒரேவிதமான ஆசாரம் எங்கும் இல்லையென்பதை நாம்மறக்கலாகாது. இதை மறப்பதினால்தான் நாம் ஒருவரோடொருவர் சண்டைபோடுகிறோம். ஆதலின், கடமையென்பதை அடியில்வருமாறு வரையறுத்துக்கொள்ளவேண்டும். எதைச்செய்தால் ஆத்மஞானம் ஸித்திக்குமோ அதுவே நமதுகடமை. எதனால் நரகப்ராப்தி நேரிடுகின்றதோ அது

நம்கடமையல்ல. ஒருஸமயம் கடமையாய்த்தோன்றும் ஓர்காரியம் மற்றொருஸமயத்தில் பாபமாகபவிக்கின்றது. ஒருவனைக் கொலைசெய்வது பாபமென்று அஞ்சும் ஒருவன் போர்வீரனாய் யுத்தரங்கத்திற் சென்றால் அனேகம்பெயர்களை ஒரேதடவையில் வெட்டித்தள்ளுகிறான். இதனால் கொலை முதலில் பாபமாகவும் பிறகு கடமையாகவும் காணப்படுகின்றது. ஆகவே, ஸ்வயநலத்தைப் பாராட்டாமல் செய்யும் தர்மமே சிறந்ததர்மமாகும். வஸிஷ்டர், யாக்ஞவல்கியர், ஆபஸ்தம்பர் முதலிய அனேக மகரிஷிகளாலும் மனுசக்கிரவர்த்தியாலும் இயற்றப்பட்ட தர்மசாஸ்திரங்களை அந்தந்த மகரிஷிகளிடம் நேரில் கேட்டு அறிந்தவரும், இதிஹாஸபுராணங்களின் நூலாசிரியரும், அவதாரபுருஷருமாகிய ஸ்ரீவேதவியாஸமகாரிஷி தன்னுடைய சிஷ்யகோடிகளுக்கு எல்லாதத்துவங்களையும் அறிவித்திருக்கின்றார். புண்ணியவான்களே! உலகத்திலுள்ள தார்வேந்தர்கள் தங்களுடைய பிரஜைகளின் க்ஷேமத்தைக்கருதிச் சட்டமிடுவதுபோல், பிர்மதேவனால் சிருஷ்டிக்கப்பட்ட ஸகல ஜீவராசிகளும் ஸுகானுபவிகளாக பவிக்கும்பொருட்டு நமது பூர்வாசாரியர்களாகிய மகரிஷிகளும் வேதவிதிப்படி அனேக தர்மசாஸ்திரங்கள் மூலமாக அளவற்ற விதிவிலக்குகளை ஏற்படுத்தியிருக்கிறார்கள். அவைகளை புத்திசாலிகள் கற்றுணர்வாராயின், ஸுகானுபவிகளுக்குரிய வழிகாட்டிகள் என்பதை நிச்சயமாகத் தெரிந்துகொள்வார்கள். ஸர்வப்பிராணிகளும் ஸுகம், ஸுகம், என்று ஸுகத்தைநாடியன்றோ அதற்குரிய கர்மங்களைச் செய்கின்றன. பசு, பக்ஷி, முதலிய பிராணிகளுக்குப் பகுத்தறிவில்லை யாகையால், பின்னால்கூறப்படும் தர்மரூபமான விதிவிலக்குகளைத் தழுவிநடப்பது மனிதரின் கடமையேயாகும். மனிதஸமூஹமானது பாமரபண்டிதரூபமாயிருப்பதால் நித்தியாநித்திய ஸுகங்களையறிந்தும் அறியாமலும் தர்மாதர்மங்களை யனுஷ்டித்து ஸ்வர்க்கநரகப்பிராப்திக்குப் பாத்திரராகபவிக்கும்படி ஏதுவாகின்றது. ஆகவே, ஆஸ்திக சிரோமணிகளாகியநாம் அவையெல்லாவற்றையும் நன்குணர்ந்து வர்ணாசிரமங்களுக்கு ஏற்றவாறு முனீந்திரர்கள் ஏற்படுத்தியிருக்கிற தர்மங்களை அவசியம் அனுஸரிக்கவேண்டும். தர்மமாவது வேதத்தால் விதிக்கப்பட்ட கர்மங்களை அனுஷ்டித்து அதனால் பெறத்தக்க ஆத்மகுணமாம். அதர்மம் என்பது நிஷித்தகர்மத்தால் அடையத்தக்க ஆத்மகுணமாம். கால தேச வர்த்தமானங்களுக்குத் தக்கபடி தர்மம் பலவிதமாகவிருக்குமென்று ஸ்ரீ மகாபாரதத்திலுள்ள ஆனுசாஸனிகபர்வம் கூறுகின்றது. அவை யாதெனின், தேச தர்மங்

கள், குல தர்மங்கள், ஜாதி தர்மங்கள், வயதிற்குரிய தர்மங்கள், குண தர்மங்கள், தேக தர்மங்கள், கால தர்மங்கள், ஆபத்து தர்மங்கள், என்று பலவகைப்படும். இந்த தர்மங்கள் யுகவிசேஷத்தால் கிருதயுகத்தில் ஒரு விருஷபவடிவமாகி நான்குபாதங்களுடன் நிலைபெற்றிருந்தது. அடுத்தயுகத்தில் ஒரு கால் மறைந்தது. இதற்கு முந்தினயுகத்தில் தர்மாதர்மங்கள் இரண்டும் உலகத்தில் ஸஞ்சரித்துக்கொண்டிருந்தத்தால் இரண்டுகாலையன்றி மற்றஇரண்டுகால் போனவிடம் தெரியவில்லை. இந்தக் கலியுகத்தில் அதர்மம் முக்கால்பங்கும் தர்மம் கால்பங்குமாக இருப்பதால் ராகத்துவேஷம் முதலிய துர்க்குணங்களுக்கு இவ்வுலகம் அதிஷ்டானமாக ஏற்பட்டுவிட்டது. அதனால் இக்காலத்தில் ஜீவர்களுக்கு தர்மசிரத்தை ஜனிக்கிறதில்லை. இதை ஞானதிருஷ்டியால் அறிந்த முற்காலமுனிவர்கள் தற்காலத்தவருக்கேற்றவாறு வேதம் கூறியபடி ஸாமான்ய தர்மங்களையே விதியாக விதித்திருக்கின்றனர். அதாவது ஒவ்வொருவர்களும் இதரப்பிராணிகளிடம் தயவு பாராட்டவேண்டும். கோபமென்னும் தீய குணம் நம்மை அடிமையாகக்கொள்ளாதபடி பொறுமையென்னும் ஐசுவரியத்தால் ஜாக்கிரதையாகவிருந்துகொள்ள வேண்டும். மற்றவர்களின் ஸுகாநுபோகவிஷயத்தில் தனக்கு ஒருபொழுதும் அஸூயை ஏற்படலாகாதென்ற மனோநிச்சயத்தைக் கட்டித் தழுவவேண்டுமென்றதுபோன்றனவாம். தர்மப்பிரபுக்களே! இதுபோல் இன்னும் சிற்சிலவிதிகள் உண்டு. அவை யாதெனின், பரோபகாரம் முதலிய ஸத்கருமங்களில் ஆயாஸமற்றிருத்தல், ஸதாகாலமும் சந்தோஷகரமானஇருப்பு, நற்கருமங்களில் ஏற்படக்கூடிய லோபகுணத்தை மாற்றிக்கொள்ளுதல், விருப்பத்தில் வெறுப்பு, பாத்திரமறிந்து பிக்ஷையிடுதல், இந்திரியநிக்கிரகம், ஜீவகாருண்யம், குரு சுசுரூஷை, தீர்த்தாடனம், நல்ல சித்தவிர்த்தி, விக்கிரகாராதனம், இவைகளாம். இதனால் கலியுகமாந்தராகிய நமக்கு முமுக்ஷுக்களான ரிஷிபுங்கவர்கள் சுளுவான தர்மங்களையே விதியாக விதித்திருக்கிறார்கள் என்பதை நாம் பாராசரமாதவீயத்தால் அறிந்துகொள்ளலாம். நிற்க, புண்ணியகர்மங்களைச்செய்யும் புனிதர்களே! இனி புத்தியிற் சிறந்த பிரஹஸ்பதிபகவானால் அந்தந்த வர்ணங்களுக்குகந்தவாறு கூறப்பட்டிருக்கிற விசேஷதர்மங்களையும் சுருக்கமாகச் செப்புகிறேன். பிராமணன் வேள்விபுரிதல், புரிவித்தல், மறையோதுதல், ஓதுவித்தல், ஈதல், ஏற்றல், என்ற இந்த அறுவகைக்கர்மங்களுக்கு முறியவனும். க்ஷத்திரியனுக்கு யாகம்செய்தல், வேதமோதல், ஈதல், பிரஜாரக்ஷ

149605

ணம், யுத்தப்பயிர்ச்சி, தேவதாவிசுவாஸம், வேதியரின்பணிவிடை, அதிதிபூஜை, குரு சுசுரூஷை, கோஸம்ரக்ஷணம், என்ற தர்மங்கள் உரியனவாம். வணிகர்களுக்கு அத்தியயனம்செய்தல், வேள்விபுரிதல், தானம், பசுபரிபாலனம், தனவிஷயமான லேவாதேவி, கிருஷித்தொழில், வர்த்தகமாகிய இவ்வேழுகர்மங்களும் சொந்தமாம். சூத்திரர்களுக்குரிய தர்மங்களேவெனின், சுத்தி, பிராமண பணிவிடை, ஸத்தியம், க்ஷமை, வேதத்தில்விதிக்கப்படாத நமஸ்காரமந்திரங்கள், இவைகளாம். இந்தயுகத்தில் மங்வாதிஸ்மிருதிகளின்படி அனுஷ்டிப்பது ஜனங்களுக்கு அஸாத்தியமானதால் பராசரஸ்மிருதியே நாம் ஆசரிக்கத்தக்கதென்று வியாஸமாமுனி கட்டளையிட்டிருக்கிறார். முன்கூறின தர்மங்கள் இந்த ஸ்மிருதியில் கூறப்பட்டிருப்பவையேயன்றி,என்போன்ற ஸாமான்யஜனங்களின் அபிப்பிராயமன்று. யுகாதிகளில் ஜனித்திருந்த புண்ணியபுருஷர்கள், சரீரபலம், மனவலிமுதலியவற்றில் சிறந்தவரானதால், அக்காலங்களில் மங்வாதிஸ்மிருதிகளின்படியுள்ள விதிவிலக்குகளே அனுஷ்டிக்கப்பட்டுவந்தன. இந்த பாராசரமாதவீயம் என்னும் ஸ்மிருதியானது வேதவியாஸமகரிஷியின் பிதாவான பராசரமகாமுனிவரால் அருளிச்செய்யப்பட்டது. இவர் தபோநிஷ்டர் என்றபெயரை இளம்பருவத்திலேயே பெற்றதுமின்றி, தேவலோகமுதலானவிடங்களுக்கு ஸஞ்சரித்துக்கொண்டிருக்கிறபொழுது அவருடையபிதாவாகிய சக்திஎன்பவரை விசுவாமித்திரரால் ஏவப்பட்ட ராக்ஷஸனொருவன் கொன்று தின்றுவிட்டதாயறிந்தார். அக்கோபத்தால் அவர் அஸுரர்களை அழிக்கத்தக்க வேள்வியொன்று புரிந்து வருகையில் அனேகமாயிரம் ராக்ஷஸர்கள் அதில் மாண்டுபோகும்படி நேரிட்டது. இச்சங்கதியை ஸுரகுலபதியான புலஸ்தியபிரஜாபதியால் ஸூர்யகுலகுருவாகிய வஸிஷ்டமஹாரிஷிக்கறிவிக்கலாயிற்று. வஸிஷ்டரென்பவர் இறந்துபோன சக்தியின் பிதாவாகவிருந்தாலும், அவர் தத்துவஞானியானதால் புத்திரசோகத்தையடையாமல் தக்ஷணமே புலஸ்தியருடன் யாகசாலைக்குவந்து நிரபராதிகளான ராக்ஷஸரைக்கொல்லத்தக்க வேள்வியை நிறுத்திவிட ஆக்ஞைசெய்தார். அதுபோலுடனே யாகம் நிறுத்தப்பட்டதால், இவ்விருவரும் பராசரரைநோக்கி, அப்பா உனக்கு மகத்தானவைரமிருந்தும் குருவாக்கியத்தைப் பொறுமையுடன் ஏற்றுக்கொண்டதற்காக நீஸ்மிருதிபுராணாதிகளைச் செய்கிற ஸர்வசாஸ்திரஸம்பன்னனாகவும், தத்துவக்ஞானியாகவும் பவிக்கக்கடவதென்று ஆசீர்வதித்தனர். இவ்வாறு அனுக்கிரகிக்கப்பெற்ற பராசருடைய

4

பெருமையைப் புராணரத்தினமெனவிளங்கும் ஸ்ரீ விஷ்ணுபுராணத்தில் விரிவாகக் காணலாம். ஆகவே, இந்த மஹாத்மாவால் இயற்றப்பட்ட ஸ்மிருதியின் மஹிமையைப்பற்றி இங்கு எடுத்துரைக்க வேண்டுமென்பது அவ்வளவு அவசியமாகத்தோன்றவில்லை. ஆயினும், சற்றேறக்குறைய 600 வருஷங்களுக்குமுன் துங்கபத்திராநதி தீரத்தில் ஜனித்துப் புண்ணியபுருஷனாகவிளங்கின மாதவாசாரியரென்னும் மகாவித்வான் கலியில் இந்த ஸ்மிருதியே பிரமாணமாகக் கொள்ளத்தக்கதென்று அனேக சாக்ஷியங்களின்பேரில் ஸ்தாபித்திருப்பதால், ஆஸ்திகராகியநாம் அவ்விதமே ஆசரித்துக்கொண்டு வருகின்றோம். பிரஸ்தாபவிஷயமான தர்மசாஸ்திரத்தில் பளுவான அதர்மங்களுக்குச் சுளுவானபிராயச்சித்தங்களே விதிக்கப்பட்டிருக்கின்றன. பிர்மஹத்தி தோஷத்தினால் ஸம்பவிக்கிற பாபமானது ஸேதுதரிசனத்தினால் விமோசனமாகிவிடுமென்பது இந்த ஸ்மிருதியின் அபிப்பிராயம். இதை யோசித்துப் பார்க்கிறபொழுது புத்தியும் சக்தியும் அற்ற அற்பஆயுளையுடைய நம்மவர் யுகவல்லமையால் உச்சரிக்கத்தகாத பாபகிருத்தியங்களை அடிக்கடி அபரிமிதமாகச் செய்வார்களென்றும், அவைகளை யொழிப்பதற்கு ஸாமான்யமான பிராயச்சித்தங்களைஅன்றி வேறுவழிகள் இல்லையென்றும் உள்ளங்கை நெல்லிக்கனிபோல் தெரியவருகின்றது. ஆதலின், ஜனங்கள் பாபத்தொழிலில் முயலுவது யுகவல்லமையாதலால் இதன்பொருட்டு அவர்களைக் குறைகூறி நிந்தித்தல் குற்றமென்று தெரிந்துகொள்ளவேண்டும். கிருதயுகமானது தர்மங்களையீன்ற தாயானதுபோல், கலியுகமானது அவைகளைப்பக்ஷிக்கும் பேயாகவிருக்கின்றது. ஆதலின், இக்காலத்துஜனங்களுக்கு தர்மவிஷயங்களில் பற்றுதல் ஏற்படுகிறதில்லை. தர்மங்களிற் சிலவற்றை ஸ்தூலமென்றும் சிலவற்றை சூக்ஷ்மமென்றும் தர்மபுத்திரர் சொல்லியிருப்பதுபோல் தர்மவியாதரும் கூறியிருப்பதால், சௌசம், ஆசமனம், ஸந்தியாவந்தனம், முதலான கர்மங்களை ஸ்தூலதர்மமென்றும், பாஞ்சாலியைமணந்த பாண்டவர்களின் தர்மத்தை ஸூக்ஷ்மமென்றும் உணரவேண்டும், ஆனல் சிலர் இவருடைய தர்மத்தால் உலகநீதியும் வேதவாக்கியமும் நிஷேதிக்கப்படவில்லையா வென்ற கேள்வியைக்கேட்கக்கூடும். இந்ததர்மத்தைச்சொன்னவர்கள் தர்மதத்துவத்தை முற்றுமறிந்தவராகையால், தர்மஸ்வரூபிகளான திருமூர்த்திகள் இதை ஸூக்ஷ்மதர்மமென்றே நிர்ணயிக்கிறார்கள். வஸந்தகாலத்தில் புஷ்பங்களும், வெயிற்காலத்தில் வெப்பமும் அதிகரிப்பதுபோல், அந்தந்த யுகவிசேஷங்களுக்குத்தக்கபடி தர்மானுஷ்டா

னங்களும் மாறுபட்டிருக்கின்றன. உதாரணமாக முதல்யுகத்தில் தவமும், அடுத்தயுகத்தில் ஞானமும், முந்தினயுகத்தில் யக்ஞமும், இந்த யுகத்தில் தானமும் முக்கியமானவையென்று ஏற்பட்டிருக்கிறதைப் பார்த்துக்கொள்ளலாம். கிருதயுகத்தில் பாபிஷ்டன்வஸிக்கும் தேசத்தையும், திரேதாயுகத்தில் கிராமத்தையும், துவாபரயுகத்தில் குலத்தையும், கலியுகத்தில் அவனையும் நிஷேதிக்கவேண்டுமென்று தர்மசாஸ்திரம் முறையிடுகின்றது. இந்த அருமையானவிதிகள் அந்நாளில் அநுஷ்டானத்தில் இருந்ததால், ஏற்றலென்னும் தொழிலுக்குரிய ஏழைகளைக்காண்பதும் அறிதாகவேயிருந்தது. கலியின்வயது முதிரமுதிரத் தர்மங்கள் நசித்துக்கொண்டுவருமென்றும் விதிவழுவாமல் நடப்பவராயினும் அவரிடமிருந்து வேதவிதி தானாகவே நழுவிவிடுமென்றும் ஸ்ரீ விஷ்ணுபுராணத்திற் கூறப்படுகின்றது. ஆனதால் இந்தக் கலியுகத்தில் நெடுங்காலம் பிர்மசாரியாகவிருப்பதும், ஸந்நியாஸங் கொள்வதும், அம்மான்பெண்ணை மணம்புரிதலும், பசுவின்கொலையும், நரமேதத்தையொத்த வேள்விகளும், ஜேஷ்டபுத்திரனுக்குரிய ஜாஸ்தி தாயபாகமும், ஸந்ததியின்பொருட்டு தமயன்மனைவியை தம்பி புணருதலும், விதவைகளின் விவாஹமும், இதரவர்ணங்களில் ஜனித்த பெண்களை மணத்தலும், வேதியனுடைய கப்பல்யாத்திரையும் நிஷேதிக்கப்பட்டதென்று பிர்மபுராணமும் வேறுசில ஸ்மிருதிகளும் கூறுவதால், அதுவே உசிதமென்று அனைவராலும் ஆசரிக்கப்பட்டு வருகின்றது. இவ்விதம் அந்தந்தயுகங்களுக்கு உகந்தவாறு முனிசிரேஷ்டர்களால் விதிக்கப்பட்ட விதிவிலக்குகளை நழுவவிட்டவர்களுக்கு நேரிடுகிறபாபங்களைப் போக்கத்தக்க பிராயச்சித்தங்கள் விருத்தபராசரரால் கூறப்பட்டிருக்கின்றது. எலும்புஇல்லாத சிறியபிராணிகளைக் கொல்லுவதால் ஸம்பவிக்கிற பாபமானது ஒருநாள் உபவாஸத்தாலும் திருகால ஸ்நாநத்தாலும் பதினாறு பிராணயாமத்தாலும் நிவர்த்தியாகின்றது. எலும்பையுடைய சிறிய ஜந்துவைக்கொன்றால் மேற்கூறிய விதிப்படி இரட்டிப்பு பிராயச்சித்தம் செய்துகொள்ளவேண்டும். மனதாற்செய்தபாபம் ஒருபங்கென்றும், வாயாற்சொன்னபாபம் இருபங்கென்றும், சரீரத்தாற்செய்தபாபம் நாலுபங்கென்றும், பராசரமகாரிஷியின் அபிப்பிராயம். இதுபோல் மநு, யாக்கியவல்கியர், முதலியவர்களும் கூறியிருக்கிறார்கள். ஜனங்கள் அதர்மவழிகளில் பிரவேசிப்பது யுகவல்லமையாதலின், அதன்பொருட்டு அவர்களைக் குறைகூறி நிந்தித்தல் யுக்தமல்லவென்று முன் உரைத்திருந்தோம். அந்தவிதியானது பிராயச்சித்தம் செய்துகொள்ள சக்தியில்லாதவர்களின்பொ

ருட்டு ஏற்படுத்தப்பட்டதாகும். இதற்கு உதாரணமாக அரசர், சோரர், பிணி, முதலிய பயநிமித்தங்களால் நல்லொழுக்கங்களைத் தவறவிட்டவன் குற்றஞ்செய்தவனுகமாட்டானென்று சைவாகமத்தில் கூறப்பட்டிருக்கிறதைப் பார்த்துக்கொள்ளலாம். முன்னோர்களால் விதிக்கப்பட்ட ஆசாரங்களை சிரத்தையுடன் அனுஷ்டிக்கிறவர்கள் தீர்க்காயுளையும் ஸர்வஸம்பத்தையும் பெற்று இகலோகத்திலும் பரலோகத்திலும் ஸுகம் அடைகிருர்கள் என்பதால், அதை அனுஷ்டியாதவர்கள் அவைகளை அடைகிறதில்லையென்னும் கருத்து விளங்குகின்றது. ஸத்புருஷருக்குறிய லக்ஷணம் ஆசாரம் என்பதை ஸ்ரீ மகாபாரதத்திலுள்ள ஆனுசாஸனிக பர்வத்தால் அறியலாம். மேற்படி ஆரண்ய பர்வத்தில், கோபம், பொருமை, அகங்காரம், பிடிவாதம் முதலிய துர்க்குணங்களற்று, நடுவுநிலைமை, சாந்தி முதலிய நற்குணங்களைவகித்த சிஷ்டர்களின் அனுஷ்டானமே ஆசாரமென்று கூறப்படுகின்றது. இவ்வாசாரங்கள் வேதவிதியானதால், அவைகளைக் கூர்மபுராணம் கூறுகிறபடி ஆஸ்திகபுத்தியுள்ளவனுக்கும் தன்னையுணர்ந்தவனுக்குமே அறிவிக்கலாகும்என்றது ஸ்மிருதிகளின் கோட்பாடு. ஆனதால் வேதத்தால் விதிக்கப்பட்ட தர்மங்கள் தேசாபிமானிகளின் கருத்துப்படி ஆத்மவிசாரணைசெய்த நிவர்த்தி புருஷனையேநாடிச் செல்லுகின்றன. நிவர்த்தி புருஷனுனவன் மேலே சொன்ன தர்மங்களை உலக நன்மையின்பொருட்டு அனுஷ்டித்து அவைகளால் ஏற்படக்கூடிய இன்பமாகிய பயன்களைத் தான் ஏற்காமல் சாக்ஷியாகவிருக்கின்றான். நமது பெரியோர்கள் ஊத்தைக்கு இடம்கொடுத்தாலும் வார்த்தைக்கிடம் கொடுக்கமாட்டார்கள். அன்றியும், தத்துவசாஸ்திரமானது தர்மங்களுக்குரிய கர்மங்களை ஈசுவரார்ப்பணமாகச் செய்யவேண்டுமென்றும், அப்படிச் செய்யாதவிஷயத்தில் உலகமானது நடைபெருதென்றும் விரிவாகக் கூறுகின்றது. அவ்விதமிருக்க, ஆசாரச் சீர்திருத்தக்காரர்கள் எதை ஆதாரமாக வைத்துக்கொண்டு நமது ஜாதிவேற்றுமைகளைத் தியாகம்செய்யச் சொல்லுகிருர்கள் என்ற விஷயத்தைப்பற்றி நாம் இப்பொழுது கொஞ்சம் ஆலோசிக்கவேண்டும். ஆனுசாஸனிக பர்வமானது காலதேசவர்த்தமானங்களுக்குத் தகுந்தபடி தர்மங்கள் பலவாருக விருக்குமென்று கூறுகின்றது. அந்த தர்மங்களுள் காலதர்மமென்றும் ஆபத்து தர்மமென்றும் இருவகைத் தருமங்களிருக்கின்றன. அதற்கனுஸரணையாக சைவாகமமானது அரசர், சோரர், பிணி, முதலிய நிமித்தங்களால் நல்லொழுக்கங்களைத் தவறிநடந்தவர்கள் குற்றஞ்

செய்தவர்களாகமாட்டார்களென்று விதி பகருகின்றது. இந்தவிதிகளால் ஸகோதரபாவத்தை விர்த்திசெய்துகொள்ளும் தர்மமானது தர்மபுத்திராலும் தர்மவியாதராலும் கூறப்பட்டபடி பாஞ்சாலியை மணந்த பாண்டவர்களின் தர்மத்தைப்போல் ஸூக்ஷ்மதர்மமாகவிருக்கவேண்டுமென்று தோன்றுகின்றது. அன்றியும் வஸந்தகாலத்தில் புஷ்பமும், வெயிற்காலத்தில் வெப்பமும் அதிகரிப்பதுபோல், காலத்தை யனுஸரித்து விதிகளும் மாறுபடக்கூடுமென்பது பராசரமகரிஷியின் அபிப்பிராயம். இந்தியாவுக்கு இப்பொழுது மேற்சொன்ன குறைகள் ஸம்பவித்திருப்பதால், ஆசாரச் சீர்திருத்தமாகிய தர்மமானது காலத்துக்கும் ஆபத்துக்கும் ஏற்பட்ட தர்மமேயாகும். அதற்கு உதாரணமாக பிராமணர்களுக்கு யுத்தப்பயிர்ச்சிசெய்ய அதிகாரமில்லாத முற்காலத்தில் பரசுராமன், துரோணாசாரி, கிருபாசாரி, முதலிய விப்பிரசிரேஷ்டர்கள் ரணகளஞ்சென்று போர்புரிந்திருக்கிறதைப் பார்த்துக்கொள்ளலாம். மறையவர் குலமங்கையை மன்னவர் மணம்புரியலாகாதென்பது நமது தர்மசாஸ்திரங்களின் கோட்பாடு. அவ்விதமிருக்க, விப்பிரகுலத்திலுதித்த சுக்கிராசாரியானவர் எந்த தர்மத்தை ஆதாரமாக வைத்துக்கொண்டு தன் புத்திரியாகிய தெய்வயானையை யயாதிமஹாராஜாவுக்கு விவாஹம் செய்துகொடுத்தார்? ராமாயணத்திலுள்ள சம்புகன் என்ற சூத்திரமுனியின்கதையால் அயோத்தியாபுரியானது மனுநீதிகுன்றாமல் ஆட்சிபுரியப்பட்டதென்று தெற்றென விளங்குகின்றது. அவ்விதமிருக்க, அயோத்திக்கு இறைவனான கோதண்டதீக்ஷாகுருவை வாலியின் ஸம்ஹாரவிஷயத்தில் உலகமேன் குறைகூறவேண்டும்? மகா பதிவிரதாசிரோமணியான ஸீதாப்பிராட்டியாருக்கு கற்பழிவில்லையென்பதைப் பெரியோர்களால் நிச்சயமாகத் தெரிந்திருக்கிற ஸ்ரீ ராமபிரான், கர்ப்பிணியான அம்மாதை எந்தநீதியினால் மறுபடியும் வனத்திற்கனுப்பினார்? உலகத்தில் தாயினுடைய நிலைமை ஸர்வோத்கிருஷ்டமானது. அந்த நிலைமையை எல்லோரும் நன்றாக அறிந்தேயிருக்கிறார்கள். தாயின் பிரியத்திற்கு மேற்பட்டபிரியம் கடவுள்பிரியம் ஒன்றுதான். ஸர்வஸங்கபரித்தியாகஞ்செய்த ஸந்நியாஸிகளுங்கூட மாதுருகர்மத்தை தவிர்க்கலாகாதென்று விதியும் விதிக்கப்பட்டிருக்கின்றது. அங்ஙனமிருக்க, பராசக்தியைப்போன்ற தன்னுடைய அன்னையாகிய ரேணுகாதேவியைப் பரசுராமன் எந்தநியாயத்தினால் ஸம்ஹரித்தார்? ஐயா! இவைதான்போகட்டும். துச்சாஸனன் ஸகலவிதத்தாலும் பூஜிக்கத்தக்க மகா ராஜபத்தினியாகிய பாஞ்சாலியை இழுக்க, அவள் வஸ்

திரம் ஒருபுரம் அவிழ்ந்து அங்கங்கள் வெளிப்பட, உடனே அவள் நாணத்தினுல் மெய்குன்றிக் கைகளினுல் அவயவத்தை மறைத்துக் கொண்டு, கண்ணீர் தாரைதாரையாய்ப் பெருகக் கோவென்று கூவி யழுது அவனைப்பார்த்து, அடா பாவி! என்னைத் தொட்டு இழுக் காதே. நான் இப்போது புஷ்பிணி. ஒற்றைவஸ்திரம் தரித்திருக் கிறேன். அநியாயஞ் செய்யவேண்டாம். காலமுள்ளமட்டும் நரகத்தை அனுபவிக்கவேண்டும். லோகநாதராகிய எனது நாயகரை இப்படி அலக்ஷியம்செய்து என்னைச் சபையின் நடுவிலிழுப்பது உனக்கு நன் மையன்று. உனக்குக் குலமானமாகிலுமில்லையா? என்று சொல்லக் கேட்ட அந்தப்பாதகன் அடி துஷ்டச்சிறுமீ! ஏது கொஞ்சமும் பய மில்லாமற் பேசுகிருய்? நீ ஐவரைப்புணரும் வேசி. உனக்கு மான மென்ன? நாணமென்ன? நீ வெகுகொழுத்தவளல்லவா? பத்திரம். பிதற்ருதே. எங்களுக்குத் தாஸியாயினுய். எஜமான ருத்திரவின் படி நடக்காமற்போனுல் சிக்ஷை கிடைக்கும். பதருதே. வெள்ளாட் டியைப் புஷ்பிணியென்று பார்ப்பதுமுண்டோ? நீ ஒற்றைவஸ்திரத் தோடிருந்தாலென்ன? வஸ்திரம் இல்லாமல்தா னிருந்தாலென்ன? அடி வேசி! நாங்கள் ராஜாக்கள். எப்படிவேண்டுமோ அப்படிச் செய்வோம். எங்களைத் தடுப்பவர் யாரிருக்கிருர்கள்? இப்போது கிருஷ்ணனையும், வியாஸனையும், வீமார்ச்சுனர் முதலானோர்களையும் கூவியழைத்துக் காக்கச்சொல்லடி. தாஸியாகியநீ துரியோதனமகா ராஜன் அழைக்கையில் வந்து அவர்பேச்சைக்கேட்டு அவரிஷ்டப்படி நடக்கவேண்டும். உன்னை நிர்வாணமாய் நிறுத்திப் பார்க்க அவருக்கு மனமிருக்குமாகில், நீ அப்படியே இருக்கவேண்டும். அதோ பாரடி வெள்ளாட்டி. உன் புருஷர் குறும்பாடுகள்போலத்தலை குனிந்து கொண்டிருக்கிருர்கள். அவர்களும் எங்கள் காலால் இட்டவேலை யைத் தலையால் நிறைவேற்றவேண்டிய அடிமைகளானுர்கள். இன் னும் உனக்கென்ன இறுமாப்பு? என்று இப்படி மனம்போனபடிப் பிதற்றி யிழுக்கவே, அவள் நடுநடுங்கி,ஒன்றும்தோற்ருமல் வியஸனத் தில்மூழ்கிப்போய் அவிழாநின்றகூந்தலைக் கையாலணைத்துக்கொண்டு காந்தாரியாகிய மாமியைக் கூவித் தொண்டையும் வரண்டு, அந்த ஸபையி லிருப்பவர்களைநோக்கி, ஐயோ! இந்த ஸபையிலிருப்பவர்க ளெல்லாம் வேதசாஸ்திரங்களை நன்ருய்ப் படித்தவர்களல்லவா? தர்ம வான்களல்லவா? மகா சூரர்களாயிற்றே. இப்படிப்பட்டவர்கள் முன் னிலையில் இந்தப்பாதகன் என்னை இப்படி அநியாயம்செய்து இழுக் கின்ருனே. இந்தக்காலத்தில் இவ்விதமாய் நான் பெரியோர்களிடத்

தில் வரலாகுமா? இக்கொடியசெய்கையை ஒருவரும் தடுப்பாரில்லை யா? இது வீணாய்ப்போகாது. இவனுக்குத் தேவேந்திரன் ஸகாய மாய்வந்தாலும் பாண்டவரிடத்திலிருந்தும் இவன் தப்பமாட்டான். அவர்களின் ஆயுதத்திற்கு இரையாகப்போகிறான். ஸந்தேகமில்லை. இப்போது அவர்கள் தர்மம் என்னும் கயிற்றினாற் கட்டுண்டு சும்மா விருக்கிறார்கள். தர்மத்தின் சூக்ஷ்மம் அவர்கள் அறிந்தவரென்பது பெரியோர்களுக்கே தெரியும். இவர்கள் சும்மாவிருந்தாலும் தெய் வம் சும்மாவிராது. இப்படிப்பட்ட கஷ்டத்தை நான் அடைவதற்குக் காரணம் என் விதியேயன்றி வேறன்று. ஒருவர்மீதிலும் பழியில்லை. இல்லாவிட்டால் அஸகாயசூரராகிய பாண்டவர்களின் இஷ்டபத்தினி யாகிய என்னை ஒரு அற்பன் ஸபைநடுவில் இழுத்துவருவானா? இந்தத் துராத்மாவினுடைய பலத்தை அவனைப்போன்றவர்கள்தான் புகழ்ந்து பேசுவார்கள். சீ! சீ!! இவனையும் இவனை இப்படிச்செய்யும்படி ஏவி னவனையும் சுடவேண்டாமா? பரதகுலத்தில் நிலைபெற்றிருந்த தர்மம் இன்றுதான் நாசமடைந்தது. ராஜதர்மமும் பாழாகப்போயிற்று. குல தர்மமென்னும் கடலும் இன்றுதான் கரையைக்கடந்தது. அப்படிக் கில்லாமற்போனால் மஹானுபாவராகிய பீஷ்மரும், துரோணரும் ஸத் தியம் பேசாமலிருப்பார்களா? ஓகோ! இச்சபையில் தர்மம்அறிந்த வர்கள் ஒருவருமில்லையென்று நினைக்கவேண்டியதா யிருக்கின்றது. இருந்தால் இவ்வநியாயத்தைக் கவனியாமலிருப்பார்களா? அவர்க ளாக நீதிசொல்ல மனமில்லாதவர்களாயிருந்தாலும் எனது வினாவுக் காயினும் விடையளிக்கவேண்டுமென்று கூறுகிறவரை அச்சபையி லிருப்பவர்கள் சும்மாவிருக்கலாமா? அதுபோகட்டும். அன்றியும் அம்மாது ஸபையிலிருக்கிற பெரியோர்களைப்பார்த்து, ஓ ஆசார்யர் களே! ஓ தர்மவான்களே!! ஓ ஞானவான்களே!!! நான் துரியோத னாதியால் ஜயிக்கப்பட்டேனா? ஜயிக்கப்படவில்லையா? இதை தர்மத் திற்கு ஒத்தபடிச் சொல்லுங்களென்றுசொல்லி வியஸனாக்னியிலும் இரட்டித் தகோபாக்னியை பொருந்தியிருக்கும் தன்கணவரை வெகு தீக்ஷணமாகிய கடைக்கண்ணினால் நோக்கினாள். அந்நோக்கம் பட்ட மாத்திரத்திலே பாண்டவர்களுக்கு ராஜ்யமுதலாகிய செல்வங்களைப் போக்கடித்தபோதும் உண்டாகாத மகா துக்கமொன்று பொங்கிப் பாயவே, நெய்யாகுதி செய்யப்பட்டதுபோல் கோபாக்கினியானது திகுதிகென்று ஜ்வலித்தது. அப்போது துச்சாஸனன் இவள்நோக் கிய குறிப்பும், அவர்களின் இருப்புமறிந்து திரௌபதியை சீ! சீ!! வாடி, வெள்ளாட்டி. தர்மமும் ஸத்தியமும் உனக்கேது? என்னமோ

மயக்குகிறாய், குலுக்குகிறாய், வாடி இங்கேயென்று பிடித்திழுத்து குல் என்று சிறித்தான். அப்போது கர்ணன் அடா துச்சாஸனா! சரி, சரி, நன்றாய்ச் செய்தாயென்றான். சகுனியானவன் இவனுக்கு ஸமானமாகிய தைரியசாலி கிடையாது. இவனே புத்திசாலி என்றான். துரியோதனன், துச்சாஸனா! இப்போதுதான் நீ எனக்குத் தம்பியென்று மெச்சினேன் என்றான். குருடன் முகமலர்ச்சியோடு புன்னகைகொண்டிருந்தான். இப்படியிருக்கையில் பீஷ்மர் திரௌபதியைப்பார்த்து, அம்மா ஸௌபாக்கியவதி! நாங்கள் ஒன்றும் சொல்லமாட்டாதவர்களாக இருக்கிறோம். இப்போது நீகேட்ட வினாவுக்கு தர்மசூக்ஷுமத்தைநோக்கி ஒன்றும்சொல்ல முடியவில்லை. அதென்னவென்றால், ஸ்திரீயாய் இருக்கிறவர்கள் பர்த்தாக்களின் ஸொத்தாயிருக்கிறார்கள். அந்த பர்த்தா ஜெயிக்கப்பட்டபோதே அவளும் ஜயிக்கப்பட்டவள்தான். யுதிஷ்டிரனோ எதைத்துறந்தாலும் தர்மத்தைத் துறக்காதவன். அவனே நான் ஜயிக்கப்பட்டேன் என்கிறபோதே நீயும் ஜயிக்கப்பட்டவள்தான். ஆகிலும் இன்னமும் அதில் ஒரு சூக்ஷுமம் இருக்கின்றது. அது எனக்கு இப்போது தோற்றவில்லை என்று சொன்னாரே அவ்விதம் சொல்லலாமா? அதைக்கேட்ட திரௌபதி மறுபடியும் ஸபையிலிருப்பவர்களைப்பார்த்து, ஓ பெரியோர்களே! யுதிஷ்டிரமஹாராஜா வலுவில்வந்து சூதாடவில்லை. அவர் பாட்டுக்கவர் ராஜ்யத்திலிருந்து தர்மபரிபாலனம் பண்ணிக்கொண்டிருக்கையில், அவருடைய செல்வங்களைக் கவரவேண்டுமென்று துஷ்டரும், வஞ்சகரும், அஸத்தியவான்களுமாகிய இவர்களெல்லோரும் துராலோசனைசெய்து மந்திரியைக்கொண்டு அழைப்பித்து சூதாடுவதில் இஷ்டமில்லாதவரும் அதில் ஸாமர்த்தியமில்லாதவருமாகிய அந்தத் தர்மராஜாவை வலுவில் பிடித்திழுத்து ஆடவைத்து மோசத்தினால் ஸகலத்தையும் அபகரித்து மனமறிய அநியாயம் செய்கிறார்கள். அவருக்கோ நன்றாகச் சூதாடத் தெரியாது. இந்தப் பாவிகள் அதில் வல்லவர்கள். அவரோ கபடில்லாதவர். இவர்கள் கபட்டின் அவதாரபுருஷர்கள். அவரோ ஸத்தியஸந்தர். இவர்கள் அஸத்தியவான்கள். இப்படி ஒரு தன்மையாலும் பொருத்தமில்லாமலிருக்க, அவரோடு இவர்கள் சூதாடியது நியாயமாமா? இப்படிப்பட்ட நியாயத்தை உலகம்தான் ஒப்பலாமா? தர்மம்தான் ஏற்குமா? போகட்டும். பொருள்களையும் ராஜ்ஜியத்தையும் பறித்ததுபோதாமல் அப்பொருள் முதலியவற்றை வைத்தாடிய அவரையும் ஆடி வெற்றிகொண்டோமென்று சொல்லி இப்படிப்பட்ட கொடிய அநியாயம் செய்கிறார்

களே. இது தர்மந்தானு? இந்த ஸ்தலம் மனிதர்களில்லாத காடல்
லவே. ஸகல தர்மங்களையும் நியாயங்களையும் அறிந்த பெரியோர்கள்
கூடியிருக்கின்ற ஸபையல்லவா? இத்தன்மையான ஸபையில் தர்மா
தர்மமும் நியாயாநியாயமும் தேராமற்போனுல் மற்றெங்குதான்
தேரும்? இங்கே இருக்கிறபேர்களெல்லாம் மக்களைப்பெற்றுப் பெண்
டீரோடு கூடி எல்லா ஸுகதுக்கங்களையும் அறிந்தவர்களே யன்றி,
ஒன்றும் தெரியாதவர்களல்லவே. இப்படி யிருக்கிறபடியினுலே என்
கேள்விக்கு உத்தரவு கொடுக்கவேண்டும். இல்லாவிட்டால் இந்த
ஸபையாருக்குப் பெரும்பாவம் நேரிடும். எந்தஸபையில் அறிவினுல்
முதிர்ந்தவர்களில்லையோ அது ஸபையுமன்று. எவர்கள் தர்மத்தைச்
சொல்லாமலிருப்பார்களோ, அவர்கள் அறிவினுல் முதிர்ந்தவர்களு
மல்லர். எதில் ஸத்தியம் என்பது இல்லையோ அது தர்மமுமன்று.
எது மோசத்தோடு கூடியதோ அது ஸத்தியமல்ல. இந்த தர்மவிசா
ரணையை நான் பெரியோர்களிடம் கேட்டறிந்திருக்கிறேன். ஆதலின்,
எனதுகேள்விக்கு மறுமொழி சொல்லாமற்போனுல் இது ஸபையு
மல்ல. இவர்கள் பெரியோர்களு மல்லர். நடந்தஸங்கதிகள் ஸத்திய
முள்ளது மல்ல. ஆதலால் காரணத்தை நன்றுய்ச் சோதித்து,
தாக்ஷிண்யப்படாமலும், பயப்படாமலும், தர்மத்தையும், ஸத்தியத்
தையும் எதிர்நோக்கி உத்தரம் சொல்லவேண்டுமென்று பாஞ்சாலி
சொல்லிக்கொண்டே மீட்டும் கடைக்கண்ணினுல் தன் கணவர்களை
நோக்கினுள். அந்தஸமயத்தில் நாசமடையப்போகிறவனுகிய துச்சா
ஸனன் எல்லோரும் செவிகளை மூடிக்கொள்ளத்தக்கதான கொடுஞ்
சொற்களைச் சொல்ல வாரம்பித்தான். பிடித்திழுக்கிறதும் அடிக்
கிறதுமான அனேகம் தொந்தரவுகளையும் செய்தான். இப்படிப் பல
விதமாய் அவமானப்படாநின்ற திரௌபதியைப்பார்த்த பீமஸேன
னுனவன் மனம் ஸகிக்காமல் அடங்காத வியஸனத்தையும் கோபத்
தையும் அடைந்து ஸமீபத்திலிருக்கும் தமையனுரைப்பார்த்துப் பெரு
மூச்சுவிட்டு உதடுதுடிக்க ஒருவார்த்தைசொல்லுகிறுன். ஓ, அண்ணு!
நீர் எல்லாம் தெரிந்தவராகவிருந்தும் மூடருடன்கூடிச் செய்யாத
செய்கைகளைச் செய்தீர். லோகத்தில் சூதாடுகிறவர்கள் வெகுபேர்க
ளுண்டு. அவர்களெல்லாம் பொருள், ரத்நம், வாகனம் முதலான
வைகளை வைத்தாடுவார்களேயல்லாமல், தங்களுடைய தாஸி தாஸர்
களைக்கூட வைத்தாடமாட்டார்கள். அவ்வளவு மானமும் தயையும்
உமக்குப் பாணிக்கிரகணம்செய்த பத்நியினிடத்தில் எள்ளளவும் இல்
லாமற்போயிற்று. கொண்ட பெண்டாட்டியைப் பந்தயம்வைத்தாடி

யதைக் கண்ணினால் பார்த்ததுமில்லை. காதினால் கேட்டதுமில்லை. நாம் திக்குவிஜயம்செய்து சேகரித்துவந்த பொருள்களையும், பல அரசர் காணிக்கையாய்க் கொடுத்த திரவியங்களையும், ரத்நங்களையும், வஸ்திரங்களையும், வாகனங்களையும், கோட்டை, வீடு, வாசல், தோட்டம், ஸபை முதலியவைகளையும் பந்தயம்வைத்துத் தோற்றீர். அதனால் எனக்கு எவ்வளவும் வியஸனமில்லை. ஏனென்றால், இப்படி அநேகம் பொருள்களை நினைத்தபோதே ஸம்பாதிக்கலாம். எங்களைத் தோற்றதினாலும் துக்கமில்லை. நாங்கள் சூரர்கள். ராஜாதிராஜராகிய உம்மைத் தோற்றதற்குக் கிஞ்சித்து வியஸனப்படவேண்டியதாயிருக்கிறது. திரௌபதியானவள் ஸ்திரீஜாதி. மஹா ராஜகுமாரி. நம்மைக் கைப்பிடித்தவள். நம்மையே நம்பினவள். அப்படிப்பட்டவளை இந்தப் பாதகர்கையில் ஒப்புவித்தீர். இதைக்குறித்து காலவித்தியாஸத்தினால் உமக்குப் புத்திகெட்டதென்று நினைக்கவேண்டி யிருக்கின்றது. அவர்கள் நமது உயிரினுஞ் சிறந்தவளாகிய பாஞ்சாலியை வேண்டியபடி மானபங்கம் செய்யவும் நாம் எதிரிலிருந்து சும்மா பார்த்திருக்கவும் பெரியோர்களெல்லாம் வருந்தி எதுவும் பேசாமல் சும்மாவிருக்க நேரிட்டதைக்காட்டிலும் வேறு என்ன துக்கம் நமக்கு ஸம்பவிக்கவேண்டும்? நீர் மகாராஜா. ஸகலத்திற்கும் ஸ்வதந்திரர். எந்தஸொத்தை எப்படிச் செய்யவேண்டுமானாலும் தடுப்பார் யாருமில்லை. ஆகிலும் இவளை அவர்களிடத்தில் ஒப்புவித்தது மிகவும் அதர்மம்தான். நீர் இப்போது செய்தகாரியம் எல்லாம் பாவத்திற்குக்காரணமாகிய காரியமேயன்றி, நற்செய்கைகள் அன்று. நீர் தர்மம் அறிந்தவருமல்ல. திரௌபதியைக் கண்டெடுத்துப்பார்த்த நிமிஷத்திலேயே அந்தப்பாதகரைக் கையிலேந்திய கதாயுதத்தினாலே இருந்தவிடம்தெரியாமற் போகும்படி செய்வேன். ஆனால் என்னைப் பராதீனனாக்கிவிட்டீர். அதனால் என்கோபத்தையும் பராக்கிரமத்தையும் இந்தஸபையில் உபயோகமாகாதபடி பாழாக்கவேண்டியிருக்கின்றது. ஆயினும், எனக்கு ஸகிக்கமுடியவில்லை. இப்போது என்ன செய்யவேண்டுமென்றால், நீர் எந்தக்கையினாலே பாச்சிகை ஆடினீரோ அந்தக்கையை தீயிற்கொளுத்தி சாம்பலாக்கவேண்டுமென்று சொல்லிக் கோபாவேசத்துடன் ஸகாதேவனைநோக்கி, அடே ஸகாதேவ! நீ இப்போதேபோய் நெருப்புக்கொண்டுவா. இந்த கெட்டகையைக் கொளுத்திப்போடுகிறேனென்று பீமஸேனன் திரஸ்காரமாய்ப் பேசினான். எவ்வளவுதானிருந்தாலும் அந்த தர்மபுத்திரரைப்பார்த்து அப்படி திரஸ்காரமாய்ப் பேசலாமா? அது பெரியோர்களும் ராஜாக்

களும் நிறைந்திருக்கிற ஸபையல்லவா? ஆகையால் அதைக்கேட்ட அர்ஜுனனவன் பீமஸேனனைப்பார்த்து, அண்ணா! நீர்யேன் கொஞ்சமும் யோசிக்காமல் மகாராஜாவாயும் நமக்கு மூத்தவராயும் மகா தர்மசீலராயுமிருக்கிற யுதிஷ்டிரரைப்பார்த்துக் கொடுமையாய்ப் பேசுகிறீர்? நீர் ஒருபோதும் இப்படிப் பேசினதில்லையே. உம்மீதிற் குற்றமில்லை. நமக்குள் ஒருவருக்கொருவர் பகையாகவேண்டுமென்று சத்துருக்கள் உமக்கு இப்படிப்பட்ட கோபம்வரும்படி செய்ததினாலே நீர் அவ்வண்ணமே நிறைவேற்ற முயலுகிறீர். எதேது வரவேண்டுமோ அவைஎல்லாம் வந்துதானே தீரும். ஆதலின், நீர் மனம் பதறிச் சத்துருக்களின் எண்ணத்தை நிறைவேற்றாதேயும். இனியாகிலும் தர்மத்தின்மீது திருஷ்டிவைத்து வாயைமூடும். இதைக்கேட்டால் நமதுபகைவர்கள் நகைப்பார்கள். மகாநுபாவராகிய தமையனாரை திரஸ்காரம்செய்யாதேயும். இந்த துஷ்டர் வெகு தர்மசீலரும் ஸத்தியஸந்தருமாகிய நமது தமையனாரை வலுவில் சூதாட அழைத்து மோசம்செய்து எல்லாவற்றையும் பறித்துக்கொண்டார்கள். இதனால் நமக்கவமானமில்லை. கையிலாகாமற் பறிகொடுத்தால்தான் அவமானமாகும். இவர் தர்மத்தையும் ஸத்தியத்தையும் பெரிதாயெண்ணி ஸகலத்தையும் பொறுத்துக்கொண்டிருக்கிறார். இது இவருக்கு மகா மகிமைக்கு இடமாயிற்று. நாமும் அப்படியே அவரை அனுவர்த்தித்து இருக்கவேண்டுமேயன்றி, மீறலாகாது என்று சொன்னான். மறுபடியும் பீமன் அர்ஜுனனைப்பார்த்து, நீசொல்லியது எல்லாம் ஸரிதான். எனக்கும் தெரியும். ஆனாலும் திரௌபதியைப் பந்தயம் வைத்தாடிய கைகள் சுடத்தக்கவையேயன்றி, பூஜிக்கத்தக்கவையல்லவென்றான். அப்பொழுது திரௌபதியை நீசனாகிய துச்சாஸனன் கொடுமையாய்ப் பற்றி யிழுத்துக்கொண்டுபோகிறதும் ஸபையார் ஒன்றும் சொல்லாமலிருக்கிறதும் பார்த்து திருதராஷ்டிரன் புத்திரரில் ஒருவனாகிய விகர்ணன் என்பவன் வெகு கோபம்கொண்டு ஸபையிலிருக்கும் பீஷ்மர் முதலாகிய பெரியோர்களைநோக்கி, மிகவும் பரிதாபத்தோடு இதனடியில்வருமாறு கூறுகின்றான். ஓ, ஸபையோர்களே! நீங்கள் திரௌபதிசொல்லிய பேச்சைக்கேட்டு ஏன் பிரதியுத்தரம் சொல்லாமலிருக்கிறீர்கள்? அவிவேகத்தினால் நீங்களும் சொல்லாமல் உங்களைப்பார்த்து நாங்களும் சொல்லாமலிருந்தால் எல்லோரும் நரகத்திற்குப் பாத்திரராக பவிப்போம். பீஷ்மரும், திருதராஷ்டிரரும், புத்தியிற்சிறந்த விதுரரும், மற்றக் கௌரவரும் ஒன்றும் சொல்லாமலிருக்கிற காரணம் என்ன? இவர்கள்தான் இப்படியிருக்

கட்டும். பிராமணோத்தமரும், ஆசார்யருமாகிய துரோணரும், கிருபரும், எந்த தாக்ஷிண்யத்தினால் வாயைமூடிக்கொண்டிருக்கிறார்கள்? இவர்களும் இருக்கட்டும். ஏன் பரதேசமன்னர்கள் வாயைமூட வேண்டும்? இத்தனைநாழிகை சும்மாவிருந்ததுபோதும். இனி யாவரும் அச்சம், அபிமானம், தாக்ஷிண்யம், குரோதம் முதலியவைகளை விட்டு, தங்கள், தங்கள், புத்தியுள்ளவரைக்கும் யோசித்து அவரவர் கருத்தை வெளியிடுங்கள் என்று இப்படிப் பலதரம் விகர்ணன் சொல்லியும் ஒருவரும் பேசாமலிருந்தார்களே. அப்படி யிருக்கலாமா? அதனால் அவனுக்கு அதிககோபம் ஜனித்து ஒருகைமேல் மற்றொருகையைவைத்து அறைந்து ஸபையைப்பார்த்து மறுபடியும் சொல்லுகிறான். ஓ, ஸபையோர்களே! நான் இப்போது தர்மத்தைக் கேட்டால் நீங்கள் சும்மாவிருக்கிறீர்கள். நீங்களிருந்தால் இருங்கள். எனக்குத்தோற்றியதை நான் சொல்லுகிறேன். அதைக் கேட்பீர்களாக. உலகத்தில் அரசருக்கு நான்கு பெருங்குற்றங்களுண்டு. அவையாவன, ஓயாமற்கட்குடித்தல், ஓயாமல் வேட்டையாடல், ஓயாமற்சூதாடல், ஓயாமல் மங்கையரைப்புணர்தல், இவைகளுக்குட்பட்டவன் தர்மாதர்மங்களை அறியான். அநியாயத்திற்கே உடன்படுவன். உலகத்தாரும் அதைப் பார்த்துக்கொண்டுதானிருக்கிறார்கள். இந்தச்சகுனியோ எப்போதும் சூதாடுந்தொழிலுடையவன். அவனுக்கு வேறுகாரிய மொன்றுமில்லை. ஆனதுபற்றி அவன் தர்மத்தைக் கொஞ்சமுமறியான். இப்போது அப்படியே பாண்டவர்களை வலுவிற் சூதாட அழைத்து மோசஞ்செய்து எல்லாச்செல்வங்களையும் கவர்ந்துகொண்டு அவர்களையும் ஜயித்ததாக ஏற்படுத்திவிட்டான். இந்தஏற்பாடு மோசச்செய்கையா லுண்டானதேயன்றி, நியாயப்படி உண்டானதல்ல. இஃதிப்படியிருக்க, இவ்வளவோடே நிற்காமற்பாஞ்சாலியைவைத்தாடச்சொல்லி, அவருக்குப்போதித்து அவளையும் ஜயித்ததாய்ப் பராக்கிரமித்தான். அவரோ, அச்சூதில் வெறிபிடித்து அவன் மோசத்திற்குட்பட்டு தர்மமாய் ஆடினார். மற்றவையெல்லாம் இருக்கட்டும். திரௌபதியைப் பந்தயம்வைக்க அவருக்கு அதிகாரமில்லை. அவர் முன்னமே தம்மைத்தோற்றுக்கொண்டார். ஆகையால் அவளை ஜெயித்தேனென்றது ஸத்தியமன்று. ஆதலின், இந்தஸபையில் அவளை இழுத்துவந்தது அநியாயமேயாகும் என்று விகர்ணன் சொன்னவார்த்தையினால் முன் பீஷ்மர்கூறின நீதியானது சோர்வடையவில்லையா? அதுவுமிருக்கட்டும். ஸபையிலிருப்பவர்கள் விகர்ணன்சொன்னதைக்கேட்டு ஸரிதான் என்று ஸம்

மதித்துச் சகுனியைத் தூஷித்தார்கள். அப்போது ஸபையானது சிலநேரம் ஒலிவடிவாயிருந்தது. அந்தகோஷம் ஒய்ந்தபின் கர்ணன் விகர்ணனைநோக்கி, அடா விகர்ண! உனக்கு எப்போதும் இப்படிப் பட்ட வெறிகுணம் உள்ளதுதானே. இன்றைக்குப் புதிதல்லவே. தேகத்திலிருக்கும் நோயானது அந்தத் தேகத்தின்கண்ணுள்ள ஆத்மாவுக்குத் தூக்கம் உண்டாகும்படி செய்வதுபோல், நீ கூடப் பிறந்தவனாகிய துரியோதனனுக்குக் கேடுவரும்படி யத்தனிக்கிறாய். மேலும் அந்தவியாதி தேகத்தில்நின்றும் பிறந்து அந்ததேகத்தை யழிப்பதுபோலவும், அரண்யத்தில்நின்றும் பிறந்த அனல் அவ்வரண் யத்தை அழிப்பதுபோலவும், நீ திருதராஷ்டிரனுக்குப் புத்திரனா யிருந்து அவரை துக்கக்கடலில் அமிழ்த்த முயலுகிறாய். உனது கெட்ட ஸ்வபாவத்தையே காட்டுகிறாய். பீஷ்மர், துரோணர், கிருபர், அசுவத்தாமா, பாகிலிகர், சோமதத்தர், பூரிச்சிரவஸ், பூரி, விதுரர், திருதராஷ்டிரர், காந்தாரி முதலாகிய தர்மவான்கள் அனேகர் இச்சபையிலிருக்கிறார்கள். அவர்களெல்லாமறியாத தர்மத்தையா நீ அறிந்திருக்கிறாய்? அவர்களுக்கெல்லாமில்லாத நற்குணம் உனக் கிருக்கிறதா? அவர்களையன்றோ திரௌபதி வினவினாள்? அவர்களே விடைதராமலிருக்க் நீயேன் சொல்லப்புறப்பட்டாய்? அவர்களெல் லாரும் திரௌபதி தர்மமாய் ஜயிக்கப்பட்டாளென்று சொல்லியு மிருக்க, நீ வேறாகச்சொன்னாயே. உனக்கென்னதெரியும்? நீ சிறுவன். ஆனபடியினாலேதான் பெரியோர்களுக்குமுன் கூச்சமின்றி தர்மத்தை அதர்மமென்று சொல்லுகிறாய். அன்றியும், யுதிஷ்டிரர் மனமொப்பிவைத்த பந்தயங்கள் யாவையும் ஜயித்ததுபோலவே இந்த திரௌபதியையும் சகுனி ஜயித்தான். யாவரும் பார்த்துக் கொண்டுதானே யிருக்கிறார்கள். பாண்டவர்களும் ஒப்புக்கொண் டுதானே யிருந்தார்கள். இப்படியிருக்க, உனக்குமாத்திரம் அவள் ஜயிக்கப்படவில்லை யென்றும், அது அநியாயமென்றும், எப்படித் தோன்றிற்று? ஒற்றை யாடையோடிருப்பவளைச் சபையில் இழுத்து அவமானம் செய்வது அநியாய மென்றாய். அதைக்குறித் துச் சொல்லுகிறேன் கேள். கடவுளானவர் பெண்களுக்கு பர்த் தாவே தெய்வமென்று நிருமித்து, ஒருத்திக்கு ஒரு பர்த்தாவாயிருக் கும்படி கட்டளையிட்டிருக்கிறார். அதின்படி உலகத்தில் ஸகலபெண் களும் ஒருபுருஷனையே அடைந்திருக்கிறார்கள். மற்றொருவனைக் கண்ணினாற்பார்த்தாலும் விபசாரதோஷ முண்டு. அப்படியிருக்க, இந்த திரௌபதி ஐவரைப் புணருகிறாள். இப்பேர்ப்பட்டவளுக்குத்

தருமமெங்கே யிருக்கிறது? வேசிபோலாகி வருஷத்திற்கொரு வைப் பாளனோடு இருக்கிறவள் ஐவரைச் சேர்ந்தாலென்ன? ஐம்பதுபே ரைப் புணர்ந்தாலென்ன? எப்படியும் இவள் பொதுமாதுதான். இவ ளைச் சபையில் வரவழைப்பது குற்றமன்று. மேலும் இவளுடைய பர்த்தாக்களும் நம்மால் ஜயிக்கப்பட்டார்கள். அதனாலேயே இவ ளும் ஜயிக்கப்பட்டாள். தனியாகவும் நமக் கடிமையானாள். இந்த வெள்ளாட்டியைக்குறித்துத் தருமாதருமங்களை விசாரிப்பதுண் டோ? இவள் ஒரு வஸ்திரம் தரித்திருந்தாலுஞ்சரிதான். நிர்வாண மாயிருந்தாலுஞ் சரிதான். இவளை எதுவேண்டுமோ அது செய்ய லாம். இதில் எவ்வளவேனும் பாவமில்லை. என்றுசொல்லித் துச் சாஸனனைநோக்கி, அப்பா துச்சாஸனா! இந்த விகர்ணன் என்றைக் கும் இப்படித்தான் பிதற்றுவான். இவன்பேச்சைக் கேட்பாரில்லை. இப்போது நீ பாண்டவர் தரித்திருக்கும் வஸ்திரத்தையும் திரௌ பதி தரித்திருக்கும் வஸ்திரத்தையும் உரியென்றான். உரியென்ற கர்ணனை ஸபையிலுள்ளவர்கள் உடனே பிடித்திழுத்து ஏன் உதைக்க வில்லை? அந்தக்கர்ணன் பேச்சைக்கேட்ட துச்சாஸனன் என்னும் மகாபாதகன் செய்யப்புகுந்த கொடுமைகளைச் சொல்ல எனக்கு நாவெழவில்லை. ஆயினும், சொல்ல எடுத்தசரித்திரத்தைச் சோர்வு படாமற் கூறவேண்டிய நியதியைப்பற்றி மகாபதிவிரதையின் மகத்து வத்தையும், ஸ்ரீ கிருஷ்ணமூர்த்தியின் திருவடியையும் சிந்தித்துக் கொண்டு சொல்லுகிறேன். பாண்டவர்கள் கர்ணன் கூறியனுப்பிய வார்த்தையையும் அதற்குத் தக்கபடி துரியோதனாதியர்களில் சில துஷ்டர்கள்கொண்டிருக்கிற கருத்தையும் அறிந்துகொண்டவர்க ளாய் உடனே தாங்கள் உடுத்திக்கொண்டிருந்த வஸ்திரங்களைக் களை ந்து எறிந்துவிட்டார்கள். இப்பால் நிகிருஷ்ட சிரோமணியாகிய துச்சாஸனன் அஞ்சாமல் திரௌபதியின் துகிலைஉரிய ஆரம்பித்தான். அப்போது அந்தத் திரௌபதி தன் கையால் கலையைப் பற்றிக் கொண்டு அளவற்ற வியஸனத்தையடைந்து கண்ணீர்சொரிந்து, தன் மனதைத் தானேதேற்றிக்கொண்டு, ஓ, மனமே! முன்னே வஸிஷ் டர்சொல்லிய வாக்கியம் ஒன்றைப் பெரியோர்களிடத்தில் கேட்டி ருப்பதில் மனுக்களுக்கு எப்படிப்பட்ட ஆபத்துக்கள் நேரிட்டாலும் பகவானாகிய ஸ்ரீ மகாவிஷ்ணுவைச் சிந்தித்தால் அவ்வாபத்தை நீக்கிக் காப்பாற்றுவார் என்பதைத் தெரிந்திருக்கின்றேன். ஆதலால், அவ ரைச் சிந்திக்கவேணுமேயன்றி, மற்றப்படி இந்தப் பந்துக்கள், பர்த் தாக்கள் முதலானோரால் இனி நடக்கப்போகிற தர்மம் ஒன்றுமில்லை.

என்றுசொல்லி அந்தக் கார்மேகவண்ணனாகிய கண்ணனுடைய திருவடித்தாமரைகளை மனதிலிருத்தி "ஹாகிருஷ்ணத்வாரகாவாஸின்க்வாஸியாதவநந்தந, இமாமவஸ்தாம்ஸம்ப்ராப்தாம்அநாதாம்கிம்உபேக்ஷஸெ" என்று துதிப்பதாயினாள். ஓ, கிருஷ்ண! ஓ, கோவிந்த! ஓ, நாராயணா! அனாதரக்ஷகா! ஆபத்பாந்தவா! ஸர்வலோகசரண்ய! ஸர்வேசுவரா! செந்தாமரைக்கண்ணா! இப்போது என்பர்த்தாக்களும், பீஷ்மர், துரோணர் முதலிய மற்றெவர்களும் என் மானம்காக்கச் சக்தியில்லாதவர்களாக விருக்கிறார்கள். நான் ஸகலத்தையும் துறந்தேன். உமது திவ்ய சரணாரவிந்தத்தைத் தஞ்சமடைந்தேன். எனக்கு நீரல்லாது வேறுகதி யில்லை. யாவருக்கும் நீரே ரக்ஷகர். உமது திருவடிகளைப் பற்றினோருக்கு விரோதம்செய்கிறவர்களைத் தண்டிப்பேனென்று தீக்ஷைவகித்து சங்கம், சக்கிரம், கதை, கட்கம் முதலாகிய ஆயுதங்களோடு துவாரகாபுரியில் எழுந்தருளியிருக்கும் கடவுள் நீரன்றோ? ஓ, என்றும் அழிவில்லாத மஹானுபாவ! ஓ, பிர்மன் முதலானோர்களுக்கும் ஆபத்து வந்தபொழுது அஸுரரை மாய்த்து, வேதம் முதலாகியவைகளை நிலைநிறுத்திக் கார்க்கின்ற பகவானே! ஓ, மெய்க்கடவுளே! உமது திருவடிகளையே நம்பிய அடியாளைக்காத்தருளும். ஐயோ! இந்தக் கொடியபாவியினால் மானபங்கம் செய்யப்படுகிறேன். ஓ, சுவாமி! துவாரகையைப் பதியாய்க் கொண்ட கருணைக்கடலே! ஓ, யாதவகுல சிகாமணி! தேவரீர் எங்கேயிருக்கிறீர்? நின்னடியாளாகிய என்னை இப்படிப்பட்ட அவஸ்தையில் துயரப்படவிட்டு உபேக்ஷைசெய்வது நியாயமோ? ராஜசிங்கம்போன்ற நீர் எனக்கு நாதனாயிருக்க, என்னை நாதனற்றவளாக வெண்ணி இந்தப்பாதகன் கௌரவர் முதலானோருக்கு முன்னிலையில் என்வஸ்திரத்தை யிழுக்கின்றானே. இந்த ஆபத்தில்நின்றும் என்னைக் காத்தருளவேண்டாமா? ஓ, கிருஷ்ணா! என்று அப்பகவானை ஸகஸ்ர நாமங்களாலும் மனோவாக்குக்காயங்கள் ஒருமித்து ஸ்துதித்துப் பணிந்து கூவினாள். அப்போது தமதடியாளுக்கு நேரிட்ட துயரத்தை நீக்கவேண்டுமென்று ஸ்ரீ கிருஷ்ணபகவான் தமது கருணையென்னும் கடலின் அலைகள்போன்ற திவ்யவஸ்திரங்களை அவளிடையில் நிருமாணஞ்செய்தருளினார். அது தெரிந்தவுடனே திரௌபதியானவள் வஸ்திரத்தைப்பிடித்திருந்த கையையும் தேகாபிமானத்தையும் விட்டு ஸ்ரீ கிருஷ்ணனையே துதித்துக்கொண்டிருந்தாள். அதுகண்ட துச்சாஸனன் இனி சுலபமாய் இவள் துகிலை யுரியலாமென்று நினைத்து விவேகிகளாயினோர் தங்கள் வல்வினைகள் நீங்கி ஸ்வர்க்காதிபோகங்

கள் அடையவேண்டி தேவாலயத்தை எவ்வாறு பலமுறை சுற்றிச் சுற்றி வலம்வருவார்களோ, அவ்வாறு இம்மகாபாதகனும் தனது நல்வினைகள் நீங்கி நாகாதிசோகங்களை யடையவேண்டி திரௌபதா தேவியை வலம்வருவதுபோற் சுற்றிச்சுற்றி மகா அட்டகாஸத்தோடு துகிலை உரிவதானான். அவ்வாறு அவிழ்க்க, அவிழ்க்க, அவ்வஸ்திரத்தினுள்ளே மற்றோர்வஸ்திரம் காண, அதையுங் களைய, மறுபடியும் ஒன்றுதோன்ற, இதுவும் ஒருலாபந்தான் என்று நினைத்துச் சந்தோஷத்தோடு அதையும் அவிழ்க்க, இப்படிக்கு அவிழ்க்கும் தோறும் பற்பலவண்ணமாய் ஒருவரும் ஒருநாளும் கண்டறியாததாய், தேவஸ்திரீகள் உடுத்திக்கொள்ளத் தக்கவையாய், அங்கிருந்த யாவராலும் ஆச்சரியப்படத்தக்க தானதாயிராநின்ற பலவஸ்திரங்கள் அவளிடையிற் றொடுக்கப்பட்டுக்கொண்டிருந்தன. இவ்விதமாய் ஒய்வில்லாமல் உண்டாகிய வஸ்திரங்களை எல்லாம் துன்மார்க்க சிரோமணியாகிய துச்சாஸனன் உரிந்துரிந்து, மலைமலையாய்க் குவித்துக் கைசோர்ந்து பெருமூச்சுவிட்டு, வெட்கப்பட்டு, முகங்குன்றிச் சும்மா நின்றுவிட்டான். அப்போது ஸபையிலிருந்த பீஷ்மர், துரோணர் முதலிய பெரியோர்களும், ஆசார்யர்களும், பின்னுமுண்டான விதுராராஜன் முதலிய சில மன்னவருஞ் சரீரமெல்லாம் நடுக்குற்று, நாவறண்டு, கண்களில் நீர்சோர, இருகாங்களையும் சிரமேற் கூப்பிக் கொண்டு ஒ! ஒ!! துரியோதனன்செய்வது மிகுந்த அநியாயம்! அநியாயம்!! ஐஐயோ!!! திருலோகத்திலும் கற்பென்று சொல்லும்படியான மேலானபொருளுக்கும், இக்குருவம்சத்திற்கும், இந்தப் பதிவிரதாசிரோமணியே தெய்வம். இதற்கு எவ்வளவும் ஸந்தேகமில்லை. சீ! சீ!! இப்பாவிகட்கு ஏதோ பழுதுவருங்காலம் ஸம்பவித்திருக்கின்றதென்று சொல்லி வருத்தப்பட்டார்கள். இவர்களை இந்த ஸமயத்தில் வருத்தப்படவில்லையென்று சொன்னது யார்? பொற்கொடியாளோ கடவுளின் கருணைக்குப் பாத்திரமாகிவிட்டாளே. இப்படியிருக்க, அவர்களேன் இந்தஸமயத்தில் கண்ணைக்கசக்கவேண்டும்? நிற்க, இதுவரை கூறிவந்த சரித்திரங்களால் மேற்சொன்னவர்கள் தர்மங்களை அனுஸரியாதவர்களென்ற அருத்தமல்ல. அவர்கள் எல்லோரும் புண்ணியபுருஷர்களானதால், எல்லா தர்மதத்துவங்களையும் அறிந்தேயிருப்பார்கள். நாம்தான் தர்மசூக்ஷுமங்களை நன்றாக அறியாதவர்கள். தர்மங்களிற் சிலது மிகவும் சூக்ஷுமமாயும், சிலது மிகவும் ஸ்தூலமாயுமிருப்பதால், அதை நிரூபிபிக்கிறதற்காகவே இந்த வியாஸத்தின் மேலேசொன்ன சரித்திரங்கள் எடுத்தெழுதப்பட்டன.

தர்மதத்துவத்தை அறியாத பாமரஜனங்கள் மேலே கூறியவைகளைத் தர்மவிரோதங்களாக நினைப்பார்கள். அப்படி நினைப்பது தவறினும் தவறு. இதை உத்தேசித்துத்தான் ஸ்ரீ மஹாபாரதத்திலுள்ள ஆநுசாஸநிக பர்வத்தில் காலதேச வர்த்தமானங்களுக்குத் தக்கபடி தர்மங்கள் பற்பலவாருக விருக்குமென்று கூறப்பட்டிருக்கின்றது. ஆகையால் தான் ஆசாரங்களைச் சீர்திருத்த விரும்புகிற பெரியோர்கள் பல சாஸ்திரங்களை ஆராய்ந்துபார்த்துத் தற்காலத்திற்கு ஏற்றவாறு தர்மாநுஷ்டானங்கள் இருந்தால் போதுமென்று கூறுகின்ருர்கள். இவர்கள் எழுத்திலும் பேச்சிலும் மிகுந்த ஸாமர்த்தியசாலிகளாயிருப்பதோடு, தமது ஆரிய சாஸ்திரங்களிலும் தகுந்த பயிர்ச்சி உடையவராகவே இருக்கிருர்கள். ஆகவே, பெரியோர்கள் என்ன சொல்லுகிருர்களென்று எவரும் கேட்கவேண்டிய தவசியம். இவர்களுடைய புத்தி அதிகூர்மையானது. அனுபோகம் முதிர்ந்தது. ஆலோசனை ஆழ்ந்தது. இவர்கள் கல்விகேள்விகளிற் சிறந்தவர்களானதால் ஒருபோதும் பயனற்றவார்த்தைகளை வசனிக்கமாட்டார்கள். உபயோக மற்ற கிரந்தங்களையும் எழுதுகிறது வழக்கமில்லை. ஆகவே, அவர்களால் எழுதப்பட்ட கிரந்தங்களை ஆவலுடன் வாங்கிப் படிக்கின்ற ஜனங்கள் மிகுந்த நன்மையைப்பெறுவார்களென்பது திண்ணம். மனுஷ்யனுக ஜனித்தால் நன்மைதீமைகளைப் பிரித்தறியத்தக்க நூல்களைவாங்கிப் படித்து ஜனோபகாரவழிகளில் அன்புடையவனுக பவிக்கவேண்டும். அதற்கு நிதர்சனத்தை அறிய விரும்புகிறவர்கள் நமது முன்னோர்களாகிய பூர்வாரியர்களால் சுருதியைப் பிரமாணமாக வைத்துக்கொண்டு ஏற்படுத்தப்பட்டிருக்கின்ற ஸ்மிருதியின் கருத்துக்களை உணரவேண்டியது அவசியம். அவைகளில் கிரகஸ்தனுனவன் ஸகோதரன், ஸகோதரிகளையும், அவர்களின் ஸந்ததியார்களையும், பிறகு ஏழைகளாகிய பந்துக்கள், மித்திரர்கள், வேலையாட்களாகிய இவர்களையும், அதன்பிறகு நமது சொந்த வூரிலிருக்கிற பேர்வழிகளையும், வெளியூரிலிருக்கிற ஜனங்களையும் காப்பாற்றவேண்டியது முறைமையென்றும் கூறப்பட்டிருக்கின்றது. ஸ்வாமி விவேகானந்தானவர் சத்துருக்களுக்கு சத்துருக்களாகவிருந்து, அவர்களை எதிர்த்து, நமது கடமைகளைப் பூர்த்தி செய்துகொள்ளவேண்டுமென்று கூறுகின்ருர். இதனுல் பொறுமைபொறுமையென்று மூலையில் உட்கார்ந்து அழுதுகொண்டிருப்பது கிரகஸ்தனுடைய கடமையல்லவெனத் தெரியவருகின்றது. சத்துருக்களின் முன்னிலையிற் சௌரியத்தைக்காட்டாதவன் கர்மப்பிரஷ்டனுகிருனென்பது விவே

கானந்தஸ்வாமிகளின் அபிப்பிராயம். சாந்தகுணமானது ஸிநேகிதர் முதலிய பந்துக்களிடத்தில் பாராட்டத்தக்கதேயன்றி, சத்துருக்களிடத்தில் பாராட்டத்தக்கதன்று. ஆதலின், துஷ்டர்களை வணங்கவாவது மரியாதை செய்யவாவது கூடாது. துஷ்டர்களை வணங்கினுல் அவர்களின் அகிருத்தியங்களுக்கு உதவி செய்தது போலாகின்றது. ஆனுல், பாஞ்சாலியின் துகிலை உரியும்பொழுது பாண்டவர்கள் என் க்ஷமை பாராட்டினுர்கள் என்ற சங்கை ஏற்படும். அப்பொழுது அவர்கள் தற்சுதந்திரமன்னியில் துரியோதனுதியருக்கு அடிமைகளாக பவித்திருந்தார்கள். இந்த அடிமையென்னும் கொடியவழக்கத்தை நமது காருண்யமுள்ள பிரிட்டிஷ் கவர்ன்மென்டானது சென்ற 1840-வது வருஷத்தில் மாற்றிவிட்டது. அடிமைஎன்பது அஷ்ட ஐசுவரியங்களில் ஒன்று. நிற்க, இதுபோல் நமக்கு ஒவ்வொரு அரசாட்சியிலும் ஒவ்வொருவிதமான குணங்கள் ஸித்தித்திருக்கின்றன. முன்நாளில் இந்து ஸ்திரீஜனங்கள் இறந்த நாயகருடன் தாங்களும் உயிரைத் துறந்து வந்தார்கள். இதைத்தான் நாம் இப்பொழுது அனுமரண விதியல்லது உடன்கட்டை ஏறுதலென்று சொல்லுகிறோம். அந்த விதியானது அநீதியானதென்று அக்பருடைய அரசாக்ஷிகாலத்தில் அதை அகற்றிவிடப்பட்டது. அன்றியும், முற்காலத்தில் சிலஜனங்கள் திருவேணியென்ற புண்ணியநதியில் மறுமைப்பயனை உத்தேசித்து தங்கள் ஜீவனை வலுவில் மாய்த்துக்கொள்ளுவார்கள். இந்தச்செய்கை ஆத்மஹத்தியென்பதை அறியாத சில அறிவிலிகளின் செய்கையானதால், அவ்வழக்கத்தை அக்பரோ, அல்லது ஆங்கிலேயரோ மாற்றிவிட்டார்கள். வருணதிசைநாடுகளில் அரசியல் விஷயங்களில், லிபரல், கன்ஸர் வேடிவ் யென்ற கக்ஷிகள் இருப்பதுபோல் ஸோஷியலிஸ்ட்ஸ் என்ற ஒருகக்ஷியும் ஏற்பட்டிருக்கின்றது. லிபரல் கக்ஷியானது ஸமூகஸ்தாபனங்களிலும் பழக்கவழக்கங்களிலும் காலவேற்றுமைகளுக்குத்தக்கபடி புதுமைகளை ஏற்கும்கொள்கையை உடையது. கன்ஸர்வேடிவ் கக்ஷியானது வெகுநாளாய் ஸ்திரம்பெற்று ஜனங்களின் வாழ்க்கைக்கு ஸாதகமாக விருக்கும் ஸ்தாபனங்களையும் பழக்கவழக்கங்களையும் மாற்றுதல் தீங்கிழைக்கக்கூடியதென்று உள்ளதை உள்ளபடியே காக்கும் கொள்கையைஉடையது. ஸோஷியலிஸ்ட்ஸ் கக்ஷியானது புதுமைகள் அவசியமென்ற நோக்கத்தை உடையதாயினும் ஸமூஹ அமைப்பின் அஸ்திவாரங்களையே மாற்றி ஏற்றத்தாழ்ச்சியான அந்தஸ்துபேதங்களே கூடாதென்றும், எல்லோரும் ஒரே அந்தஸ்துக்குஉரியவரென்றும்,உழைப்பவனுக்கே பொருள்

உரியதென்றும், ராஜாங்கத்தார் வேலைசெய்வோராகிய ஏழைகளைக் கைதூக்கிவிட்டு அவர்களுக்குத் தக்க கல்வியைக் கற்பித்து, அவர்களது வறுமையை நீக்கி மற்ற வகுப்பாரைப்போல ஸகல ஸ்வதந்திரங்களையும் கொடுக்கவேணுமென்ற கொள்கைகளையுடையது. பெரும் முதல்கள் வைத்து லாபம் பெறுவோர்களிடத்தில் நியாயமாய்த் தங்களுக்குக் கிடைக்கவேண்டிய ஸம்பாத்தியத்தைக்குறைத்து நிதி சேர்க்கிறார்களென்று அவர்களிடத்தில் அடிக்கடி இந்த ஸோஷியலிஸ்ட்ஸ் கக்ஷியார் விரோதங்காட்டித் தங்களுக்கு எளிதாக நியாயம் கிடைக்காதபக்ஷத்தில் வேலைக்குப்போவதை நிறுத்தி முதலாளிகளை நஷ்டப்படுத்துவார்களாம். இந்தஸோஷியலிஸ்ட்ஸ் கக்ஷியார் இங்கிலண்டில் தக்கசெல்வாக்கும் வன்மையும் பெற்றிருக்கிறார்களென்று தெரியவருகின்றது. இந்தக்கக்ஷியில் சேர்ந்திருப்பவருள் பலர் நல்ல கல்விமான்களாயும், எழுத்திலும் பேச்சிலும் ஸாமர்த்தியமுள்ளவர்களாயும், தங்கள் வகுப்பாருடைய உரிமையைப் பலமாய்க் காக்கவல்லோராயு மிருக்கிறார்களாம். இங்கிலண்டில் வேலைசெய்யும் வகுப்பாருக்கும் மற்ற வகுப்பாரைப்போல பார்லிமென்ட் நியமனங்களில் ஓட்டுக்கொடுக்க அதிகாரம் உண்டாம். இன்னாருக்குத் தான் ஓட்டுக்கொடுக்கலாமென்ற யோக்கியதை நிர்பந்தமில்லையாகையால், தங்கள் கக்ஷியாகிய வேலைசெய்வோர் கக்ஷியில் சிலரைப் பார்லிமெண்டுமெம்பராக நியமிக்கவேண்டுமென்று முயற்சிசெய்துவந்ததில், சென்ற 1906-ம் வரு ஆரம்பத்தில் பார்லிமெண்டு புதுநியமனங்களானபோது இந்தக் கக்ஷியைச்சேர்ந்த சுமார் 40 பெயர்வரையில் மெம்பர்களாக நியமிக்கப்பட்டார்களாம். நமது கனம் தாதாபாய் நௌரோஜி அவர்களும் ஸோஷியலிஸ்ட்ஸ் கக்ஷியைச்சார்ந்தவராக பார்லிமெண்டில் பிரவேசிக்கவேண்டுமென்று முயற்சிசெய்து வந்ததாகத் தெரியவருகின்றது. இந்த மகானுபாவராகிய தாதாபாய் நௌரோஜி, நமது இந்தியாதேசத்தின் நன்மையின்பொருட்டு அரிதான பெரியகாரியங்களை அமோகமாகச் செய்திருக்கிறார். அவர் உலகத்துக்கு உழைத்துஉழைத்து அவருடைய சரீரமெல்லாம் காய்ந்து தழும்பேறியிருக்கின்றது. அவர் பொதுவிஷயங்களில் தலையிட்டு வேலைசெய்ய ஆரம்பித்தகாலமுதல் பலசமயங்களிற் பிரஸங்கங்களாலும், கடிதப்போக்குவரத்தாலும், பத்திரிகைகளாலும், இன்னும் வேறுவிதங்களாலும் வெளிப்படுத்தியிருக்கின்ற அபிப்பிராயங்களை ஒன்றாய்த் திரட்டி ஓர் பெரியபுஸ்தகமாக அச்சிட்டிருக்கின்றார். அந்தப்புஸ்தகம் ஸுமார் 1,000 பக்கங்கள் உள்ளது. ஆகவே, அவர் மனோவாக்குக்

காயங்களால் செய்திருக்கிற வேலைகளின் அளவை இவ்வளவென்று நீங்களே மதித்துக்கொள்ளுங்கள். இவர்தான் இங்கிலண்டானது இந்தியாவிலிருந்து ஏராளமானபொருளைத் தாராளமாகக் கொண்டு போகிறதென்று முதலாவது கண்டுபிடித்தவர். பரோடா சமஸ்தான மானது முன் மிகவும் சீர்கேடான நிலைமையிலிருந்தது. அப்போது மல்ஹாரிராவ் கைக்வார் என்பவர் மகாராஜாவாக விருந்தார். அவருக்கு அரசாட்சிபுரியும்வல்லமை அவ்வளவு அதிகமாகவில்லை. ஆதலின், பிரிட்டிஷ் கவர்ன்மெண்டார் அவரது ஆட்சியின் ஸ்வதந்திரத்தை நீக்கி, பரோடாவை பிரிட்டிஷ் இந்தியாவுடன் சேர்க்கவேண்டுமென்று ஆலோசித்தார்களாம். அல்லது தக்க இந்தியர் ஒருவரை திவானாக நியமித்துப் பார்க்கவேண்டும் என்று நினைத்திருந்தார்களாம். அந்தஸமயத்தில் தாதாபாயைத்தவிர வேறு தக்க இந்தியரில்லையென்று தெரிந்துகொண்ட பம்பாய் கவர்ன்மெண்டார் இவரைத் திவானாக நியமித்து அனுப்பினார்களாம். இவர் அந்தவேலையைப் பெற்றதின்பிறகு அனேகம் சீர்திருத்தங்கள் செய்து அந்த ராஜ்யத்தை மிகவும் நல்லநிலைமைக்குக் கொண்டுவந்திருக்கிறார் என்று தெரியவருகின்றது. இவர் "வாயிஸ் ஆப் இன்டியா" என்ற பத்திரிகைக்கு ஆசிரியராக விருந்திருக்கிறார். அடிக்கடி இங்கிலண்டுக்குப் போய்வருகிறது வழக்கம். இவர் பார்லிமெண்டு ஸபையில் ஓர் மெம்பராகவும் தெரிந்தெடுத்துக்கொள்ளப்பட்டிருக்கிறார். அந்தப்பதவியை இந்துஜனங்களுள் ஒருவரும் இவருக்குமுன் அடைந்திருப்பதில்லை. எல்பின்ஸ்டன் காலேஜில் மாதமாடிக்ஸ் புரொபெஸர் என்ற உத்தியோகத்தையும் பெற்றிருக்கிறார். இந்த உத்தியோகம் ஆங்கிலேயருக்குக்கொடுக்கிற வழக்கமேயன்றி,இந்தியருக்குக்கொடுக்கிற வழக்கமில்லை. இவர் இந்த உத்தியோகத்தை ஐம்பதுவருஷத்திற்கு முன்னமே பம்பாயில்வைத்துப் பெற்றிருக்கிறார் என்று தெரியவருகின்றது. இவர் ஜாதியில் பார்ஸி. இந்த ஜாதியார் இந்தியாவில் சுமார் லக்ஷம்பேருக்கு மேலில்லை. இவர்கள் ஆதியில் பெர்ஷியா தேசத்திலிருந்து அங்கே மகமதிய ஆட்சியின் கொடுமையை ஸகிக்க மாட்டாமல் இந்தியாவுக்கு வந்து இந்தியாவின் மேற்குக்கரையிலுள்ள சூரத்து நகரத்தில் குடியேறினார்களாம். அங்கிருந்த இந்து அரசர்கள் இவர்கள் கோ மாம்ஸம் தின்பதையொழித்தால் ரக்ஷிப்பதாக அபயம் கொடுத்தார்களாம். அதுமுதல் சுமார் 400 வருஷ காலமாய் பம்பாய்ப்பக்கத்தில் வஸித்து இந்து மகமதிய அரசர்களின் கீழ் பெரும் உத்தியோகங்கள் பெற்றும் வியாபாரம் செய்வதில் திற

மையும் ஊக்கமும் காட்டி பொருள் ஸம்பாதித்தும் விசேஷமாய்த் தானதர்மங்கள் செய்தும் கீர்த்திவான்களாயிருந்து வருகிறார்கள். பிரிட்டிஷ் ஆட்சி ஸ்தாபிக்கப்பட்டு தேசத்தில் அமைதியும் போக்கு வரவு வஸதிகளும் கல்வியும் சிறப்படைந்துவருவதில் இந்தஜாதியார் சுறுசுறுப்பாயும் புத்தியுடனும் முன்னுக்குவந்து இந்தியாவிலுள்ள பலஜாதியர்களுள் எந்தத்துறையிலும் முதன்மைவகித்து வருகிறார்கள். இவர்களுள் ஜாதிவித்தியாஸமில்லை. உலகத்தில் எங்குவேண்டுமானாலுஞ் சென்று எவருடனும் புசித்துக் காலதேச வர்த்தமானங்களுக்குத் தக்கபடி வேற்றுமைகளையேற்றுத் தங்கள்நன்மையை முன்னுக்குக் கொண்டுவருவதில் ஒருவிதமான தடையு மில்லாதவர்கள். அவர்களுடைய ஸ்திரீகளும் ஐரோப்பிய ஸ்திரீகளைப்போல் ஸ்வதந்திரங்கள் பெற்றவர்கள். ஆதலின், அவர்களுடைய அறியாமையாலும் கோழைத்தனத்தாலும் இந்த ஜாதியாரின் அபிவிர்த்திக்கு ஒருவிதமான தடையும் ஏற்படுகிறதில்லை. தாதாபாய் நௌரோஜி பம்பாய் நகரத்தில் 1825-ம் வருஷம் செப்டம்பர் மாஸம் 4-ம் தேதி பிறந்தார். அவருடைய பிதா தாதாபாயின் 4 - வது வயதிலேயே இவ்வுலகவாழ்வைத் துறந்துவிட்டாரெனத் தெரியவருகின்றது. அவர் பார்ஸிஜாதியாரின் ஓர் புரோகிதர். ஆகவே, மாமனுடைய உதவியால் தாதாபாய் போஷிக்கப்பட்டு வந்தார். இவர் ஆதியில் திண்ணைப் பள்ளிக்கூடத்தில்தான் கல்விகற்றது. இவர் இளமைப்பருவமாக விருக்கிறபொழுது வானத்திலுள்ள சந்திரன் தன்னுடன் எங்கும் வருவதாக நினைத்து மிகவும் களியாடல் செய்வாராம். இவருக்கு வாலிபத்தில் கிரிக்கெட் என்ற பந்துவிளையாட்டில் மிகவும் பிரியம். ஆயினும், அவர் படிப்பில் சோர்வடைகிறதில்லை. மிஸ்டர் தாதாபாய் அழகிற்சிறந்தவர். இவருக்கு ஒவ்வொருஸமயத்தில் அவ்வூரார் இங்கிலீஷ் போர்வீரனைப்போலவும், கப்பல்வீரனைப்போலவும், அரசனைப்போலவும் வேஷங்கள்போடுவது வழக்கமாம். நமது தாதாபாயின் தாயார் பள்ளிக்கூடத்திற்குச் சம்பளம்கொடுக்கச் சக்தி யில்லாதவராயிருந்தார். ஆதலின், இவருக்கு உபாத்தியாயர்கள் இலவசமாகவே கல்விகற்பித்து வந்தார்களாம். அவர் "கீழோ ராயினும் தாழ வுரை" என்ற முதுமொழியை ஒருபொழுதும் மறப்பதில்லை. அவர் பார்ஸி மதத்திற்குரிய நூல்களை நன்குணர்ந்தவரானதால், அவரது திருகரணங்களும் மிகவும் சுத்தமாகவே யிருந்தன. அவரது இருப்பினாலும், பேச்சினாலும், எழுத்தினாலும் அவரிடம் டம்பமிருக்கிறதாகத் தெரியமாட்டாது. அவர் தான் ஏழையில் ஒருவன் என்

றும் தனக்கு வேண்டிய பள்ளிக்கூடப் புஸ்தகங்கள் காமாயென்ற ஓர் ஸகபாடியி னுதவியால்தான் கிடைக்கப்பெற்றதாயும் கூறுகிறார். அன்றியும், அவர் ஜனங்களுடைய பணிவிடையே தன்னுடைய பிறப்பின் பயனென்னும் கருத்திபிருக்கின்றார். ஆதலின், இவர் ஸொந்த ஸவுகரியங்களேயும் தனது கஷ்ட நஷ்டங்களேயும் பெரிதாக நினேயாமல் உடல், பொருள், ஆவியால் உலகத்திற்குழைத்துவருவதுபோல் உலகத்தையும் உலகத்துக் குழைக்கச்செய்து உலகத்தை முன்போல் தழைக்கச்செய்வது உலகத்தின் கடமையாகவே யிருக்கின்றது. அவ்விதமே பவிக்கும்படி தில்லை ஈசன் தொல்லருள் புரியவேண்டும். நிற்க, மிஸ்டர் தாதாபாயானவர் கிளாக்ஸன் என்ற ஆங்கில ஆசிரியரால் எழுதப்பட்ட "அடிமைவர்த்தகம்" என்ற புஸ்தகத்தையும் லோகோபகாரியான ஹவர்ட் என்பவருடைய சரித்திரத்தையும் நன்றாகப் படித்துப்பார்த்தவர். ஆகையால் ஒரேவிதமான நோக்கத்தோடு ஜனோபகாரம் என்ற விரதத்தை ஊக்கத்துடன் கைப்பற்றக் காரணமாயிற்று. இவருடைய கல்வித்தேர்ச்சியையும், புத்திசாலித்தனத்தையும், பரோபகார சிந்தையையும் பார்த்த அனேக ஆங்கிலேய கனவான்கள் இவருக்குற்ற நண்பர்களாக பவித்திருக்கிறார்கள். கனம் தாதாபாயின் நுண்ணறிவைக் கவனித்துப்பார்க்குமளவில் அவர் பெரிய சமஸ்தானங்களில்உயர்ந்த அந்தஸ்தான வேலேகளில் அமர்ந்திருந்த மிஸ்டர் ரானடே, மிஸ்டர் டியாப்ஜி, மிஸ்டர், ஸர், டி, மாதவராவ், மிஸ்டர், ஸர், கெ, சேஷாத்திரிஐயர் முதலியவர்களேப்போல் பெரிய உத்தியோகங்களே நிர்வகிக்கத்தக்கவரெனப் புலப்படுகின்றது. ஆனால் இவருக்கு அவர்களேப்போல் உத்தியோகம் பெறவேண்டுமென்ற விருப்பமில்லே. அவைகளில் ஆசைவைத்தால் ஜனங்களின் குறைகள் எவ்வாறு நிவர்த்தியாகக்கூடும்? இவர் இந்தியாவின் குறைகளே நிவர்த்திசெய்யும்பொருட்டு இதற்குமுன் இங்கிலண்டில் 50 வருஷம்வரை வாஸஞ்செய்தவராக விருக்கிறார். ஆகையினால்தான் அவர் ஆங்கிலேய ஜனங்களுடன் நெருங்கிப் பழகவும் ஸமயம்கிடைத்த பொழுது அவர்களுடன் இந்தியாவிஷயமாய் நல்ல ஸம்பாஷணேகளேச் செய்யவும் காரணமாயிற்று. அன்றியும், இவர் அவ்விடத்தில் பொதுப் பிரஸங்கங்கள்செய்தும் சிறந்த இங்கிலீஷ் பத்திரிகைகளுக்கு வியாஸங்களெழுதியும் வந்திருக்கிறார். ஆங்கிலத் தலேவர்களுக்கு நிருபங்கள் எழுதுவதும் வழக்கமாம். பார்லிமெண்டில் மெம்பர்ஸ்தானத்தையும் வகித்திருக்கிறார். இவர் இங்கிலண்டுக்குப் போய்வரும் இந்தியச் சிறுவர்களுக்குப் பிதாஸ்தானத்தி லிருந்துகொண்டு நல்ல

புத்திமதிகளைப் போதிப்பது ஸகஜம். ஆகவே, அவரை நமது பாரத மாதாவுக்குத் திலகம்போன்ற ஜேஷ்டபுத்திரசிகாமணி என்றுகூறத் தடையென்ன? அவர் இந்தியன் நாஷனல்காங்கிரஸ் என்ற மகா ஸபையில் இரண்டு மூன்றுதடவை அக்கிராஸனம் வகித்திருக்கிறார். இந்துஜனங்கள் இவரைத் தங்கள் குடும்பத்தலைவனைப்போலவும், சிரேஷ்டமான ஆசாரியனைப்போலவும், நன்குமதித்து துதித்துவருவதோடு இன்னும் அவர் பல்லாண்டுபல்லாண்டாய் வாழ்ந்திருக்க வேண்டுமென்று கடவுளையும் போற்றிவருகிறார்கள். இந்த தாதாபாயானவர் தமது இனத்தாராகிய பார்ஸிகளுள்ளும் மற்ற இந்துஜனங்களுள்ளும் ஏற்பட்டிருக்கின்ற ஆசாரங்களைச் சீர்திருத்தும்பொருட்டு மிக ஊக்கத்துடன் வேலைகள் செய்துகொண்டு வருகின்றார். அவர் பிள்ளைகளுக்குப் பள்ளிக்கூடங்கள் ஸ்தாபிப்பதிலும், பெண்கல்வியை அபிவிர்த்திசெய்வதிலும், ஸ்திரீகளுக்குப் பழக்கவழக்கங்களில் ஸ்வதந்திரங்களைக் கொடுப்பதிலும், இந்துவிதவைகள் விவாஹம்செய்துகொள்வதை வழக்கமாக்குவதிலும், மாணவச்சிறுவர்களுக்குக் கல்வி அபிவிருத்தியின் பொருட்டு சங்கங்கள் ஸ்தாபிப்பதிலும், பாமரஜனங்களுடைய அறிவின்மையைநீக்கி அவர்களுக்கு அறிவூட்டும்பொருட்டு பிரசுரங்கள்செய்வதிலும் அதிக நோக்கமுள்ளவர். ஆனால், கனவான்களே! மேற்சொன்ன இந்துமாதர்களின் மறுமணமானது முற்காலத்தில் அனுஷ்டானத்திலிருந்து வந்தது. அது பிற்காலத்தில் தீர்க்கதமர் என்ற ஓர் மகரிஷியின் சாபத்தால் தவிர்க்கப்பட்டிருக்கின்றது. நிற்க, கனம் தாதாபாய் அவர்களின் அரியமுயற்சியினால் லண்டன் நகரத்தில் இன்டியன் ஸொஸைட்டி ஒன்று ஸ்தாபிக்கப்பட்டு அந்தச்சங்கம் இப்பொழுதும் நடைபெற்று வருகிறதாகத் தெரியவருகின்றது. அதுபோல் ஸிவில்ஸர்விஸ் உத்தியோகங்களுக்குரிய போட்டிப் பரீக்ஷையானது இங்கிலண்டில் நடப்பதுபோல் இந்தியாவிலும் நடக்கவேண்டுமென்பது அவருடைய கொள்கை. ஒருஸமயத்தில் தாதாபாய் நௌரோஜியால் செய்யப்பட்ட அரசியல் விஷயமான கணக்கை லார்ட்கர்ஸன்கூட ஒப்பினாரென்றதால் நௌரோஜியின் ஹிருதயமானது மிகவும் பரிசுத்தமானதென்பது கண்ணாடியில் முகம்பார்ப்பதுபோல் நன்றாகத் தெரியவருகின்றது. அவருடைய மனஸானது அவ்வளவு பரிசுத்தமாயில்லாத விஷயத்தில் அவர் பார்லிமென்டில் மெம்பர்ஸ்தானத்தை விரும்பியபொழுது இவருக்கு அந்நாட்டிலுள்ள ஆங்கிலமணிகளால் ஓட்டு 1,050 கிடைக்க நியாயமில்லை. கனவான்களே! இந்தியர்களாகிய நமக்கு இதை

விடச் சிறந்தபெருமை வேறு என்னவிருக்கின்றது? இந்தியநாட்டில் ஜனித்த இந்தியரான ஒருவர் பிரிட்டிஷாருடைய நன்கு மதிப்பைப் பெற்று அவர்கள் தங்கள்ஜாதியாருக்குக் கொடுக்கக்கூடிய சிரேஷ்டமான பதவியொன்றை இந்தியரொருவருக்குக் கொடுத்தார்களென்றால் அது ஸாமான்யமான ஸம்பவமல்ல என்பதை எவரும்சொல்லாமலே தெரிந்துகொள்ளலாம். இந்த மகானுபாவராகிய நௌரோஜி 1892ம்வருஷம் ஆக்ஸ்டுமாஸம் 9ம்தேதி பார்லிமெண்ட் (ஸாமான்யர்) காமன்ஸபையில் தாம் பார்லிமெண்டு மெம்பர்ஸ்தானத்தை வகிக்க நேரிட்டது இன்டியாவிலாவது இங்கிலண்டிலாவது அதுவரையில் நேரிடாத ஸம்பவமென்றுசொல்லி பிரிட்டிஷ் ஆட்சியில் இந்தியாவுக்கு நேரிட்ட நன்மைகளைக்கூறி அந்தஆட்சியின் பயனாகவே தாம் அந்தஸபையில் அந்தநிமிஷம் நின்றுபேச இயன்றதென்றும், தாம் அச்சபையில் ஒரேஒருவரா யிருந்தபோதிலும் தாம்சொல்வதற்குத் தக்க நியாயங்களிருக்கும் பக்ஷத்தில் பார்லிமெண்டில் இருகட்சியாரும் தம்மை ஆதரிப்பது நிச்சயமென்றும், ஸெண்ட்ரல் பினிஸ்பரியானது தம்மை அதன் பிரதிநிதியாக நியமித்ததால் இங்கிலண்டினிடத்தில் இந்தியாவுக்குள்ள விசுவாஸமும் பக்தியும் பலமும் அதிகரித்துவிட்டனவென்றும், இந்தியர்கள் கோருவதும் கேட்பதும் எப்போதுமே கைகூடாவிட்டாலும் அவர்கள் விடாமுயற்சிசெய்யும் பக்ஷத்தில் அவர்கள் நியாயமாய்க் கேட்பதைப் பெறுவார்களென்றும் சொல்லி ஸபையாரைச் சந்தோஷப்படுத்தியிருக்கிறார். கனவான்களே! இவருடைய அறிவின் முதிர்ச்சியையும் ஆட்சியாரின் உதாரகுணத்தையும் பார்த்தீர்களா? கனம் நௌரோஜி அவர்கள் புத்தியில் பிரகஸ்பதியாயிருப்பதாலன்றோ லாகூரில் காங்கிரஸ் மகாஸபை கூடினபொழுது இவர் பம்பாயிலிருந்து லாகூர் போகிறவரையில் வழியிலுள்ள ரயில்வே ஸ்டேஷன்களிலெல்லாம் நமதுஜனங்கள் கூட்டங்கூடி மகாராஜாவை எதிர்கொண்டழைப்பதுபோல ஒவ்வொரு ஸ்டேஷனிலும் பந்தல் முதலிய அலங்காரங்களைச்செய்து மாலைகள் போட்டுப் பத்திரிகைகள்வாசித்து அவரை வெகுமானப்படுத்தினார்கள். லாகூர் ரயில்வே ஸ்டேஷனைவிட்டுத் தமது ஜாகைக்குப் போக தாதாபாய் வண்டிஏறினதும் ஸ்கூல்மாணவர்கள் வண்டியில் கட்டியிருந்த குதிரைகளை அவிழ்த்துவிட்டுவிட்டு, வண்டியைத் தாங்களேஇழுத்து அவரை ஜாகைக்குக் கொண்டுபோய்ச் சேர்த்தார்கள். இவருடைய குணப்பிரபாவங்களை நினைக்கநினைக்க எனக்கு என்னையறியாமலே ஆனந்தம் ஜனிக்கின்றது. ஆகவே, அவரைப்பற்றி என்

அதிகமாய் எழுதவேண்டும்? அவருடைய குணமிருதங்கள் அடங்கின திவ்யசரித்திரத்தைப் படித்துப் பார்க்கிறபொழுது எனக்குப் புஸ்தகத்தைக் கீழேவைக்க மனம்வருகிறதில்லை. அதனால் நான் அவரைப்பற்றித் தெரிந்துகொண்ட விஷயம் யாதெனின், தாதாபாய் தன்னுடைய ஆபீஸில் இருந்தாலுஞ்சரி, தன்வீட்டிலிருந்தாலுஞ் சரி, அவர் தன்னைப்பார்க்கவந்த நண்பர்களிடம் அளவற்ற அன்பு பாராட்டுவார். அவருடைய ஸம்பாஷணைகளெல்லாம் தெளிவாயும், பொருள் நிறைந்ததாயும், இனிமையாயும், வேடிக்கையாயுமிருக்கும். அவர் பேசும் ஒவ்வொருவார்த்தையும் கேட்போர் மனதில் ஸந்தோஷத்தை விளைவிக்குமேயன்றிச் சிறிதேனும் அஸந்தோஷத்தையேனும் வெறுப்பையேனும் உண்டாக்காது. இப்படிப் பேசுபவராயிருந்தும் அவர் ஒருபொழுதும் அதிகமாய்ப் பேசுவதுமில்லை. அவரிடம் கோபமென்பது அணுவேனும் இருந்திருப்பதாய்த் தெரியவில்லை. அவருடைய அமைதியானகுணமும், அருமையானவார்த்தைகளும் ஒவ்வொருவரும் அவரை எப்பொழுது பார்ப்போம்என்று ஆசை கொள்ளும்படிச் செய்யும். அவர் ஸம்பாஷணையில் எந்த வியவகாரங்களையெடுத்துப் பேசினாலும் அவையெல்லாம் நிதானமாயும், நேரியதாயும், தெளிவாயுமிருக்குமேயன்றி, மற்றவர்களைப்போல் கரடுமுரடான குயுக்தி வியவகாரம்செய்யமாட்டார். குயுக்தியான வியவகாரங்கள் அவர் ஏகதேசமாய்ப் பேசியிருந்தாலும் அப்படிப் பேசியது வேடிக்கையின் பொருட்டு இருந்திருக்குமேயன்றி, உண்மையல்ல. அவர் சிறுகுழந்தைகளோடு பழகும்பொழுதும் அப்பிள்ளைகளோடு பிள்ளைகளாய் விளையாடியும், சிரித்தும் அவர்களை மகிழ்விப்பாரேயன்றிக் குழந்தைகளிடம் கடுஞ்சொல்லேனும் கொடுமையேனும் காட்டியறியார். கல்வி அறிவில்லாத ஸாதாரணஜனங்களோடும் ஏழைகளோடும் பழகும்பொழுதும் அவர் இரக்கத்தையும் ஈகையையும் அனுதாபத்தையும் காட்டியிருக்கின்றாரேயன்றி, அவர்களை அலக்ஷியம் செய்யமாட்டார். கற்றறிந்த அறிஞர்களும் பெரியவர்களும் வந்துவிட்டால் அவர்களுக்கும் எவ்வெவ்விஷயங்கள் வேண்டியனவோ அவ்வவற்றில் நுட்பமான அறிவோடும் தெளிந்த அனுபவத்தோடும் பேசுவார். அவர் தன்னுடைய குழந்தைகளோடும் வேலைக்காரர்களோடும் பழகும்பொழுது ஒருவித தற்பெருமையாவது அதிகாரத் தோரணையாவது சிறிதும்காட்டாமல் ஒவ்வொருவருடனும் ஸ்நேகிதர்போலவும் பந்துபோலவும் நடந்துகொள்ளுவார். அவர்கள் தெரிந்துதெரியாமல் சிறியபிழைகள் செய்துவிட்டாலும் அவர்களு

க்கு ஸமயத்துக்கேற்ற புத்திமதிகூறி ஆதரிப்பாரேயன்றி, சிறிதேனும் கோபமானவார்த்தைகளைப் பிரயோகிக்கமாட்டார். அவர் தமது மனைவியை நடத்திவந்த அருமையும் அன்பும் வாய்ந்த விதத்தைப் பார்த்தால் அவர் நல்லொழுக்கமென்பதே உருவெடுத்துவந்தவரெனச் சொல்லலாம். அவர் தமது மாதாவுக்குக் காட்டிய கீழ்ப்படிவும், அன்பும், ஆதரவும், பக்தியும், பயமும் கேட்டவர் ஆச்சரியப்படத் தக்கன. தனது நண்பர்களுக்கேனும் பழகிய ஜனங்களுக்கேனும் ஏதேனும் நஷ்டமுண்டாய்விட்டகாலத்திலும், வறியவர்கள் தரித்திரத்தால் வருந்துங்காலத்திலும், அவர், அவர்களுக்குத் தன்னாலியன்றவரை உதவிபுரிந்து காப்பாற்றும்பொருட்டு முன்வருவதில் மிகுந்த பிரியமுடையவர். அவர்முன்பு பசியென்று இரந்துவந்த பிச்சைக்காரர்களாவது வறுமையென்று சொல்லிவந்த ஏழைகளாவது அதிருப்தியோடு திரும்பிச்சென்றகாலமில்லை. இவருடைய அளவற்ற தாக்ஷிண்யகுணமும் இரக்கச்சித்தமும் சில அயோக்கியர்களுக்கு நன்மையாய் முடிந்துவிட்டது. ஏழையென்றவர்களுக்கெல்லாம் மனம் சலியாதுகொடுப்பவர் என்பதைக் கேள்விப்பட்ட சில வஞ்சகர்கள் இவரை மோசம்செய்துவிட்டார்கள். இவ்விதமாக ஒரு அயோக்கியன் இவரிடம்வந்து தனக்கு ஒரு ஆபத்து வந்துவிட்டதாயும் அதைவிட்டுத் தப்பவேண்டுமானால் ரூபாய் 4,000 வேண்டுமென்றும் ஜாலம்செய்து அதைக் கடனாக வாங்கிக்கொண்டுபோய் பின்பு கொடாமல் மோசம்செய்துவிட்டான். ஆனால், நமது தாதாபாய் மகானுபாவர் அவன்மீது வழக்குத்தொடாராமல் அவனை மன்னித்து தம் பொருளையும் இழந்தார். தாதாபாய் இவ்விதமாய் அளவிற்குமிஞ்சிய தாக்ஷிண்யமும் இரக்கமும் காட்டுவது பைத்தியக்காரத்தனமென்று அனேகர் அவரைக் குறைகூறினார்கள். இதையும் அவர் கவனிக்கவில்லை. தன்னைப் பிறர் பைத்தியக்காரனென்று குறைகூறினாலும் அதை ஸகித்துக்கொள்வாரேயன்றி, அன்னியரைக் கஷ்டப்படுத்த வேண்டுமென்று நினைக்கமாட்டார். தாதாபாய் செய்துவந்த வியாபாரமுயற்சிகளில் அனேகமுறைப் பெருத்தநஷ்டங்கள் ஸம்பவித்திருக்கின்றன. என்றாலும், அதனாலுண்டான துக்கத்தை அவர் தம் மனதில் அடக்கிவைத்துக்கொண்டாரேயன்றிப் பிறருக்கு வெளியிட்டுக்காட்டி அவர்கள்மனஸையும் புண்ணாக்கினதில்லை. வியாபாரத்தில் தக்கலாபம்கிடைத்து நல்லநிலைமையிலிருக்கும்பொழுதுகூட அவர் ஸாதாரண மனிதர்களைப்போன்ற நடையுடைபாவனைகளை அனுஸரித்தாரேயன்றிச் சிறிதேனும் டாம்பிகம் செய்துகொள்ளவில்லை. அவர்

149600

தம்முடைய ஸவுகரியத்தின்பொருட்டு ஒருவண்டி வைத்திருந்தகால த்திலும் அவ்வண்டியை அவருடைய எண்ணற்ற ஸ்னேகிதர்கள்தான் உபயோகப்படுத்தினர்களேயன்றி, அனேகமுறை தன் ஆபீஸிலிருந்து கால்நடையாகவே வந்திருக்கிறார். அவர் சிறிதேனும் டாம்பிகத்தில் பிரியமுள்ளவரல்லவென்பதற்கு உதாரணமாய் அடியிற்கண்ட விஷயத்தைக் கவனிக்கலாம். இந்தியன் நாஷனல் காங்கிரஸ் மகாஸபை லாகூர்நகரத்தில் கூடினபொழுது நமது தாதாபாய் ஸபாநாயகராக வீற்றிருந்தார். அந்தக்காலத்தில் அவருக்குச் செய்யப்பட்ட வரவேற்பு உபசாரணைகளும் மரியாதைகளும் ஒரு ரோமன் சக்கிரவர்த்திக்காவது வேறு எந்த யுத்தவீரர்களுக்காவது கிடைத்திராது. அவ்வளவு விமர்சையாய் அவரையழைத்துக்கொண்டு பல்லாயிரம் ஜனங்கள் புடைசூழப் பம்பாய்நகரத்தின் வீதிகளின்வழியாய் வரும்பொழுது அவர் என்னசெய்தார்! ஆகா! என்ன அருமையான குணம்! வீதிவழியாய்ப் போய்க்கொண்டிருக்கும்பொழுதே மெதுவாய்த் தன்னுடைய வண்டியைவிட்டு இறங்கித் தமது குடும்பத்தார் வஸித்துக்கொண்டிருந்த ஒரு ஒடுக்கமான சிறுசந்துக்குள் நுழைந்து சென்றார். இத்தனை உன்னதமான பதவிக்குவந்தும் தமதுகுடும்பத்தாரை மறவாமல் அதுவும் இந்தஸமயத்தில் அப்படிப்பட்ட சந்துக்குள் நுழைந்து சென்ற மகா அருமையானகுணம் எவ்வளவு புகழத்தக்கதென்பதை கனவான்களே ஊகித்து அறிந்துகொள்ளலாம். அவர் இங்கிலாந்திலிருக்கும்பொழுது ஐரோப்பியருக்குரிய உடைகள் உடுத்தாரேயன்றி, இந்தியாவிலிருக்கும்பொழுது அவ்விதமான ஆடைகள் தரிக்கவில்லை. வழக்கம்போல் தமது ஜாதிக்குரிய ஸாதாரணமான உடையையே உடுத்திவந்திருக்கிறார். இவருடைய பெருங்குணங்கள் இவ்வாறிருக்க, இவருடைய மாதாவோ மகா புத்திசாலியாயும் லௌகிக ஞானமுள்ளவராயுமிருந்தார். தாயினிடத்தில் பக்தியும் அன்பும்காட்டி, மாதாவையே தெய்வமென்றுவணங்கும் மகோத்தமமான குணத்தில் பட்டணத்துப்பிள்ளையாருங்கூட தாதாபாய்க்கு நிகராகமாட்டார். சிறுபிள்ளையாயிருக்கும்பொழுது தாய்க்குப் பயந்துநடப்பதும், அன்புபாராட்டுவதும், உலகத்தில் அனேகருக்கு இயல்பாயுள்ளகுணம். ஆனல், பெரியவரானபின்பும் தாயை மதிப்பாய் நடத்தும் கனவான்கள் மிகவும் அருமை. தாதாபாயோதான் தக்க தனவந்தராகி நல்லநிலைமையி லிருக்கும்பொழுதுகூட தமது தாயாரின் சொல்லையே சட்டமெனவும் தேவவாக்கெனவும் எண்ணிவந்தார். தாயாரும் குமாரரும் ஒருவருக்கொருவர் நடந்துகொள்ளும்

விதம் பார்த்தோருக்கு வியப்பையும் ஆனந்தத்தையும் கொடுக்கும். தமது தாயார் சிற்சிலவேளைகளில் சிறிது நியாயவீனமாயும், ஞானமில்லாமலும், தம்மைக் கண்டித்துப்பேசினாலுங்கூடத் தாதாபாய் சிறிதேனும் கோபமாவது வெறுப்பாவது காட்டாமல் முன்னிலும் அதிகமாய்க் கீழ்ப்படிந்துநடப்பார். பிற்காலத்தில் அவருடையமக்களும் அவருடைய பேரன்மார்களும் அவர்மீது அளவற்ற அன்புடையவர்களாக விருந்தார்கள். வேலைக்காரர்களும் அவரிடம் அளவற்ற பக்தி பாராட்டினார்கள். இப்படிப்பட்ட மகானுபாவராகிய நமது தாதாபாய் நௌரோஜியார் இப்பொழுது இந்தியாவின் முப்பதுகோடி ஜனங்களுக்கும் மகா குருபீடமாய் விளங்குகின்றார். இந்தியாவின் அரும்பெரும்கிழவனாரென்று அவரை அழைப்பது அவருடைய இயல்புக்கு உண்மையாகவே தக்க திருநாமமல்லவா? இப்படிப்பட்ட மகா மேதாவிகள் உலகத்தில் ஜனியாவிட்டால் மனிதர் என்னும் வகுப்புக்கு என்னபெருமை யிருக்கின்றது? பொதுவாய் மனிதஜாதிக்கும் முக்கியமாய் இந்தியருக்கும் நமது தாதாபாய் ஒரு அரிய பூஷணமாகவே விளங்குகின்றார். பரிபூரணமானமனிதன் எப்படியிருப்பானென்பதை உலகத்திற்குக் காட்டவேண்டுமென்று பிர்மதேவன் இவரை ஓர் உதாரணமாகப்படைத்திருப்பானோவென்று எண்ணவேண்டியிருக்கின்றது. என்பவைபோன்ற இன்னும் அனேக அத்புதவிஷயங்களாம். ஆதலின், கனவான்களே! ஸ்ரீ மகாதேவகோவிந்தாரனடே அவர்கள் கூறியிருக்கிறபடி இந்த ஸகலகுண ஸம்பந்நராகிய தாதாபாய் நௌரோஜி அவர்களைத் தலைவராகக்கொண்ட இந்தியாவிலுள்ள முப்பதுகோடி ஜனங்களும் ஏதேனும் ஒருகாலத்தில் சிறந்த நிலைமைக்கு வருவார்களென்பதில் சிறிதும் ஸந்தேகமில்லை யென்பதை நம்மவர் நிச்சயமாக உணர்ந்திருக்கவேண்டும். இவ்விதமிருக்க, கனம், கோபாலகிருஷ்ண கோகலே யவர்கள் இவ்வுலகமெல்லாம் தேடியலைந்தாலும் காணமுடியாத அவதாரபுருஷரில் ஒருவராகிய தாதாபாயைக் குறைகூறும் மனிதர் சிலர் இருப்பினும் அதற்குக் காரணம் அவர்களுடைய மூளைக்குறைவுதான் என்று அபிப்பிராயப்படுகிறார். அதற்கென்ன ஸந்தேகம்? குட்டிச்சுவரில் முட்ட வெள்ளெழுத்தென்ன? ஸ்ரீமத் ராமாயணத்தில் வால்மீகிமகரிஷி ஜனகராஜ குமாரியான ஸீதாதேவியை அநிந்திதை என்று அடிக்கடி கூறியிருக்கிறார். அப்படி யாவராலும் நிந்திக்கப்படாதிருந்த ஸீதையின் பேரிலும் வண்ணான் பழிகூறியதாக அக்காவ்யத்தில் எழுதியிருக்கின்றது. பரப்பிர்மஸ்வரூபமாகிய ஸ்ரீ ராமனை வாலி நிந்திக்கவில்லையா?

திருமதஸ்தர்களும் சிரஸில் வைத்துக்கொண்டாடும் ஸ்ரீமத் ராமாயணத்தின் கதாநாயகரான ஸ்ரீ ரகுராமரை வாலி ஏசினுனென்று அதை யாரேனும் அலக்ஷியம் செய்கிறார்களா? அல்லது ராமாயணத்தின் மகிமையும் ஸ்ரீ ராமருடைய பெருமையும் குறைந்து போயிற்று? இல்லையே. அதுபோல் நமது தாதாபாய் பிறரை மோசம் செய்ய வேண்டுமென்ற கருத்தின்றி மனச்சாக்ஷிக்கு விரோதமில்லாமல் செய்யும் நற்காரியங்களில் குற்றங்கண்டு பிடித்துச் சிலர் அவரைக் குறைகூறினாலும் தூஷித்தாலும் அதனால் அவருடைய காரியங்கள் நிறைவேறாதென்றாவது அல்லது பெருமையை இழக்குமென்றாவது நாம் ஒருநாளும் எண்ண இடமில்லை. பித்தளைப்பாத்திரத்தைத் துலக்குவது அவசியம். பொன்பாத்திரத்தைத் துலக்குவது அவசியமில்லை. பித்தளைப்பாத்திரத்தை அடிக்கடி தேய்க்காவிட்டால் களிம்பு பிடித்து அஸங்கியமாய் விடும். பொன்பாத்திரத்தை விளக்காமல் எத்தனைநாள் வைத்திருந்தாலும் அதன் ஒளி குன்றாது. அதுபோல் நமது தாதாபாய் நௌரோஜி அவர்களை யார் பூஜித்தாலென்ன? யார் தூஷித்தாலென்ன? அவரிடத்தில் இயற்கையாயிருக்கிற வாசாமகோசரமான மகிமைபொருந்திய வைபவங்கள் ஒரு பொழுதும் குறையமாட்டாது. நாம் கங்காநதியின் மகத்துவத்தைப் புராணங்களில் படித்திருப்பதால், அது யாவரையும் பரிசுத்தமாக்கத் தக்கதென்பதை நம்மவர் உணர்ந்திருக்கிறார்கள். புறமதஸ்தராகிய சில ஜனங்களுக்கு அதில் நம்பிக்கையில்லை. ஆனதால், ஒரு டாக்டர் கங்காதீர்த்தத்தை யெடுத்து அதில் வாந்திபேதியை உண்டாக்கக்கூடிய சில பூச்சிகளைப்போட்டுப் பரீக்ஷித்துப் பார்த்தார். அவைகளெல்லாம் ஆறுமணிநேரத்திற்குள் இறந்துபோயின. பிறகு, கிணற்றுஜலத்தில் போட்டுப் பரீக்ஷித்தார். ஆறுமணிநேரத்திற்குள் ஒன்று பதினாயிரமாகப் பூச்சிகள் விர்த்தியாயின. இதனால் டாக்டர் இந்துக்கள்சொல்வது உண்மைதான் என்று அறிந்துகொண்டார். அதுபோல் நமது தாதாபாயைக் குறைகூறுகிறவர்கள் குருகடாக்ஷத்தைப் பெற்றுவந்து இவருடைய அத்தியாதிசய நற்செய்கைகளைச் சற்று நிதானத்துடன் ஆராய்ந்துபார்க்கும்பக்ஷத்தில் அவருடைய குணப்பிரபாவமானது இவர்களுக்குத் தெளிவாக விளங்கும். பெரியோர்களைக் குறைகூறுவது எப்பொழுதும் சிறியோர்களுக்கு இயல்பாகவே ஏற்பட்டுவிட்டது. முற்காலத்தில் பாண்டவர்கள் ராஜஸூயம் என்னும் ஓர்வேள்வியைச் செய்தார்கள். அதில் ஸ்ரீ கிருஷ்ண பரமாத்மாவுக்கு அக்கிராஸனம் கொடுக்கப்பட்டது. அந்த ஸபை

யில் பரமாத்மாவானவர் நடுநாயகம்போல் விளங்கி நடுவில் ஒரு பொற்பீடத்தில் நீலமலைபோன்ற திருமேனியும், கிருபாரஸம்பொழியாநின்ற தாமரைமலரோடொத்த கண்களும், கௌஸ்துபம், வனமாலை, சங்கு, சக்கிரம் முதலியன்வைகளுமாய்க் கோடிஸூர்யப்பிரகாசம்பொருந்தி உட்கார்ந்திருக்கிறவரைப்பார்த்துச் சிலர் இவருடையவடிவழகுக்கும், சிலர் இவருடைய மகிமைக்கும், சிலர் ஸாமர்த்தியத்திற்கும், சிலர் அடுத்தவரைக்காப்பாற்றும் தன்மைக்கும், சிலர் இவருடைய திவ்ய குணங்களுக்கும், சிலர் இவருடைய கடவுள்தன்மைக்கும் வசப்பட்டுப் பலவாறாகத் துதித்து மனமகிழ்ந்திருந்தார்கள். தர்மபுத்திர மகாராஜாவும் இந்த ஸ்ரீ கிருஷ்ணமூர்த்தி ஸபையிலிருக்கும் உல்லாஸத்தைக்கண்டு நம்முடைய ஸகல பிரயோஜனங்களும் நிறைவேறினவென்று நினைத்து ஆனந்தப் பெருங்கடலில் ஆழ்ந்திருந்தார். ஸ்ரீ கிருஷ்ணமூர்த்தியும் அவரவர் நினைப்புக்குத்தக்கபடி அவரவர்களைக் கடைக்கண்ணால் பார்த்துக்கொண்டிருந்தார். இப்படிக்குத் தேஜோமயமாய் விளங்கிக்கொண்டிருக்கும் ஸபையிலே அந்த சுத்தியாகம் என்னும் நாளிலே, பிராதஸ்ஸவனம், மாத்தியந்தினஸவனம் என்கிற இரண்டுகாலச்சடங்குகளு மானபின், ஸாயம் ஸவனமென்கிற சடங்குக்கு ஆரம்பமாகும்போது பீஷ்மர் தீக்ஷிதராயிராநின்ற தர்மபுத்திரரைப்பார்த்து, அப்பா, தர்மபுத்திரா! இப்போது முன்னே ஸபையைப் பூஜிக்கவேண்டியதானபடியினாலே, அந்தந்த வருணத்தாரையும் தனித்தனியே பூஜைசெய்யவேண்டும். அதற்காக அர்க்கியபாத்தியாதிகள் கொண்டுவந்து நடத்தென்று சொல்லக்கேட்டு, அப்படியே பூஜாவஸ்துக்களை யழைப்பித்து, கோஷ்டியில் நின்றுகொண்டு பீஷ்மரைப்பார்த்து, ஸ்வாமி குருகுல பிதாமகரே! யாருக்கு முதற்பூஜை செய்யவேண்டியதோ அதைக் கட்டளையிடவேண்டுமென்று கேட்க, பீஷ்மர் சொல்லுகிறார். இந்தச்சபையிலிருக்கும் யாவருக்கு நடுவில் அனேககோடிநக்ஷத்திரங்களுக்கு மத்தியிற்சந்திரன்போலவும், நவக்கிரகங்களின்நடுவிற் சூரியன்போலவும் யார் சிரேஷ்டராய் விளங்குகிறாரோ, பலம், சவுரியம், ஸாமர்த்தியம், புத்தி, தைரியம், தேஜஸு, கம்பீரத்தன்மை, தயை, பொறுமை, விநயம், இப்படிப்பட்ட ஸகல நற்குணங்களும் யாரிடத்திற் குடியிருக்கின்றனவோ, எவருடைய மகிமை சொல்லத் தாமில்லாததோ, எவருடைய தேஜோபலத்தைப்பற்றி இந்த யாகம் நிறைவேறிற்றோ, அந்தப்பகவானே அதற்குத் தக்கவர். அவரையன்றி, அந்த அக்கிர பூஜைக்கு யார் தகுவார்? ஆகையால், அவரையே பூஜிக்கவேண்டிய

தென்று சொல்ல, ஸரிதான் என்று ஸ்ரீ வேதவியாஸரும் ஒப்புக்கொள்ள, அப்போதே ஸகாதேவனை அர்க்கிய முதலியவைகளை யெடுத்துக்கொண்டு வரச்சொல்லி ஸ்ரீ கிருஷ்ணன் ஸமீபத்திற்சென்று நமஸ்காரஞ்செய்து, அவருடைய திருவடித்தாம்மரைகளை ரத்நமயமாகிய பீடத்தில்வைத்து திவ்ய பரிமளங்கள் சேர்த்த தீர்த்தத்தினற் சுத்திசெய்து, கந்தபுஷ்ப தூபதீபாதி ஷோடசோபசாரங்களாலும் பூஜித்து, அந்த ஸ்ரீ பாததீர்த்தத்தைச் சிரஸின்மேற் புரோக்ஷித்துக்கொண்டு புனிதனுனேன் என்று கண்களில் ஆனந்தபாஷ்பம் பெருகத் தேகம் புளகமுற்றுக் களித்து நின்ருர். இவ்விதமாக ஸ்ரீ கிருஷ்ணனுக்கு முதற்பூஜை நடத்துவதைக்கண்ட தேவரிஷிகள், பிர்மரிஷிகள், ராஜரிஷிகள் யாவரும் தகும்தகுமென்று சொல்லிப் பீஷ்மரையும் தர்மபுத்திரரையும் கொண்டாடினர்கள். க்ஷத்திரியரிற் சிலர் பொருமைகொண்டு, உள்ளம்வெந்து, ஸகிக்கமாட்டாமற் பெருமூச்சு விட்டுக்கொண்டு, ஒன்றுஞ்சொல்லத் தைரியமில்லாமல் நாலு பக்கங்களையும் சும்மா பார்த்துக்கொண்டிருந்தார்கள். இந்தக் குறிப்பையறிந்த ஸகாதேவன் ஸ்ரீ கிருஷ்ணனுக்குப் பூஜை நடத்துவதற்காக எவரும் பொருமைப்படாதீர்களென்ருன். அதுகாலையில் சேதிதேசத்து ராஜனுகிய சிசுபாலன் பிறந்ததுமுதற் கிருஷ்ணனிடத்தில் கொடிய பகைகொண்டவனுனபடியினலே, மனங்கன்றி, முகங்கருத்து, கண்சிவந்து, உதடுதுடிக்கச் சபையைப்பார்த்துச் சில வார்த்தைகள் சொன்னுன். ஓ, ராஜாக்களே! இந்தச்சபையில் ஸகலராஜாக்களுக்கும் அவமானமும் இடையனுக்குப் பூஜையும் கிடைத்ததுஸரிதான். இச்சபையில் அனேகம் பெரியோர்கள் வந்திருக்கிருர்களே யவர்களுக்குக் குறைவுண்டாவென்கிறீர்களோ? உண்டு. எப்படியென்ருல், இந்தயாகத்தை நல்ல ஸத்குலத்திற்பிறந்த க்ஷத்திரியன் செய்யத்தகும். இந்த யுதிஷ்டிரனே பாண்டுமகாராஜாவினுடைய பெண்சாதியாகிய குந்திதேவிக்கு விபசாரத்தாற் பிறந்தவன். முதலிற்றுனே யாககர்த்தாவின்செய்தி இப்படியாயிற்று. இவனுக்குத் தருமம் உபதேசித்தானே அவன் எப்படிப்பட்டவனென்ருல், குலதர்மமாயிருக்கிற ராஜ்யாதிபத்தியத்தைத் துறந்து, பிர்மசாரியாகித் துரியோதனன்கீழ் சோற்றுக்குக் காத்திருக்கிறவன். அன்றியும், காசிராஜன்மகளை வாழவொட்டாமற் கெடுத்த மகாபாவி. குருவாகிய பரசுராமன் சொல்லைக்கேளாமல் அவரோடெதிர்த்து யுத்தஞ்செய்தவன். குருத்துரோகி. இவனுடைய தாயோ, க்ஷத்திரிய கன்னிகையல்லள். சாபத்திற்பிறந்தவள். பிள்ளைகளைக் கொன்றவள். இவன்

தகப்பனே, அவள் சிசுஹத்திசெய்தாலும் செய்யட்டும். நமக்கு போகத்துக்கு உரியவளாகவிருந்தாற் போதுமென்று ஒப்புக்கொண் டிருந்த மகாகாமி. இவனே, வேஷம்போட்டுக்கொண்ட ஆஸாமி. இது ஸரிதானென்று ஒத்துக்கொண்டவன் மீன்வாணிச்சி வயிற் றிற்பிறந்த யோக்கியன். அக்ரபூஜையை யடைந்தவன் யாரெனில், ஜாரசோரசிகாமணியாகிய இடையன். இப்படிப்பட்ட யோக்கியர் கூடியஸபையில் க்ஷத்திரியர்களுக்குப் பூஜை யெப்படி கிடைக்கும்? கிடைக்காது. என்று பீஷ்மரைப்பார்த்துச் சொல்லுகிறான். ஓ, பீஷ்மா! நீ க்ஷத்திரியனென்றும், வெகு புத்திமானென்றும் பேர் பெற்றுப் பூஜைக்கு யோக்கியனைக் கண்டுபிடித்து நன்றாய்த் தெரி வித்தாய். இவ்வளவுநாளும் நீ விவேகியென்று நினைத்திருந்தேன். உன்னைப்போ லறியாதவனை நான் கண்டதில்லை. ஆனாற் கிழத்தனம் வந்தபடியினாலே புத்தி மாறிப்போயிருக்கும். இப்படிக்கு வாய்த் தது கோபாலனுடைய அதிர்ஷ்டவசந்தான். நல்லதிருக்கட்டும். நீ தான் மதிமயங்கிச் சொன்னாலும், இச்சபையிலிருந்த புத்திசாலிக ளுங்கூட ஊமைகள்போ லிருந்தார்களே. அவர்களுக்கும் புத்தி மயங்கிற்றோ? அல்லது, அந்த மாயாவியாகிய கோபாலன் அறிவை மயக்கிவிட்டானோ? என்று சொல்லித் தருமபுத்திரரைப்பார்த்துச் சொல்லுகிறான். ஓ, தருமபுத்திரா! நீ இந்தச்சபையை உற்றுநோக்க வில்லையென்று தோற்றுகிறது. நோக்கி யிருப்பாயேயாகில், முக்கு லத்தரசர் முதலியோரைப் பார்த்திருப்பாயே. பார்த்திருந்தால் இந்த இடையனைப் பூஜிப்பாயோ? மகா புத்தி மான்களெல்லாமிருக்க, ஒரு மூடக்கிழவன் பேச்சைக்கேட்டு இவ்வளவு ராஜாக்களையும் அவமா னம் பண்ணுயே. இது உனக்குத் தகுமா? நீ விவேகியென்று பேர் பெற்றது யுக்தமன்று. நல்லது. நீ பூஜிக்கத்தொடங்கினவன், குலத் தில் உயர்ந்தவனா? செல்வத்தில் உயர்ந்தவனா? புத்தியில் உயர்ந்த வனா? நடத்தையில் உயர்ந்தவனா? ஒருவிதத்திலும் உயர்வில்லாத ஒரு அற்பனிடத்தில் உனக்கு மதிப்புண்டாகியது காலபலந்தான். ஆ! ஆ!! என்ன ஆச்சரியம்! மகா மண்டலாதிபதிகளெல்லாமிருக்க, ராஜ்ய பட்டாபிஷேகமின்றித் திரிகிறவனுக்கு வெகுமானம் வந் ததே. ஓ! ஓ!! வயதினாற் பெருமையைநோக்கினால், அவனுடைய பிதா வஸுதேவனிருக்கிறான். ஆப்தபந்துத் தன்மையை நோக்கி னால், துருபதமகாராஜனிருக்கிறான். ஆசாரியனென்றால், தநுர்வே தமே மூர்த்திகரித்ததுபோல துரோணாசாரியர் இருக்கிறார். மகாத் மாவென்றால், ஸாக்ஷாத் நாரதமுனிவர் எழுந்தருளியிருக்கிறார். குல

விருத்தன் என்றால், பீஷ்மன் இருக்கிறான். சௌரியத்தைப்பற்றி என்றால், ஆசாரியபுத்திரராகிய அசுவத்தாமா விருக்கிறார். அன்றியும், கிம்புருஷருக்கெல்லாம் ஆசாரியனாகிய மகாபராக்கிரமசாலியென்னும் துரும னிருக்கிறார். இன்னும் சௌர்யத்திலும் பராக்கிரமத்திலும் மிகுந்தவரைநோக்கினால், அர்ஜுனனோடு ஸமானனாகிய ஏகலவியனென்னும் வேடனிருக்கிறான். பகதத்தன் இருக்கிறான். ஜயஸேன னிருக்கிறான். பிருகத்பலனிருக்கிறான். இவர்களையெல்லாம் விட்டுவிட்டு இந்தக்கருப்பனை என்னகாரணத்தினால் பூஜித்தாய்? இன்னும் பந்துக்களில் பாண்டியராஜன் வந்திருக்கிறார். சல்லியனிருக்கிறார். பாக்லிகனிருக்கிறார். இவர்களையெல்லாம் அவமானம் பண்ணத்தகாது. அன்றியும், பரசுராமருடைய சிஷ்யனாய் தநுர்வேதபாரங்கதனாகிய கர்ணனையும் லக்ஷியம்செய்யாமற் போனதற்குக் காரணமென்ன? எனக்கு அவனிடத்திலேதான் இஷ்டமானதால் அவனையே பூஜித்தேன் என்பாயாகில், அதற்கு இப்படியாகவிருக்கிற மகாராஜாக்களை யாகத்திற்கு வரவழைக்கவேண்டியதென்ன? அல்லது உன்வீட்டிலே அவனுக்கு வேண்டியபடி பூஜைசெய்யாமல் மண்டலாதிபதிகள்முன்னே ஸேவகனுக்கு ஸமானனாகிய அவனைப் பூஜிப்பது உனக்குத்தகுமா? நீ உனக்கு யாவரும் பயந்து கப்பங்கட்டியதாக கர்வித்திருக்கிறாய். அப்படிக்கு நினையாதே. நீ தர்மசீலனாயிருப்பதைப்பற்றிக் கொடுத்தார்கள். இல்லாவிட்டால் இங்கே வந்திருக்கிற வீரருக்கு நீ எவ்வளவு? ஒரு மூடக்காகத்தைப்பற்றி அன்னங்களோடு பகைப்பதுபோல், கிருஷ்ணனைப்பற்றி மகாராஜாக்களோடு பகைக்கிறாய். இப்படிச்செய்வது உனக்கு வெகு சீக்கிரத்தில் தீமையை உண்டுபண்ணிவிக்கும். உன்குலத்திற்கேற்ற புத்தி உனக்குண்டாயிற்று. ஒரு குணமுமில்லாத அற்பனைப் பூஜித்ததற்குப் பயன் சீக்கிரத்திலேயே கிடைக்குமென்று சொல்லி, ஸ்ரீ கிருஷ்ணனைநோக்கிப் பின்னும் சொல்லுகிறான். அடா, கிருஷ்ணா! அவர்கள்தான் தெரியாமல் பூஜித்தாலும் நீ இவ்வளவு மகாபுருஷருடைய ஸபையில் அச்சமில்லாமலும், உன் குலம், உன் நடத்தை முதலியவற்றை யோசிக்காமலும், அந்தப்பூஜையை ஏற்றுக்கொள்ளலாகுமா? பெரியோர்களுக்காகச் சமைத்துவைத்த அன்னத்தை நாய் தின்னக்கூடுமா? அந்தப்பூஜையை ஏற்றுக்கொள்ள உனக்கு வெட்கமாயிருக்கவில்லையா? உலகத்திலே ஒருவன் தனக்குத்தகாதெனவற்றை அடைவதினால் அவமானமேயல்லது வெகுமானம் ஸம்பவிக்கமாட்டாது. அடா, பைத்தியக்காரா! அடா, மூடா! நீ பூஜையைப்பெறுவது

நகைப்புக்கிடமென்று அறியாமற்போனாயே. துரியோதனாதிகள் சிரிக்கிறார்களே. ஆனால், இந்தஸபையில் பாண்டவர்களும், பீஷ்மனும், நீயும்தான் இருக்க யோக்கியமேயல்லது, மற்றொருவரும் யோக்கியரல்லர். என்று சொல்லி மற்ற ராஜாக்களைப்பார்த்து, நீங்கள் இந்த ஸபையிலிருப்பது நன்றாகவிருக்கவில்லை. ஆதலால், விரைவில் எழுந்திருங்களென்று அழைத்துத் தான் சரேலென்று ஆஸனத்தைவிட்டெழுந்து ஸபைக்குப் புறம்பாகப்போனான். அப்போது தர்மபுத்திரர் பின்னாலேயோடி அவனையணைத்துப் பிடித்துக்கொண்டு ஒரு வார்த்தைசொல்லுகிறார். அப்பா, சிசுபாலா! நீ கோபித்தல் யுக்தமன்று. பொறாமையாலும், அறியாமையாலும், கர்வத்தினாலும் வாயில்வந்தபடி பேசுவது புத்திமானுக்கு லக்ஷணமா? நீ நிந்தித்ததுபோல் இவ்வளவுகாலத்தில் எங்கள் யாவரையும் யாரும் நிந்தித்ததில்லை. ஸ்ரீ கிருஷ்ணன், வேதவியாஸர், பீஷ்மர் முதலானவர்களை அறிவில்லாதவர்களென்று எவனும்சொல்லத் துணியமாட்டான். நீ இந்தஸபையில் எவரெவர்களைப் பெரியோர்களென்றும், விவேகிகளென்றும் நினைத்துச்சொன்னாயோ, அவர்களெல்லாம் பீஷ்மர் சொல்லியது ஸரியென்றும், ஸ்ரீ கிருஷ்ணனே பூஜிக்கத்தக்கவரென்றும் ஒப்புக்கொண்டு ஸந்தோஷத்துடனிருக்க, உனக்குமாத்திரம் ஏன் வீணாய்க் கோபமுண்டாயிற்று? முற்றுமறிந்த பெரியோர்கள் சொல்வதை நாம் பொறுமையோடு அங்கீகரிக்கவேண்டும். நமது புத்திக்கு அது ஸரியாகத் தோற்றவில்லையென்று அவர்களை நாம் நிந்திப்பது நியாயமன்று. பீஷ்மரோ மகானுபாவர். எல்லாம் அறிந்தவர். அவர் ஸ்ரீ கிருஷ்ணனுடைய மகிமையைச் சரியாயறிந்திருப்பவர். நீ அறியமாட்டாய். அன்றியும், இச்சபையிலிருக்கும் தேவரிஷிகள், பிர்மரிஷிகள், ராஜரிஷிகள் யாவரும் பீஷ்மர் சொல்லிய வார்த்தையைக்கேட்டு, இவர் மகா விவேகியாதலால் ஸரியாய்ச் சொன்னாரென்று ஸந்தோஷித்துக்கொண்டாடினார்கள். அப்படியிருக்க, உனக்குமாத்திரம் ஏன் வீணான ஆக்கிரோசம் வருகிறது? வேண்டாம். அந்தக்கோபத்தை விட்டுவிடு. பெரியோரை நிந்தித்துப் பெரும்பாவியாகாமல், நற்குண நற்செய்கைகளோடுகூடி யாகம்முற்றும் ஆகிறவரையிலிருந்து ஸந்தோஷமாய்ப் போவென்று சொல்லிக்கொண்டிருக்கையில், பீஷ்மர் தர்மபுத்திரரைப்பார்த்துச் சொல்லத்துவக்கினார். அப்பா, தர்மபுத்திரா! இந்தத் துராத்மாவுக்கு நல்லவார்த்தை சொல்லலாமோ? சொல்லியும் பிரயோஜனப்படமாட்டாது. இவனுடைய துர்புத்தியைப்பார். லோகநாதனான ஸ்ரீ கிருஷ்ணனுக்குச் செய்த பூஜையை ஸகிக்

காமல் அக்ங்காரப்படுகிறான். இப்படிப்பட்ட துஷ்டன் வேறொரு வருமில்லை. லோகத்தில் க்ஷத்திரியருக்குள் ஒரு தர்மமுண்டு. அதென்னவென்றால், யுத்தத்தில் எவனையெவன்ஜயித்துப் பிராணனோடு விடுகிறானோ, அவனுக்கு அவன் குருவென்பதுதான் தர்மம். நெடிய கடல்சூழ்ந்த இப்பூமண்டலத்தில் ஸ்ரீ கிருஷ்ணனாலே ஜயிக்கப்படாதவர் யார்? இந்தச் சிசுபாலனும் உருக்குமணி விவாஹத்தின்போது ஜயிக்கப்பட்டவன்தான் அல்லவா? அப்படியிருக்க, அதைக்கூட நினையாமற் குதிக்கிற இந்த மூடனுக்கு நல்லவார்த்தை உதவாது. இவன் குருத்துரோகியாகிறான். எப்படிக்காயினும், இந்த ராஜமண்டலத்தைச் சோதிக்குமளவில், ஸ்ரீ கிருஷ்ணனுக்கே யாவரும் தாழ்ந்தவராகக் காணப்படுகிறார்கள். இதுவே தகுந்ததென்றுதான் இச்சபையிலிருக்கும் பெரியோர்கள் ஸம்மதித்திருக்கிறார்கள். இந்தமூடனுக்குச் சம்மதியில்லாமற்போனால் கெடுதியென்ன? இப்போது ஸ்ரீ கிருஷ்ணன் இச்சபையிலிருக்கும் அவர்களுக்குட் சிறந்தவரென்று ஸாதாரணமாய்ச் சொன்னேன். யதார்த்தமாய் அவர் மகிமையைச் சொல்லத்துவக்கினால், அது ஆதிசேஷனுக்கும் அஸாத்தியமாய்விடும். அவர் இந்தப் பூலோகத்தில் மாத்திரமே யாவருக்கும் பூஜிக்கத்தக்கவரல்லர். மற்றென்னவென்றால், ஸகலலோகங்களிலும் பூஜிக்கத்தகுந்தவர். இவருடைய சரீரத்திலே ஸகலசராசரங்களும் நிறைந்திருக்கின்றன. இவரிடத்திலிருந்துதான் யாவுமுண்டாயின. இனியொடுங்குவதும் இவரிடத்திலேயே. எல்லாவஸ்துக்களுடைய சக்தியும், அதிசயமும் இவருடையவைகளே. இவரது கிருபையினாலே உலகங்களுக்குச் சகல மேன்மைகளுமுண்டாயின. இப்படி எல்லாவற்றிற்குங் காரணமும் ஈசுவரனுமாகிய ஸ்ரீ கிருஷ்ணனுக்குப் பூஜை செய்யாமல் மற்ற யாருக்குப் பூஜைசெய்வது? இந்தச் சிசுபாலனைக் காட்டிலும் வயதிலும், பராக்கிரமத்திலும், புத்தியிலும், மேன்மையிலுஞ் சிறந்தவர் அனேகர் இச்சபையிலிருக்கிறார்கள். அவர்களெல்லாம் ஸந்தோஷித்திருக்க, இந்தப் பாவிக்கேன் இவ்வளவு கர்வமும், அகங்காரமும் உண்டாயின? இவன் பெரியோர்நடந்தவழி நடப்போமென்று நினைக்காமல், நிலத்தில் வீழ்ந்த நெல்லிக்காய்போல ஏன் குதிக்கின்றான்? இப்படியிருக்க, இந்தப்பாவிக்குச் சமாதானம் சொல்லலாமோ? தகுந்த சிக்ஷைசெய்தால் அல்லவோ புத்திவரும். நான் வெகு ஞானிகளுக்குப் பணிவிடைசெய்திருக்கிறேன். அவர்கள் என்னிடத்தில் அனுக்கிரகம்வைத்து தத்துவஞானம் போதிக்குமளவில், அப்பொருள் இவர்தானென்றும், இவர் அவதாரமானது

முதல் தான்செய்த மகாசரித்திரங்கள் இவையென்றுஞ் சொல்லியிருக்கிறார்கள். அவைகளைக் கேட்டிருந்தவனானபடியினாலே அக்கிரபூஜை இவருக்குச் செய்யச்சொன்னேனல்லது, தாக்ஷிண்யம், பயம், ஸ்நேகம், பிரயோஜனம் இப்படிப்பட்ட காரணங்களாலே செய்யச் சொல்லவில்லை. இஃதிருக்கட்டும். லோகரீதியாய்ப் பார்த்தாலும் ஸ்ரீ கிருஷ்ணனே உத்தமன். எப்படியென்றால், வேதியருக்குள் ஞானமெவனுக்கு அதிகமோ, அவன் பெரியவன். க்ஷத்திரியருக்குள் பலமெவனுக்கு அதிகமோ, அவன் பெரியவன். இந்தக் கிருஷ்ணனிடத்தில் மேலாகிய ஞானமும் பலமும் இருப்பதுபோல மற்றயாரிடத்தில் இருக்கின்றன? யாவரிலுஞ் சிறந்தவனென்னும் புகழ் யாரிடத்திலிருக்கின்றது? இவையெல்லாம் உலகத்தை நன்றாய்ப் பரிசோதித்தால் தெரியும். அப்படிக்கின்றிக் கிணற்றிலிருக்கும் ஆமைபோலிருப்பவனுக்குத் தெரியுமோ? நல்லது, ஆகட்டும். வேதவேதாந்தக் ஞானங்களிலும் தனுர்வேத ரகஸ்யங்களிலும் இச்சபையிலிருப்போரைப் பரீக்ஷித்தால் அப்போது தெரியும். சவுரியம், புத்தி, பொறை முதலாகிய ஸத்குணங்களும் அப்படியே பரீக்ஷைசெய்தறியலாம். இப்படிக்கு ஸகலவிதத்திலும் பெருமையையுடையவராய்ப் பிர்மன் முதலாகிய தேவர்களாலும் பூஜிக்கத்தக்கவராயிராநின்ற ஸ்ரீ கிருஷ்ணனை நியாயமாகவும், தர்மமாகவும், நாம் பூஜித்திருக்க, இந்த துஷ்டன், இவனென்ன ஆசாரியனா? ஞானியா? குலகுருவா? இஷ்டபந்துவாவென்று கேட்டானன்றோ? ஆம். எல்லா மவர்தான். இதற்குச் சந்தேகமில்லை. இப்போதென்ன சொல்லுகிறான்? (கலசத்திற்குத் தெரியுமோ கர்ப்பூரவாஸனை) என்பதுபோல் மகா புருஷர்மகிமைப் பிறவிக் குருடனுக்குத் தெரியுமோ? இனியாவது அந்தமூடன் தெரிந்து கொள்ளட்டும். பிருதிவிமுதலாகிய பூதங்கள், தன்மாத்திரைகள், ப்ரகிருதி, மகத்து, அகங்காரம், இந்திரியங்கள், அந்தக்கரணங்கள், இவையாவும் ஸ்ரீ கிருஷ்ணனாலேதான் சிருஷ்டிக்கப்பட்டு, ரக்ஷிக்கப்பட்டு, அழிக்கப்படுகின்றன. சிருஷ்டிகர்த்தாவாகிய பிர்மனும், ஸம்ஹாரகர்த்தாவாகிய சிவனும், இந்திரன், அக்கினி, இயமன், வருணன், வாயு, சூரியன், சந்திரன் இவரெல்லாம் இந்த ஸ்ரீ கிருஷ்ண தேவனே. ஸகல ஆத்மகோடிகளும், பல அண்டங்களும், பற்பல அதிசயமாயிருக்கின்ற யாவும் இவரே. இவரல்லாது தெய்வமில்லை. லோகத்தாரை அனுக்கிரகிக்கவேண்டுமென்று மனிதருக்குள் மனிதராய் அவதரித்திருக்கிறார். வேதவேதாந்தங்களெல்லாம் இவர் பெருமையைப் பேசுகின்றன. யோகிகளும், தேவர்களும், இவரையே

தொழுகின்றனர். வேதியரெல்லாம் இவரைத் தியானித்தே வேள்வி செய்கின்றனர். சுருக்கமாக யாவையுஞ் சொன்னேன். இந்தப் பேதையாகிய சிசுபாலன் இவையெல்லா மறியாதவனானபடியினாலே, அவரிடத்தில் மிகவும் அபசாரப்பட்டான். இப்போதாகிலும் மெய்யையறிந்து அவரைத்தொழுது வேண்டிக்கொண்டால் கடைத்தேறுவான். இல்லாவிடிற் சீக்கிரத்திற் கெட்டுப்போவான். நாம் ஸகல லோகநாதனாகிய கிருஷ்ணனுக்குச் செய்தபூஜை அநியாயமென்று இந்தமடையனுக்குத் தோற்றினால் நாமென்னசெய்யலாம்? இப்போது அவன் எல்லாரைப்போலும் நியாயத்தைநினைத்து இந்தச் சபையிலிருக்க மனமுண்டானா லிருக்கட்டும். ஸம்மதியில்லாவிட்டாற் போகட்டும். அல்லது, இன்னும் என்னசெய்ய வல்லமையிருக்கிறதோ அதைச்செய்யட்டும். அவனை நீர் ஸமாதானம் செய்யவேண்டாம். வாரும் தர்மநந்தனா வென்று பீஷ்மர் சொல்லக்கேட்ட சிசுபாலன் காற்றினால் எழுப்பப்பட்ட கனல்போற் கோபத்தினால் ஜ்வலித்தான். அப்போது அவனைப்பார்த்துச் சகாதேவன் ஒருவார்த்தை சொல்லுகிறான். ஓ, சிசுபாலா! நீ குணங்களையும், தோஷங்களையும் எவ்வளவும் விசாரிக்காமல் வீணாய்க் கோபித்துக்கொள்வதிற் பயனென்ன? எல்லாவரசரும், ரிஷிகளும், பெரியோரும், ஒத்துக்கொள்ளும்படிக்கும், உனக்கும் எனக்கும் மற்றவருக்கும் நன்மையுண்டாகும்படிக்கும் ஸ்ரீ கிருஷ்ணனுக்குப் பூஜைசெய்யலாயிற்று. இவ்விஷயத்தில் நீ அறியாமையாலும், பொறாமையினாலும் பெரியோரை நிந்திப்பது மிகவு மிழிவாகியசெய்கை. நீ கிருஷ்ணனுடைய மகிமையை ஆழ்ந்து நோக்காமற்போனாலும், உலகத்திலிருக்கும் அரசருக்கெல்லாம் அதிகமாகிய பலபராக்கிரமங்களுடையவரென்பதை என் நினைக்கவில்லை? நான் இப்போதொன்று சொல்லுகிறேன்கேள். இந்தக்கண்ணனுக்கு முதற்பூஜை நடந்ததைக்குறித்து யார் பொறாமைப்படுகிறார்களோ, அவர்கள் வில்லேந்தி என்னுடன் போர்செய்யவரட்டும். அவர்களின் தலைமேல் இதோ இந்த இடதுகாலைத்தூக்கிவைக்கிறேன் என்றுசொல்லிக் காலைத்தூக்கினான். இவ்வாறு ஸகாதேவன் யாவரும்கேட்கும்படிசொல்லிக் காலைத் தூக்கிக்காட்டவே, ஒருவரும் ஒன்றுஞ் சொல்லாமற் சிலர் மனவருத்தத்தையும், சிலர் ஸந்தோஷத்தையும் அடைந்தார்கள். தேவர்கள் புஷ்பவருஷம் வருஷித்தார்கள். இவைகளையெல்லாம் பார்த்த சிசுபாலனுக்குக் கோபமானது ஆகுதி செய்யப்பட்ட அக்கினிபோல் ஜ்வலித்து, கண்கள் ரத்தக்குமிழிகள் போலச் சிவந்து சுழலமிட, உதடு படபடவென்று துடிக்க, தேக

மெல்லாம் வியர்வையரும்பி நடுக்கமுற, பிரளயகாலத்து ருத்திரன் போல விருந்தான். அப்போது பீஷ்மர் சிசுபாலனையும் மற்றப்பேர்களையும் பார்த்து, யாவரும் இந்தவார்த்தையைக் கேளுங்கள். என்னவென்றால், ஸகாதேவன் இப்போது சொல்லியவார்த்தை மெய்யாயும் நியாயமாயுமிருக்கிறது. இதன்மேல் யாருக்காவது ஏதாகிலுங் குற்றஞ்சொல்லத் துணிவிருந்தாற் சொல்லலாம். அல்லது, வலிமையைக்காட்டத் திறமிருந்தாற் காட்டலாம் என்றார். அதற்குப் பெரியோர்களெல்லாம், ஸரிதான், ஸரிதான், ஒரு குற்றமுமில்லையென்று கொண்டாடினார்கள். இவைகளையெல்லாங் கேட்ட தர்மபுத்திரர் மனக்களிப்புடனே பீஷ்மரைப்பார்த்துக் கைகூப்பிக்கொண்டு ஒரு வார்த்தைசொல்லுகிறார். ஐயா, குருகுலபிதாமகரே! நீர் யாவுமறிந்த மகானுபாவரன்றோ? அன்றியும், ஸ்ரீ கிருஷ்ணனுடைய சரித்திரமும், மகிமையும் பலவுண்டென்று சொன்னீர். அவைகளை ஸவிஸ்தாரமாகக் கேட்க ஆசைகொண்டிருக்கிறேன். ஆதலால், இங்கிருப்பவர்கள் யாவரும் அறியத் தயைசெய்து நன்றாய்ச் சொல்லவேண்டும். என்று தருமபுத்திரர் அன்போடுகேட்க, கங்காபுத்திரர் அவ்வாறே அங்கிருப்போர் யாவரும் மனதொருமித்துச் சிரவணானந்தமாகக் கேட்கும்படி சொல்லத்தொடங்கினார். ஓ, தர்மபுத்திரமகாராஜனே! இந்தப் பகவானாகிய ஸ்ரீ கிருஷ்ணமூர்த்தியினுடைய அவதாரமகிமைகளை நீ கேட்கிறபடியால் நானும் சொல்ல விருப்புற்றிருக்கிறேன். அச்சரித்திரமகிமைகளை இச்சபையிலிருக்கும் பெரியோர்கள் பலருமறிவார்கள். அறியாச் சிலமாந்தருக்கும் "நெல்லுக் கிறைத்தநீர் வாய்க்கால் வழியோடிப் புல்லுக்கு மாங்கே பொசியுமாம்" என்கிறபடி இது கேள்வியாகி ஜன்மஸாபல்யமுண்டாகட்டும். இதோ அருள் சுரக்கும் நோக்கத்தோடு காளமேகம்போற் சபைக்கொரு நாயகமாய் விளங்காநின்ற மகா புருஷன்தான் ஸகல வேதவேதாந்தங்களினாலே, அவ்யக்தமென்றும், அக்ஷரமென்றும், பராபரமென்றும், பிர்மமென்றும், காரணமென்றும், காரியமென்றும், காரணாதீதமென்றும், ஸத்தென்றும், அஸத்தென்றும் சொல்லப்பட்டபொருள். அவருடைய ஸ்வரூபமும், செய்கையும், மகிமையும், வாக்குக்கும் மனதிற்கு மெட்டாதது. இன்னபடியென்று யாரும் நிச்சயிக்க வல்லவரல்லர். ஆகிலும், ஆதிகாலத்தில் சிரங்களாயிரம், கரங்களாயிரம், கால்கள் ஆயிரம், கண்களாயிரம், இப்படிப்பட்ட ஸ்வரூபத்தையடைந்து, ஸகல பிர்மாண்டங்களும் தன்மயிர்க்கால்களிலுழலும்படி அனேககோடி சூரியபிரகாசமாய் அளவற்ற ஸ்வரூபத்தோடு விளங்கினார். அக்கடவு

ளுடைய ரூபமும் ஒருபோதிருந்தபடி மறுபோதிராது. பல விசித்திரமாயிருக்கும். அவருக்கு ஆதியும் அந்தமுமில்லை. எல்லாவற்றிற்கும் அவரே ஆதியாயிருப்பவர். ப்ரகிருதியென்றும், மாயையென்றும் சொல்லப்பட்ட வஸ்துவுக்கு மேற்பட்டவர். அந்த வஸ்துவும் அவரிடத்திலேயேயிருக்கும். ஆனாலும், அதிற் பற்றற்றவர். அவர் உலகங்களை சிருஷ்டிக்க நினைத்து, முன்னே நீரையுண்டாக்கி, அதன்மேல் தான் கண்வளர்ந்துகொண்டிருந்தார். அதனாலே யவருக்கு நாராயணனென்னும் நாமமுண்டாயிற்று. இவ்வாறு யோகநித்திரையிலிருந்து பிர்மனை யுண்டாக்கி, அவனைக்கொண்டு மற்ற உலகங்களையெல்லாம் படைப்பித்துக் காத்து, பிரளயகாலத்தில், படைக்கப்பட்ட யாவையும் உட்கொண்டு, தாம் ஒருவராகவே ஒரேரூபமாகி யிருந்தார். அப்போது அவர் விசுவரூபியென்று சொல்லப்பட்டார். ஏனெனில், உலக்ங்களெல்லாம் அவருடைய ரூபமாய்க் காணப்படுமளவில், மேலாகிய ஸ்வர்க்கம் அவருக்குச் சிரஸாகவும், ஆகாசம் நாபியாகவும், பூமி பாதமாகவும், அசுவினிதேவர்கள் செவிகளாகவும், சூரியசந்திரர்கள் கண்களாகவும், இந்திராக்கினிகள் முகமாகவும், ஒவ்வொரு தேவர்கள் ஒவ்வொரு உறுப்பாகவும், மற்றச் சராசரங்களெல்லாம் அங்கமாகவும் இருக்கப்பெற்றனர். இவ்வாறு தாமே யாவுமாகி, எல்லாவற்றினுள்ளு முறைபவருமாகி, நாராயணனென்று திருநாமம் பெற்றும், முற்றும் அந்தகாரமாகவே யிருப்பதைக்கண்டு தாமே பிர்மரூபியாகி, அண்டத்தையுண்டுபண்ணித் தமது ஸங்கல்பத்தினாலேயே எல்லாவுலகங்களையும் படைத்து அவைகளின் வான்முறைகளையும் விதித்து அகண்டாதிபதியாயிருந்தார். ஸனகர் முதலிய யோகிகளும், ருத்திரமூர்த்தியும், ஸப்த ரிஷிகளும், அவராலே சிருஷ்டிக்கப்பட்டார்கள். அன்றியும், தக்ஷர் முதலிய பிரஜாபதிகளையும் படைத்தார். இவர்கள் அநேகரை சிருஷ்டிசெய்து உலகங்களைப்பெருக்கிப் பகவானுடைய லீலையை நிறைவேற்றினார்கள். இவ்வாறுக் எத்தனைதரமோ பிரபஞ்சசிருஷ்டி வெவ்வேறுவிதமாய் அவராற்செய்யப்பட்டது. எத்தனையோ பிரளயங்களுமாயின. சக்கிரஞ் சுழலுவது போல் சிருஷ்டிப்பிரளயங்கள் ஓய்வில்லாமல் மாறி, மாறி, வந்துகொண்டேயிருக்கும். ஆனால், காரணனாகிய இந்நாராயணன்மாத்திரம் என்றும் ஒரேவிதமாயிருப்பார். முன்னுரைத்தபடியே தனது அம்சத்தினாலே பிர்மதேவனைப்படைத்து அண்டாதிபதியாக்கித் தாம் அவைகளைக் கார்க்கும்பொருட்டுத் திருப்பாற்கடலிற் பள்ளிகொண்டு அங்கு யோகநித்திரையிலிருந்து அனுக்கிரகஞ்செய்து வந்

தார். பிரளயத்தில் ருத்திரமூர்த்தியைக்கொண்டு யாவையும் அழிக்கச்செய்தார். இப்படியே மறுபடியும் பிர்மனுயிருந்து சிருஷ்டித்து, வெகுகாலம் யாவும் ஸுகாதிகளை யனுபவிக்கும்படி ரக்ஷித்துக் காலாக்கினி, ருத்திரரூபியுமாகியழித்தார். அப்படி யழித்ததுபற்றி ஹரியென்கிற திருநாமமடைந்தார். அந்தத்தேவன் எந்தவேளையில் எப்படிச் செய்யவேண்டுமென்று நினைப்பாரோ, அதற்குத் தடையொன்றுமிராது. தனதிச்சையின்படி அனேகரூபங்களைக்கொண்டு ஜகத்தையழிப்பார். அப்படிப்பட்ட அவதாரங்களிதுவரையில் எத்தனையோ ஆயின. இனியெத்தனையோ ஆகும். இவைகளை முற்றுமறிய யாரால் தரம். யான் பெரியோர்சொல்லினு லறிந்தமட்டும் சிலவற்றைச் சுருக்கமாகச் சொல்லுகிறேன் கேள். முன்னம் நீரையுண்டாக்கி அதில் அண்டத்தை சிருஷ்டித்தாரே, அது கோழிமுட்டையைப்போல் நீரில் மிதந்து நீரினுல் நிறைந்திருந்தது. அதில் தான் பிரவேசித்து ஆலிலையிற் பள்ளிகொண்டு, தமது நாபியில் ஒரு தாமரைப்பூவையும் அதிற் பிர்மனையும் படைத்து, அவனில் தாம் அனுப்பிரவேசித்துப் பதினுறு பிரஜாபதிகளையும், ஸப்த ரிஷிகளையும், கபில மகாமுனியையும், ஏகாதச ருத்திரரையும், துவாதசாதித்தியரையும், பதினுலு மநுக்களையும், ஸனகர் முதலிய யோகிகளையும், ஸப்தமருத்துக்களையும், அஷ்டவஸுக்களையும், இந்திராதிகளையும், மற்றுந்தேவர்களையும் சிருஷ்டித்தார். அன்றியும், பிரகிருதியின் கல்மஷாமிசத்தினுலே, காதுகளினின்றும் மதுகைடவரென்கிற இரண்டு அஸுரர்களைச் சிருஷ்டித்தார். அவர்கள் பல பராக்கிரமங்களின் மிகுதியினுற் செருக்கடைந்து வேதங்களைக் கவர்ந்துபோனுர்கள். அப்போது அந்தப் பகவான் நெடுநாள் அவ்வஸுரரோடு போர்செய்து ஸம்ஹரித்தவர்கள் கேட்டவரத்தின்படி அவர்களுடைய தேகங்களிலிருந்து பெருகித்தோய்ந்த மேதஸ் என்கிற கொழுப்பினுலே மேதினி என்கிற பேரோடுங்கூடிய இப்பூமியை யுண்டாக்கி மறுபடியும் பிர்மனுக்கு வேதங்களை யுபதேசித்தார். இவ்வாறுக அந்தந்த தேவர் முதலிய பேர்களிடத்திலுந்தான் அந்தந்த அமிசத்தினுற் பிரவேசித்து, சிருஷ்டி, ஸ்திதி, ஸம்ஹாரங்களென்னும் முத்தொழில்களை நடாத்தினுர். இவ்வவதாரத்திற்குப் பவுஷ்கரப்பிராதுர்ப்பாவமென்று பெயர். இந்த ஸ்ரீ கிருஷ்ணமூர்த்தியின் ஸத்கிருத்திய மகிமைகளை அறியத்தக்க புத்தி சக்தியை அந்த துராத்மாவாகிய சிசுபாலனும், அவனையொத்த மற்றவர்களும் பெறவில்லை. அதனுல் அவரை வாய்க்குவந்தமட்டும் பேசினுர்கள். ஏசினுர்கள். சூரியன் மிகப்பெரிதாயிருந்து

ஒளியை வீசியும் அதன் இருப்பைக் குருடன் அறிகிறதில்லே. அது போல் பெரியோர்களின் மகிமையை மதியீனர்கள் அறிய வழியற்று மதிமயங்கி நிற்கிருர்கள். வெகு தூரத்திலிருக்கும் புஷ்பத்தின் வாஸனையை வண்டுகள் எப்படியோ அறிந்து செல்லுகின்றன. அது போல் புத்திமான்கள் தக்க பெரியோர்களின் கூட்டுறவைத் தேடித் திரிந்து ஸம்பாதித்துக்கொள்ளுகிருர்கள். பெரியோர்களுக்குரிய பூஷணம் பொறுமையாகவிருக்கின்றது. ஆதலின், அவர்கள் தங்களைப் பிறர் நிந்திக்குமிடத்தும் தாம் பொறுமையோடிருப்பதே நன்றென நினைக்கிருர்கள். ஒருவன் பொறுமையென்னும் குணத்தை வகித்தால், யாதொரு இடையூறுமின்றி வாழக்கூடும். நம்மைவிட உயர்ந்தவர்கள் நம்மை நிந்தித்தால், நம்மிடம் ஏதோ குறை உளதென்றெண்ணி அதை நிவர்த்திக்க வழிதேடவேண்டும். நம்மைவிடத் தாழ்ந்தவர்கள் நம்மை நிந்தித்தால், அதை ஒருபொருட்டாக எண்ணுமல் மறுமொழியும் சொல்லாமல் சும்மாவிருப்பது மிகவும் நலம். அதற்கு, மேலே சொன்ன ஸ்ரீ கிருஷ்ணமூர்த்தியே போதுமான திருஷ்டாந்தமாயிருக்கிருர். நிற்க, கனவான்களே! ஆரியக்கூத்தாடினுலும் காரியத்தில் கண்ணுயிருக்கவேண்டுமென்பது நம்மவர் கூறும் பழமொழிகளில் ஒன்று. அப்படியிருக்க, தேச க்ஷேமங்களைப்பற்றி எழுதத்துவக்கின வியாஸமானது ஒவ்வொரு காரணங்களால் என்மனஸை சாஸ்திரவழிகளிலும் புராணவழிகளிலும் இதுவரைப் பிரவேசிக்கச் செய்துவிட்டது. ஆகவே, இனி பொருள்விளைவிக்கும் வழியைப்பற்றிக் கொஞ்சம் பேசவேண்டியதுண்டு. இவ்விந்தியாவானது வியவஸாயத்தொழிலால் மேம்பாடு அடைந்திருக்கிறதென்பதை யாவரும் அறிந்தேயிருக்கிருேம். லார்ட் கர்ஸனுடைய கணக்குப்படி நூற்றுக்கு எண்பதுவிகித ஜனங்கள் வியவஸாயத்தொழிலால் ஆதரிக்கப்படுகிருர்களெனத் தெரியவருகின்றது. ஆகவே, நாம் வியவஸாய சாஸ்திரஞானத்தைப் பெறவேண்டியது மிகவும் அவசியம். அதனுல் பூச்சி வகையராக்கள் பயிர்களை அழிக்காதபடிக் காப்பாற்றிக்கொள்ளலாம். அன்றியும், வியவஸாயத்தொழிலின் நவீனமுறைகளையும் கற்றுக்கொள்ளலாம். மிஸ்டர் வித்தல்தாஸ் தாமோதர்தாக்கர்ஸே அவர்கள் சுதேசியத் தூண்டலானது தன்னுல் கூடியமட்டில் பெருத்த லாபத்தைத் தரும்படியாக சாஸ்திரமுறைமையை வியவஸாயத்தில் நுழைத்துவிடப் பெரும்பூபதிகளைக் கிளப்பிவிடுமானுல் அப்போது நம் நாட்டவரால் பெருந்தொழில் முயற்சிகளைப் பணம்போட்டு நடத்தி வேலைசெய்துவர நாம் காணலாமென்

றும், நமது நித்திய ஜீவனார்த்த ஸ்தானத்துக்குப் பெரும்முயற்சிகளின் விளைவு தூரத்திலுள்ளதென்று உத்தேசிப்பது பெருந் தவறுகுமென்றும், வியவ்ஸாய ஸம்மந்தத்தில் சுதேசீயவிருத்தியைப்பற்றிப் பேசுவாரில்லை யானாலும் உண்மையில் உண்மையான சுதேசீயமுயற்சியின் ஸம்மந்தத்தை முக்கியமாய் வேண்டுவது வியவஸாயத்தொழிலே யாகுமென்றும், ஏனெனில், மற்றத் தொழில் முயற்சிகளுக்கு இதுவே ஆதாரமென்றும், மேல் இந்தியாவில் இயந்திரத்தொழில் விருத்தியடைகிறதற்குக் காரணம் இந்தியாவில் குஜராத்தியார் மேலான திறனுடைய வியவஸாயிகளென யாவராலும் ஒப்புக்கொள்ளப்பட்டதே யாகுமென்றும் எடுத்துச்சொல்லி யிருக்கிறார். சென்னை ஸென்ட்ரல் அக்ரிகல்சுரல் கம்மிட்டியார் அடிக்கடி தாங்கள் வெளியிடும் ஸர்க்குலர்களில் வியவஸாய ஸம்மந்தமான அரிய நுட்பங்களை வெளிப்படுத்தி வருகிறார்களாம். அக்கம்மிட்டியார் செய்துவரும் வேலைகளை நாம் எவ்வளவு உயர்த்திப்பேசினாலும் தகுமென்பது கனம், ஸ்ரீ. ஜி. சுப்பிரமணிய அய்யர் அவர்களின் அபிப்பிராயம். அந்தக்கம்மிட்டியார் இப்போது அச்சிட்டு வெளியாக்கியிருக்கும் ஸர்க்குலரில் திருநெல்வேலி ஜில்லாவில் இரும்புக்கலப்பை உபயோகத்திற்குக் கொண்டுவரப்பட்டிருப்பதைப்பற்றியும், நாத்து நடுகையைப்பற்றியும் விசேஷமாய்க் குறிப்பிட்டு எழுதியிருக்கிறார்களாம். ஆனதால், அவர்களால் வெளியிடப்பட்டிருக்கும் ஸர்க்குலரை வியவஸாயிகள் கவனிக்கவேண்டியது மிகவும் அவசியம். பலதலைமுறையாய் ஒரேமாதிரியாக நிலங்களைப் பயிரிடப்பழகி யுள்ள வியவஸாயிகள் அப்புதுமாதிரிகளை எளிதில் அங்கீகரிக்கமாட்டார்களென்பது தெரிந்து அந்தக் கம்மிட்டியார் எந்தத்திருத்தம் செய்யப்பட்டாலும் அந்தத்திருத்தத்தையனுஸரித்து நாம் வியவஸாயிகளுக்கு வேலைசெய்து காட்டவேண்டியது அவசியமென்று சொல்லுகிறார்களாம். நாற்றங்கால்களிலே நாற்றைப்பாவிப்பிடுங்கி இடைவெளிவிட்டு நடுவதில் நான்கு அல்லது ஐந்து நாற்றுக்களைச்சேர்த்து நடாமல் ஒருநாற்றை நடுவதே சிலாக்கியமென்று ஸர்க்குலரில் கூறப்படுகிறதாம். ஒருநாற்றுப் பிடுங்கி வைத்து நடப்படுமானல் அது அழுகியாவது காய்ந்தாவது போகுமென்றும், அதிகக் களை பிடுங்கவேண்டியதா யிருக்குமென்றும், அவைகளைப் பூச்சி, புழுக்கள் எளிதா யரித்துவிடுமென்றும், பயிர் நோய்கொண்டுபோகுமென்றும் சொல்லப்படுவதெல்லாம் ஸரியில்லையென்று அந்த ஸர்க்குலரில் சொல்லப்பட்டிருக்கிறதாம். ஆகவே, வியவஸாயிகள் ஒரே ஒருநாற்றைக் கிள்ளிவைத்து நடும் வழக்கத்தை

சீக்கிரம் பழக்கமாக்கிக்கொள்ளவேண்டும். நமதுதேசத்தில் சீதோஷ்ணங்களுக்குத்தக்கபடி பூமியின்தன்மை ஒவ்வொருவிடங்களிலும் ஒவ்வொருவிதமாக ஏற்பட்டிருக்கின்றது. இந்தியாவில் தினை, சாமை, பயறு, காராமணி, துவரை, கடலை முதலிய நவதான்யங்களும், எள்ளு, ஆமணக்கு முதலிய எண்ணைவித்துக்களும் எங்கும் விசேஷமாய் விளைகின்றன. வடக்கேயுள்ள ஸிந்துநதிப் பாசானமாகிய பஞ்சாப்என்னும் பஞ்சவடிதீரத்தில், கோதுமை முதலிய ஐரோப்பிய தான்யங்களும், வங்காளத்தில் நெல் முதலிய இந்திய தான்யங்களும் ஜாஸ்தியாகப் பயிர் செய்யப்படுகின்றனவாம். டில்லியென்னும் ஹஸ்தினபுரம் முதல் பாட்னவென்னும் பாடலிபுரம் வரையில் மேற்சொல்லிய இருவகைத் தான்யங்களும் பயிராகின்றன. ஆயினும், பஞ்சாப் தேசத்திலுள்ள பயிர்களே விசேஷமெனத் தெரியவருகின்றது. அயோத்தி, பிரயாகை முதலிய ஐக்கிய மாகாணங்களில் கரும்புப்பயிர் மிகுதியாகச் செய்யப்படுகின்றது. அவுரி, சணல், பேரீந்தாகியவைகள் வங்காளத்திலும் அபினி வடமேற்கு ஐக்கியமாகாணத்திலும் மேல் வங்காளத்திலும் பயிர் செய்யப்படுகின்றன. மத்திய இந்தியாவாகிய வடபம்பாயில் சிவப்புக்கோதுமைவிளைகின்றது. அவ்விடத்துப் பூமியானது பருத்தி விளைவதற்கேற்ற விசேஷமான கருப்புப்பூமியாகவிருக்கின்றது. தென் இந்தியாவில் சீதளபூமிக்குரிய தான்யங்கள் அதிகமாய்ப் பயிர் செய்யப்படுகிறதில்லை. பூமியின் பள்ளத்தாக்குகளில் நெல், தெங்கு, கரும்பு, பனையாகியவைகள் பயிராகின்றன. காபி, தேயிலை, ஸின்கோனவென்றக்வைனச்செடி, வாஸனைத்திரவியங்களாகியவைகள் மலைப்பிரதேசங்களில் பயிராகின்றன. சில காடுகளில் நீர்ப்பாய்ச்சல் மிகக் குறைவாகவிருக்கும். அவைகளிலுள்ள ஆடுமாடுகள் மிகவும் செழித்து வளர்கின்றன. பாலை வனத்தோரமாயுள்ள ஸ்வதேசம்முதல் காச்மீரம்வரையுள்ள பிரதேசத்தில் ஆடுமாடுகள் கோடிக்கணக்காகவுண்டு. மழை யதிகமான நாடுகளில் ஆடுமாடுகள் அவ்வளவு அதிகமாய் விருத்தியாகிறதில்லை. நீர் தாழ்ந்த பூமிகளாகிய கீழ் வங்காளம், பர்மாவாகிய நாடுகளில் ஆடுமாடுகள் மிகவும் அருமையாக விருக்கின்றன. அவைகளுக்கு நீர்ச்சுரப்புள்ள பூமி ஒத்துக்கொள்ளுகிறதில்லையாம். அந்நாடுகளில் எருமைகள் மட்டும் உண்டு. இத்தேயத்தின் வடபாகத்திலும் மேற்பாகத்திலும் கோதுமைப் பயிராகின்றது. பஞ்சாப்பில் கோதுமைவிளைவு மிகுதி. அவ்விடத்து நிலங்களில் மூன்றில் ஒருபங்கு கோதுமையேப் பயிர் செய்யப்படுகின்றது. அயோத்தியை முதலான ஐக்கிய மாகாணங்க

ளில் கோதுமைப்பயிராகும்நிலம் அதிகமாக விருப்பினும் பஞ்சாப்பைப்போல் அவ்வளவு அதிகமாய் அது பயிர்செய்யப்படுகிறதில்லை. மத்தியமாகாணங்களில் கால்பங்குநிலம் கோதுமைப் பயிராகின்றது. பம்பாயிலும் ஸிந்துதேசத்திலும் பத்திலொருபங்கு. பேஹார் என்னும் விராட ராஜ்யத்திலும் கங்காநதிக்குத் தென்புறமாயுள்ள வங்காளத்து ஜில்லாக்களிலும்கூட கோதுமை விளைகின்றது. அமெரிக்காக்கண்டத்து ஐக்கியமாகாணங்களில் எவ்வளவுநிலத்தில் கோதுமைப்பயிர் செய்யப்படுகின்றதோ, அவ்வளவுநிலத்தில் இந்தியாவிலும் பயிர் செய்யப்படுகின்றது. இக்கோதுமையானது ஐரோப்பியருக்குரிய பயிராகும். இந்தியாவில் மேற்குக்கரையிலும் பெரியநதிகளின் முகத்துவாரங்களையடுத்த நிலங்களிலும் நெல் முக்கியமாய்ப் பயிராகின்றது. பர்மாதேசத்துத் தென்புறத்துப் பள்ளத்தாக்குக்களிலுள்ள வியவஸாயநிலங்களில் நூற்றுக்குத் தொண்ணூறுபங்கு நெற்பயிரே. பங்காளத்திலும் விசேஷம். அஸாம், ஒரிஸ்ஸா தேசங்களிலும், கோதாவரி, கிருஷ்ணு, பெண்ணை, காவேரியாகிய நதிகள் பாயுமிடங்களிலும், திருவாங்கூர், மலையாளம், கன்னடம், கொங்கணமாகிய இத்தேசங்களின் பள்ளத்தாக்குக்களிலும் நெற்பயிரே முக்கியமானவிளைவு. அயோத்தியா வைக்கியமாகாணங்களில் வியவஸாயத்திற்குள்ளான நிலத்தில் ஆறிலொருபங்கு நெற்பயிர். இந்தியாவின் மற்றப்பாகங்களில் நெல் அவ்வளவு விசேஷமானதன்று. ஆயினும், ஸாத்தியமான விடங்களிலெல்லாம் நெற்பயிர் செய்கிறார்கள். பர்மாஅரிசி பழுப்புநிறமானது. பருக்கனானது. ஆண்டுக்கு ஒருபோகமே விளையும். ஏகராவுக்குச் சராசரி 25 முதல் 30மணங்கு ஆகும். அதனைவிட வங்காளத்துஅரிசி மேன்மையானது. இது ஸராஸரி 15 மணங்கு காணும். புழுக்கினநெல்தான் வங்காளத்திலிருந்து ஏற்றுமதியாகின்றது. பாடலிபுரத்து அரிசியானது சிறியமணியாயும் வெண்ணிறமாயுமிருப்பதால், அது ஐரோப்பாவில் மிகுந்த மதிப்பைப் பெறுகின்றது. அதையொத்த அரிசியானது தென்னிந்தியாவில் நெல்லூர், தஞ்சாவூர், திருநெல்வேலியாகிய ஜில்லாக்களில் விளைகின்றது. இந்தியாவிலெங்கும் எண்ணைவித்துக்கள் உண்டு. கங்காநதிக்கரையிலும் பிர்மபுத்திராநதிக்கரையிலும் மற்றப் பயிர்களோடுபயிர்களாய் இடையிடையே அவற்றைப் பயிரிடுகிறார்கள். வங்காளத்திலும் வடமேற்கிலும் முக்கியமானவை, கடுகு, எள்ளு, ஆளிவிதை, குஸும்பா, ஆமணக்கு, நிலக்கடலை முதலியவைகளாம். மஞ்சக்குப்பம் ஜில்லாவில் நிலக்கடலை மிகுதி. தேசமெங்கும் கரும்பு விளைகிறதாகவிருந்

